அபிராமபட்டர்

அருளிய

அபிராமியந்தாதி

மூலமும் உரையும்

★

உரையாசிரியர் :
கருப்பக்கிளர்
சு அ இராமசாமிப் புலவர்

★

கழக வெளியீடு

கழக வெளியீடு : [illegible]

அபிராமபட்டர் அருளிய

அபிராமியந்தாதி

மூலமும் உரையும்

★

உரையாசிரியர் :

கருப்பக்கிளர் சு அ இராமசாமிப் புலவர்

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

1975

சுப்பிரமணிய அருட்டிரு சதாசிவ இராமசாமிப் புலவர் (1907)

Branches :

Tirunelveli-6 Madurai-1 Coimbatore-1
Kumbakonam Tiruchirappalli-2

Ed 1 Jan 1966
Reprints: July 1972; May 1975

O31,1L11,A
N75

ABIRAMIANDADHI
Moolamum Vuraiyum

Appar Achakam, Madras-1. (I/2)

பதிப்புரை

உலகில் மெய்யடியார்கள் சிற்சில காலங்களில் அருமையாகத் தோன்றுகிறார்கள். தோன்றிய அவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி என்னும் மூன்றையும் இறைவனுக்கே உரிமையாக்கிவிட்டு அவனருளைப் பெற விரும்பி அவனை இடைவிடாது நினைத்தும், வாழ்த்தியும், வணங்கியும் வழிபாடு செய்துவர லாயினர்.

அம் மெய்யடியார்கள் இறைவனை வாழ்த்திய வாழ்த்துப் பாடல்கள் அவர்களுக்கே யன்றித் தம்மைப் பயில்வார்க்கும் இறைவனருளைக் கூட்டுவிக்கும் தகைமையுடையனவாக உள்ளன. தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம் முதலியன அத்தகைமை சான்ற மாண்புமிக்க பெரு நூல்களாகும்.

அபிராமி அந்தாதி என்னும் இந் நூல் தவத்திரு. அபிராமபட்டர் என்பவர் இறைவியை வாழ்த்திய வாழ்த்துப் பாடல்களைக் கொண்டதொரு நூலாகும். இறைவியின் அருளைப்பெற விழைவோர் இந் நூலை மெய்யன்போடு நாள்தோறும் ஓதி வருவாராயின் அவ் வம்பிகையின் திருவருளை எய்துவது திண்ணம்.

அந்தாதி என்பது ஒருபாட்டின் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சீர், அடி என்னும் நான்கனுள் ஏதேனும் ஒன்று அடுத்த பாட்டிற்கு ஆதியாக அமையுமாறு பாடப் பெறுவது. இந் நூலில் உள்ள நூறு பாக்களும் அந்தாதியாக அமைந்திருத்தலும், இறுதிப் பாடலின் இறுதிச்சீர் முதற் பாட்டின் முதற்சீராக அமைந்திருத்தலுங் காண்க.

இந் நூலைப் பயில்வாரனைவரும் உள்ளத் தூய்மையும், வாழ்க்கை நலமும், இம்மையில் பெரும்புகழும், மறுமையில் இன்பமும், வீடுபேறும் எய்துவர். நாட்டினுக்கு நலம்புரியும் பேற்றினையும் அடைவர்.

இந் நூலின் அருமை பெருமைகளை எண்ணியும், தமிழ் பயிலும் அனைவர்க்கும் இது பயன்பட வேண்டுமென விரும்பியும் தகுந்த உரையுடன் இதனை வெளியிடலானேம்.

இந் நூலை அனைவரும் வாங்கிப் பயின்று நலம் பெறுவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

நூலாசிரியர் வரலாறு

அபிராமி யந்தாதியைப் பாடியருளிய அபிராமபட்டர் என்பவர், சோழநாட்டிலே திருக்கடவூரிலே சிவநெறி அந்தணர் குலத்திலே தோன்றினார். காலக் கணிதத்தை நன்கு பயின்ற இவர் தஞ்சை சரபோஜி மன்னனிடத்திலே சோதிடஞ் சொல்லுந் தொழிலை மேற்கொண்டிருந்தார். இவரும் இவருடைய வழிமுறையினரும் திருக்கடவூரில் எழுந்தருளிய அபிராமியம்மைமீது பேரன்பு கொண்டு விளங்கினர். அபிராமியம்மையை நாளும் வழிபடும் தொண்டு பூண்ட இவர் அம்மையை உன்னி ஒடுக்கம் புரியும் ஒருமை யுணர்வில் தலை நின்றவரானார். இவர்பால் பொறாமையுற்ற சிலர் இவர் ஊனும் கள்ளும் உண்டு மன மயக்க முற்றார் என்று பலரிடமும் கூறிவந்தனர். அவ்வாறே அரசனிடமும் கோள்மூட்டினர். அபிராமபட்டர் அறிவுநிலை திரிந்துள்ள சமயம் பார்த்து அவரைத் தன்னிடம் அழைத்து வருமாறு ஏற்பாடு செய்தான் அரசன்.

பட்டர் அறிவு திரிந்திருந்த சமயம் பார்த்துச் சிலர் பட்டரை அழைத்துப் போய் அரசன் முன்பு நிறுத்தினர். பட்டர் அறிவு திரிந்துள்ளார் என்பதை அரசன் அறிந்து கொண்டான். அவன் உடனே பட்டரைப் பார்த்து, "இற்றை நாளின் ஐந்துறுப்புகளை (பஞ்சாங் கத்தை)க் கூறும்" என்று சொன்னான். மறுநாள் மதி யின் முழு மறைவு (அமாவாசை) நாள். ஆனால், அறிவு திரிந்திருந்த அபிராமபட்டர் மறுநாள் முழுத்திங்கள் நாள் (பௌர்ணமி) என்று கூறிவிட்டார். அரசன் உடனே தன் சபையில் இருந்த பலரையும் சாட்சி வைத்தான். பிறகு அபிராமபட்டரைப் பார்த்து "நாளைக்குக் கதிரவன் மறைந்தவுடன் கிழக்குத் திக்கிலே முழுமதி தோன்றுதல் வேண்டும். அவ்வாறு தோன்றுதொழியில் உன்னை என் னுடைய வாட்படைக்கு இரையாக்கிவிடுவேன். நான் அந்தணனைக் கொன்றுவிட்டேன் என்று உலகினர் யாது

கூறினும் கூறுக. அதனை நான் ஒரு பொருட்படுத்த மாட்டேன்", என்று மிகுந்த கடுஞ்சினத்துடன் கூறினன்.

அபிராமபட்டர் தம்முடைய தவற்றினை எண்ணி மனம் வருந்தினர். வாளைக்கொண்டு அரசன் நம்மைக் கொலை புரிவதற்கு முன் நாம் நம்முடைய வழிபடு கடவுளாகிய அபிராமியின் தாளைப்போற்றி நாளைக்குத் திங்கள் தோன்றுமாறு வேண்டுவோம்; அவ்வாறு தோன்றுவிடினை உலகம் அறிய இறந்தொழிவோம் என்று முடிவு செய்தார். மறுநாள் ஒரு பெரிய தீக்குழியை உண்டாக்கினர். நூறு கால்களோடு கூடிய ஒற்றைவார் உறியொன்றை அமைத்துத் தாம் அந்த உறியின மேலடுக்கில் அமர்ந்து இறைவியைப் போற்றிப் பாடத் தொடங்கினர். கிழக்குத் திக்கில் கதிரவனும் தோன்றினன்.

"உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமதோய மென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி யென்றன் விழுத்துணையே"

என்பது முதலாவது பாட்டு. ஒவ்வொரு பாட்டும் முடியுந்தோறும் உறியின் அடுக்கு ஒன்றைச் சேதித்துக்கொண்டே சென்றார். செய்யுள்கள் தொண்ணூற்றொன்பது முடிந்தன. உறியின் கால்களுள் தொண்ணூற்றொன்பது சேதிக்கப்பட்டு ஒன்று மட்டும் எஞ்சி நின்றது. அபிராமிதேவி அதுவரையிலும் தோன்றவில்லை.

அபிராமபட்டருக்குக் கவலை மிகுதியாயிற்று. இறைவி அருள் புரியாள் போலும். அரசனுடைய வாளால் மாய்தலை விட ஈண்டுத் தீயில் வீழ்ந்து மாய்தலே சிறந்தது என்று முடிவு செய்தார்.

"குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்பு வில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணு நெஞ்சிலெப் போதும் உதிக்
கின்றவே"

என்னும் இறுதிப் பாட்டையும் பாடி முடித்து உறியின் இறுதிக் காலையும் கொய்தார். அவர் தீயில் விழுமுன் அபிராமியம்மை தோன்றினாள். தன் கைகளை நீட்டிப் பட்டரைப் பற்றித் தரையில் விட்டாள். விண்ணவர் மலர் மாரி பெய்தனர். தேவியின் திருவடிகளைப் பட்டர் வணங்கிப் போற்றினார். தேவி பட்டரைப் பார்த்து "அஞ்சாதே" என்று அடைக்கலங் கொடுத்தருளினாள். தனது இடக் காதில் அணிந்திருந்த குண்டலத்தை வலக் கையால் வாங்கிக் கிழக்குத் திக்கில் வீசினாள். அக்குண்டலம் திங்கள் தோன்ற வேண்டிய இடத்திற்குச் சென்று திங்களைப்போல் விளங்கி நின்றது. அமாவாசை நாளில் திங்கள் தோன்றி விளங்குதலைக் கண்டு உலகினர் பெருவியப்பு அடைந்தனர். சிலர் இஃதோர் இந்திரசாலம் என்றனர்.

சரபோஜி மன்னன் திங்கள் தோன்றியதைக் கண்டு திகைப்படைந்தான். அபிராமபட்டர் இடத்திலே தெய்வத் திருவருள் மிகுதியாக அமைந்திருக்கிறது. நாம் இதனை நன்குணர்ந்து கொள்ளாமற் போனோமே என்று உள்ளங் கலங்கினான். "பட்டர் யாண்டுளார்?" என்று உசாவிக் கொண்டு பட்டரைத் தேடி யோடினான். வெட்டிக் கொலை செய்துவிடுவதாகக் கூறிய நமக்கு எத்தகைய துன்பமும் ஏற்படாமல் இருக்கவேண்டுமே என்னும் கலக்கம் அரச னுக்குப் பெரிதாயிற்று. அபிராமபட்டரைக் கண்டவுடன் அவர் அடிகளில் முடிபடப் படியில் வீழ்ந்தான். "நான் தங்களுடைய பெருமையை உணர்ந்துகொள்ளாமல் தவறு செய்துவிட்டேன். என் தவற்றினைப் பொறுத்து அருள் புரிய வேண்டும்" என்று கூறி இரங்கி வேண்டினான். அபிராமபட்டர் அரசனுக்கு வாழ்த்துரை கூறினார். "உன்னுடைய சொல்லினால்தான் நான் இறைவியின் திரு வருள் பெற்றுச் சிறப்படைந்தேன்; ஆகையால் உன்னுடைய உள்ளத்திலே சிறிதும் ஐயங் கொள்ளாதே" என்று கூறினார். பிறகு இருவரும் ஒன்றுபட்ட மனத்தினராய் அளவளாவினர். நிகழ்ந்த செயலை எல்லோரும் உணர்ந்து அபிராமபட்டரைப் புகழ்ந்து போற்றினார்கள். இரவு

முழுவதும் இறைவியின் குண்டலத் திங்கள் விளங்கி நின்று மறுநாட்காலையில் மறைந்தது. அரசன் அன்று முதல் அபிராமபட்டருக்கு அடியவனும் நின்று அவருடைய குறிப்பறிந்து ஒழுகினன். அபிராமபட்டர் இயற்றியதாக அபிராமியந்தாதி ஒன்றைத் தவிர வேறு நூல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அபிராமியந்தாதியை மெய்யன்புடன் பாடிப் போற்றுவோர் வேண்டிய வேண்டியாங்கெய்தி இன்புறுகின்றனர்.

அபிராமியந்தாதி

மூலமும் உரையும்

காப்பு

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமேன் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

(இதன் பொருள்) *அமர் கொன்றைத் தாரும் சண்பக மாலையும் சாத்தும் - ஓங்கார வடிவாகப் பொருந்துங் கொன்றை மலர் மாலையையும் சண்பகமலர்மாலையையும் அணிந்தருளும், தில்லை ஊரர் தம் பாகத்து உமை மைந்தனே - திருத்தில்லைக் கூத்தப்பிரானும் அவருடைய இடப்பாகத்தில் திருக்கூத்தைக் கண்டு நின்றருளும் சிவகாமசுந்தரியுமாகிய இருவருக்கும் மூத்த புதல்வரே, கார் அமர் மேனிக் கணபதியே - கருநிறம் பொருந்திய திருமேனியையுடைய ஆனைமுகக்கடவுளே, ஏழு உலகும் பெற்ற சீர் அபிராமியந்தாதி - ஏழுலகங்களையும் கருவுருதுயிர்த்தருளிய சிறப்பையுடைய அபிராமிதேவியின்மீது தமியேன் பாடத்தொடங்கும் அந்தாதியின் பொருள், என் சிந்தையுள்ளே எப்போதும் நிற்கக் கட்டுரை - எனது மனத்தின் கண்ணே எப்பொழுதும் நிலைபெறும்படி சிறப்புக் கொடுத்தருள்க என்றவாறு.*

(குறிப்புரை) *மாலைகளிரண்டையுஞ் சிவம் சத்தியாகிய இருவருக்கும் நிரனிறைவகையாற் கொள்க. சண்பகப் பூமாலை சிறந்த கிழமைத்தாதலைச் சண்பகப்பூங்கோதை, சண்பகவல்லி*

என்னுந் தேவி திருப்பெயர்களானும், சைவபுராணங்களானும் அறிக. கொன்றை, சண்பகம், அந்தாதி என்பன ஆகுபெயர். ஏழும் என்னும் உம்மையை எச்சவும்மையாக்கி ஏனைய வுலகங்களையுந் தழுவிக்கொள்க. பொருளென்றது தேவியின் பெரிய வடிவ இலக்கணங்களை. அந்தாதி, நின்ற செய்யுளின் அந்தம் வருஞ்செய்யுட்கு ஆதியாகத் தொடுக்கப்படுவது. அது, எழுத்து அசை சீர் முதலியவற்றாற் பலதிறப்படுதலை யாப்பிலக்கணத்துட் காண்க.

கொன்றைமாலை சிவபெருமானுக்குத் திருவடையாளமாலை யாகலின், அதனை முதற்கட் டந்து, தாரமர் கொன்றையென விதந்தும், தில்லை என்றும் நிலைபெற்றதாகிய ஐந்தொழில் திருக்கூத்தோடும் ஆயிரத்தெட்டுக் கலைகளோடும் எழுந்தருளி யிருக்கும் மூல இடமாகிய சிற்றம்பலம் பழம்பதியாதலானும், அங்கெழுந்தருளியிருக்கும் கூத்தப்பிரான் துரியமூர்த்தியும், அப்பெருமான் இடப்பாகத்துள்ள சத்தி பராசத்தியுமாகலானும் தில்லையூரர்தம் பாகத்து உமையெனவும், ஆனைமுகக்கடவுள் அவ்விருவருக்கும் முதல் மகனாகலின், மைந்தனே எனவும், அட்டவித்தியேசுரர் முதலிய சிவகண பேதங்கட்கெல்லாம் அதிபதியாகலின், கணபதியே யெனவும், அபிராமிதேவி எல்லா உலகங்களையுந் தோற்றுவிப்பவளாகலின், உலகேழும் பெற்ற சீரபிராமியெனவும், அத் தேவிமீது தாம் புனையப்புகும் அந்தாதி யின் பொருள், தம் உழப்பிழப்பு என்னும் இருகாலங்களினும் தம் எண்ணுதற் பொருளாயிருக்கும் வரந்தந்தருளுக என்பார் அந்தாதி யெப்போதுமென் சிந்தையுள்ளே நிற்கக் கட்டுரை எனவுங் கூறினர். உழப்புக்காலம் தம் வசமுடைய முயற்சிக் காலம். இழப்புக்காலம் அஃதிழந்த காலம்.

கணபதியே, அபிராமியந்தாதிப் பொருள் எக்காலமும் என் மனப் பொருளாயிருக்குமாறு வரந் தந்தருளுமெனவே, இவ் வந்தாதியை அன்போடு படிப்போர் கேட்போருக்கும் அங்ஙனம் வரமீந்தருளுக என ஆசிரியர் வேண்டிக்கொண்டமை தானே போதருமென்க.

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக மூணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே.

(இ - ள்.) உதிக்கின்ற செங்கதிர் - தோன்றுகின்ற செவ்விய இளஞாயிறும், உச்சித் திலகம் - உயர்வாகிய மஞ்சாடி மலரும், உணர்வு உடையோர் மதிக்கின்ற மாணிக்கம் - ஆராய்ச்சியுணர்வுடையார் நன்கு மதிக்கின்ற மாணிக்க மணியும், மாதுளம் போது - மாதுளமலரும், மின் கொடி - மின்னற் கொடியும், மென்கடிக் குங்கும தோயம் என்ன - மென்மையாகிய மணம் பொருந்திய குங்குமக்குழம்பும் போல, விதிக்கின்ற மேனி - நூல்கள் விதிக்கின்ற சிவந்த திருமேனியை யுடைய, மலர்க்கமலை துதிக்கின்ற - செந்தாமரைமலரில் எழுந்தருளியவளாகிய திருமகள் போற்றுகின்ற, அபிராமி என் விழுத் துணை - அபிராமிதேவி என் உயிர்த்துணையாம், எ - று.

(கு - ரை.) திலகம்: ஆகுபெயர். விழுத்துணை - சிறந்த துணை. தேவிக்குச் செந்நிறம் நூல்கள் விதிக்கின்றதை, "கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை, வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச், செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை, நம்பியென் னுள்ளே நயந்துவைத் தேனே" என்னும் திருமந்திரத்தானுமறிக. (க)

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.

(இ - ள்.) பனிமலர்ப் பூங்கணையும் - குளிர்ச்சி பொருந்திய மலர்க்கணைகளும், கருப்புச் சிலையும் - கரும்பு வில்லும், மென் பாச அங்குசமும் - மெல்லிய கயிறும் தோட்டியும், கையில் அணையும் திரிபுர சுந்தரி - திருக்கைகளிற் பொருந்தப் பெறும்

திரிபுரசுந்தரியாகிய அபிராமிதேவி, துணையும் - எமக்குயிர்த் துணையும், தொழும் தெய்வமும் - வழிபடு கடவுளும், பெற்ற தாயும் - எம்மைப் பெற்ற நற்றாயும், சுருதிகளின் பணையும் - மறையாகிய மரங்களின் கிளைகளும், கொழுந்தும் - அவற்றின் கொழுந்துகளும், பதிகொண்ட வேரும் ஆவது - அவற்றின் பதியுந் தன்மையைக் கொண்ட மூலவேரும் ஆதலை, அறிந்தனம் - யாம் திருவருள்வாயிலாக அறிந்துகொண்டோம், எ - று.

(கு - ரை.) எண்ணுப்மைகளுள் முன்னைய ஆறும் ஆவது என்னும் ஆக்கத்தையும், பின்னைய மூன்றும் அவ்வாக்கத்தின் எழுவாயாகிய திரிபுர சுந்தரியையும் சிறப்பித்து இரு பிரிவினவாய் நின்றன. முப்புர ஆழிக்கு அதிதெய்வமாகலின் அபிராமிதேவியைத் திரிபுரசுந்தரி என்றார். அபிராமியெனினும் அழகி யெனினும் ஒக்கும். அபிராமம் - அழகு. சாகை - கிளை. கொழுந்தென்றது உபநிடதங்களை. வேர் என்றது பிரணவத்தை. (உ)

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாத கருமநெஞ்சான்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே.

(இ - ள்.) திருவே - அருட் செல்வியாகிய அபிராமி தேவியே, எவரும் அறியா மறையை அறிந்தேன் - மற்றெவரு மறியாத மறையின் மறைபொருளைத் திருவருள் வாயிலாகத் தமியேன் அறிந்தேன், அறிந்து கொண்டு - அங்ஙனம் அறிந்து கொண்டு, நின் அன்பர் - நின்னுடைய மெய்யன்பர்களது, பெருமை எண்ணாத கரும நெஞ்சால் - பெருமையைப் பொருட்படுத்தாத தீவினையுள்ளத்தால், மறிந்து விழும் நரகுக்கு உறவாய மனிதரைப் பிரிந்தேன் - தலைகீழாய் விழும் நிரயக்குழிக்குத் தொடர்புள்ளவர்களாகிய மனிதர்களது கூட்டுறவை விட்டுப் பிரிந்தேன், அவ்வாறு பிரிந்து வெருவி உனது திருவடிக்கே செறிந்தேன் - பிறவி நோய்க்கஞ்சி நின்னுடைய திருவடிகளுக்கே புகலடைந்தேன், எ - று.

(கு - ரை.) மறை: இரட்டுறமொழிதல். வெருவி என்பதனை ஊசற் பொருள்கோளாகக் கொண்டு பிறிந்தேன் என்பதனோடும் ஒட்டுக.

அபிராமிதேவியே, நின்னுடைய திருவருள் வாயிலாக முதலில் மறையின் உட்பொருளை அறிந்து, இடையில் அதற்கு இடையூறாகிய அறிவிலிகளின் கூட்டுறவை யொழித்து, முடிவில் அதன் பயனாக நின்னுடைய திருவடிகளையே அடைக்கலமாக அடைந்தேன் என்பதாம். (௯)

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

(இ - ள்.) மனிதரும் - மக்களும், தேவரும் - தேவர்களும், மாயாமுனிவரும் - அவ்விருவகையினரும் போல மயங்காத முனிவர்களும், வந்து சென்னி குனிதரும் சேவடிக் கோமளமே - திருமுன்பு வந்து தலையைத் தாழ்த்தி வணங்கும் சிவந்த திருவடிகளையுடைய இளமைச் செவ்விவாய்ந்த அபிராமிதேவியே, கொன்றை வார் சடைமேல் - கொன்றைமாலையை அணிந்த நீண்ட திருச்சடையின்மீது, பனிதரும் திங்களும் - குளிர்ச்சி பொருந்திய இளந்திங்களையும், பாம்பும் - பாம்பையும், பகீரதியும் - கங்கை நீரையும், படைத்த புனிதரும் - தாங்கியருளிய தூய்மையாளராகிய சிவபெருமானும், நீயும் - தூய்மையுடையவளாகிய நீயும், என் புந்தி எந்நாளும் பொருந்துக - தமியேனது மனத்தில் எக்காலத்தும் எண்ணுதற் பொருளாக எழுந்தருளியிருக்க, எ - று.

(கு - ரை.) மாயாமுனிவர் - இறவாமை பெற்ற மார்க்கண்டேயர் முதலிய முனிவர்கள். கோமளம் - மென்மை அழகெனினுமாம் - இளமையென்பாருமுளர். (௰)

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோ

ணருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமேன் சென்னியதே.

(இ - ள்.) பொருந்திய முப்புரை - உயிருக்கு ஆதாரமாகப் பொருந்திய மூவகை உடம்புகளினும் பொருந்தியிருக்கும் திரோதான சத்தியும், செப்பு உரைசெய்யும் புணர்முலையால் வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி - மாணிக்கமணிச் செப்பைப் புலவர் நிகர்சொல்லும் ஈர்க்கிடை புகப்பெறாது தம்முனெருங்கிய பர அபரஞானங்களாகிய இரு திருமுலைகளின் பாரத்தினால் வருந்துகின்ற கொடி போலும் இடையினையுடைய மனோன்மனியும், வார் சடையோன் அருந்திய நஞ்சு அமுது ஆக்கிய அம்பிகை - நீண்ட சடையையுடைய சிவபெருமான் உண்டருளிய நஞ்சைத் தம் திருக்கைகளால் தொட்டு அமுதமாகச் செய்தருளிய உமையும், அந்தரி - சிதாகாசரூபியுமாகிய, சுந்தரி; அபிராமிதேவியினது, அம்புயமேல் திருந்தியபாதம் - செந்தாமரை மலரினும் மேலாக அழகுதிருந்திய திருவடி, என் சென்னியது - தமியேனது தலையின் கண்ணது, எ - று.

(கு - ரை.) மனோன்மனி - மனசின்கண் உன்முகமாயிருப்பவள். உன்முகம் - மேனோக்கம், மனத்தை மெய்யறிவு நிலைக்கு எழுப்புபவள் என்பது பொருள். அந்தரி - மேலான விண்வடிவை யுடையவள். (௫)

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப் பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றமுன் றன்பர மாகம பத்ததியே.

(இ - ள்.) சிந்துர வண்ணப்பெண்ணே - செந்நிறம்பொருந்திய திருமேனியையுடைய அபிராமிதேவியே, உன் திருவடிப் பொன் தாமரை சென்னியது - உன்னுடைய திருவடியாகிய பொற்றாமரைமலர் என் தலைக் கணியாக இருக்கின்றது, உன் திருமந்திரம் சிந்தையுள்ளே மன்னியது - நின்னுடைய திருமூல மந்திரம் தமியேனது மனத்தின் கண்ணே என்னுதற் பொருளாக

நிலைபெற்றிருக்கின்றது, உன் பரம ஆகம பத்தி - நின்னுடைய மேலாகிய ஆகம பத்தி, முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறை என்றும் பன்னியது - நன்கு மதிக்கப்படுகின்ற நின்னுடைய மெய்த் திருத்தொண்டர்களோடு கூடி ஆராய்ச்சி செய்து பலமுறை தமியேனுற் படிக்கப்பட்டது, எ - று.

(கு - ரை.) என்றும் என்பதனை ஏனை இரண்டிடத்தும் கூட்டிப் பொருளுரைத்துக்கொள்க. தாமரை: ஆகுபெயர்.

தமியேனது மனம், வாக்குக், காயமென்னும் முக்கரணங் களும் எப்பொழுதும் நின்னையே வழிபட்டுவரும் என்ப தாம். (ச)

ததியுறு மத்திற் சுழலுமென் ஞாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே.

(இ - ள்.) கமல ஆலயனும் - செந்தாமரைமலரைக் கோயி லாகவுடைய நான்முகனும், மதி உறு வேணி மகிழ்நனும் - இளந் திங்கள் பொருந்துஞ் சடையையுடைய தலைவராகிய சிவபெரு மானும், மாலும் - திருமாலும், என்றும் வணங்கித் துதியுறு சேவடியாய் - எக்காலத்தும் வணங்கிப் போற்றும் சிவந்த திருவடி களையுடையவரே, சிந்துர ஆனன சுந்தரியே - சிந்தூரத் திலகம் பொருந்திய திருமுகத்தையுடைய அபிராமிதேவியே, மத்து உறு ததியில் சுழலும் என் ஆவி - மத்தினுற் கடையப்படும் தயி ரைப்போலப் பிறப்பு இறப்புகளிற் பட்டுச் சுழலுகின்ற தமி யேனது உயிர், தளர்வு இலது ஓர் கதி உறு வண்ணம் கருது - அங்ஙனம் பிறந்திறந்து தளர்வுறுத லிலதாகிய ஒப்பற்ற சிவ கதியை அடையும் வண்ணம் நீ திருவுளங்கொண்டருள், எ - று.

(கு - ரை.) கண்டாய் என்பது முன்னிலையசை.

சிவகதி - வீடுபேறு. "மத்துறு தண்டயி ரிற்புலன் றீக்கது வக்கலங்கி, வித்துறு வேனை விடுதிகண்டாய்" என்றார் பிறரும். "சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்றும்"

என்பவாதலின், மகிழ்நர் வணக்கமும் ஈண்டுக் கூறப்பட்டதென வுய்த்துணர்ந்துகொள்க.

மும்மூர்த்திகளும் வணங்கும் அபிராமிதேவியே, பிறப்பு இறப்புகளிற் பட்டு மூன்று உலகங்களினும் சுழன்று திரியும் தமியேன் மேலான வீடுபேற்றை யடையும்வண்ணம் திருவுளங் கொண்டருளுக என்பதாம். (எ)

சுந்தரி யெந்தை துணைவி யென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி ளுண்மகி டன்றலைமேல்
அந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாண்மலர்த் தாளேன் கருத்தனவே.

(இ - ள்.) என் பாசத் தொடரை எல்லாம் வந்து அரி சிந்துர வண்ணத்தினள் - தீவினையாளனது ஐவகைக் கட்டுகளையும் தாமே யெழுந்தருளிவந்து சேதிக்கின்ற செந்நிறத்தையுடையவளும், மகிடன் தலைமேல் அந்தரி - மகிடாசுரனது தலையின்மீது நின்று அவனுக்கு அந்தரத்தைச் செய்தவளும், நீலி - நீல நிறத்தையுடையவளும், அழியாத கன்னிகை - நித்தியகன்னிகையும், ஆரணத்தோன் கந்தரி கைத்தலத்தாள் - நான்முகனுடைய மண்டையோட்டைத் தாங்கிய திருக்கையையுடையவளும், எந்தை துணைவி - எம் பரம பிதாவாகிய அமுதகடேசரது சத்தியுமாகிய, சுந்தரி தாள் மலர் - அபிராமிதேவியினுடைய திருவடித் தாமரைமலர்கள், என் கருத்தன - தமியேனது எண்ணத்தில் எப்பொழுதும் உள்ளன, எ - று.

(கு - ரை.) பாசத்தொடர்: இருபெயரொட்டுப் பண்புத் தொகை. அரிதல்: இலக்கணை, அந்தரம் - தீமை, என்றது, ஈண்டுக் கொலைத்தீமையை. கம் - தலை. (அ)

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பு
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே.

(இ - ள்.) எந்தைதன் கருத்தன - எம் மேலான தந்தை யாகிய சிவபெருமானுடைய திருவுள்ளத்தின்க ணுள்ளனவும், கண்ணன - அவர் திருக்கண்களு ளுள்ளனவும், கனகவண்ண வெற்பில் பெருத்தன - பொன் வண்ணமாகிய மேருமலையைப் போலப் பருத்தனவும், அழும் பிள்ளைக்குப் பால் நல்கின-தேம்பித் தேம்பி யழுத சீர்காழிப்பிள்ளையாருக்கு ஞானப்பால் கொடுத் தனவுமாகிய, பேர் அருள் கூர் திருத் தனபாரமும் - பேரருள் புரியும் இருதிருத் தனபாரங்களும், ஆரமும் - அவற்றின்மீது தங்கிய முத்துமாலையும், செம் கைச்சிலையும் - சிவந்த திருக்கையிற் பொருந்திய கருப்புவில்லும், அம்பும் - மலர்க்கணைகளும், முருந்து அன முரலும் - மயிலிறகினடிபோலும் திருநகையுமாக, அம்மே- உலகமாதாவே, நீயும் - அபிராமிதேவியாகிய நீயும் எந்தையாகிய சிவபெருமானும், வந்து என்முன் நிற்க - சாங்காலத்தில் எழுந்தருளிவந்து தமியேன் முன் நின்று காட்சி தந்தருளுக, எ - று.

(கு - ரை.) முருந்து முருத்தென எதுகை நோக்கி வலித்தல் விகாரமாயிற்று. நீயுமென்னு மும்மை எச்சவும்மையாகலானும், தேவியை அம்மே என்றதனாலும் உலகத் தந்தையாகிய சிவ பெருமான் என்பது வருவிக்கப்பட்டது. ஏனைய எண்ணும்மைகள்.

உலகமாதாவே நீ உருவத்திருமேனிகொண்டு சிவ பெருமானுடன் தமியேனது மரணகாலத்தில் எழுந்தருளிவந்து காட்சி தந்தருளுக என்பதாம். (க)

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

(இ - ள்.) எழுதா மறையின் ஒன்றும் அரும் பொருளே- எழுதாமறையாகிய மறையின் முடிவிற் பொருந்தும் அறிதற் கரிய பொருளாயுள்ளவளே, அருளே - சிவபெருமானுடைய திரு வருண் மயமாயுள்ளவளே, உமையே - உமாதேவியே, அன்று இமயத்துப் பிறந்தவளே - தாட்சாயணி யென்னும் பெயரை

நீக்கிக்கொள்ள அக்காலத்து இமயமலையிற் குழந்தைவடிவ மாகச் சென்றெழுந்தருளி வளர்ந்தவளே, அழியாமுத்தி ஆனந்தமே - அடைந்தவர் திரும்பிப் பிறவாத வீடுபேற்றின்பமான அபிராமிதேவியே, நின்றும் - தமியேன் நிற்கும்போதும், இருந்தும் - இருக்கும்போதும், கிடந்தும் - கிடக்கும்போதும், நடந்தும் - நடக்கும்போதும், நினைப்பது உன்னை - எண்ணுவது உன்னையே, என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் - எக்காலத்தும் வணக்கஞ் செய்வது நின்னுடைய செந்தாமரை மலர்போலும் திருவடிகளையே, எ - று.

(கு - ரை.) எண்ணும்மைகள் வினையொடு வந்தன ; "வினையொடு வரினுமெண் ணினைய வேற்பன" என்பதனாற் கொள்க. பிரிநிலை ஏகாரங்கள் விகாரத்தாற் றொக்கன. உம் : அசைநிலை.
(௧0)

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தந் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே.

(இ - ள்.) வான் அந்தம் ஆனவடிவு உடையாள் - மண் முதல் விண் வரையுள்ள ஐம்பெரும் பூதங்களைத் தனக்கு வடிவமாகவுடைய அபிராமிதேவியினது, என் ஆனந்தமாய் - தமியேனுக்கு வீடுபேற்றின்பமாகியும், அறிவாய் - பேரறிவாகியும், நிறைந்த அமுதமுமாய் - உள்ளத்தின்கண் நிறைந்த அமுதமுமாகியும், மறை நான்கினுக்கும் தான் அந்தம் ஆன சரண அரவிந்தம் - நான்கு மறைகளுக்கும் தானென்றே முடிவாயுமிருக்கின்ற திருவடித்தாமரைமலர், தவள நிறக் கானம் தம் ஆடு அரங்காம் எம்பிரான்முடிக் கண்ணியது - திருவெண்காட்டைத் தம்முடைய கூத்தியற்றுஞ்சாலை மாத்திரையாகக் கொண்டு திருக்கடவூரில் எழுந்தருளியிருக்கின்ற எம்முடைய அமுதகடேசுவரரது முடிமாலையா யுள்ளது, எ - று.

(கு - ரை) வடிவுடையாளது திருவடித்தாமரை எம்பிரான் முடிக்கண்ணியதெனக் கூட்டுக. திருவெண்காடு சிவபெருமான்

அகோர வீரபத்திரவடிவங்கொண்டு, வடக்கு நோக்கி ஆனவங் கோர நடனந்தொடங்கிய காளிக்கெதிரே தாம் தெற்கு நோக்கி ஒருங்கு நின்று கடுமையான திருக்கூத்துச்செய்து அடக்கிய இடமாகலின், தவளநிறக் கானந்த மாடரங்காம் என்றார். ஈண்டு, எம்பிரானென்றது அமுதகடேசுரரை. கண்ணி - தலையில் அணியும் மாலை.

ஐம்பெரும்பூத வடிவையுடைய அபிராமிதேவியினது திருவடிமலரே அமுதகடேசுவரரது முடிமாலையாயுள்ளது என்பதாம். (கஎ)

கண்ணிய துன்புகழ் கற்றதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன் செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே.

(இ - ள்.) புவி ஏழையும் பூத்தவளே - ஏழுலகங்களையும் பெற்ற உலகமாதாவாகிய அபிராமிதேவியே, கண்ணியது உன் புகழ் - தமியேன் இம்மையிலே எண்ணியது உன்னுடைய திருப்புகழையே, கற்றது உன் நாமம் - தமியேன் படித்தது உன்னுடைய திருப் பெயர்களையே, கசிந்து பத்தி பண்ணியது உன் இருபாத அம்புயத்தில் - தமியேன் மனமுருகி அன்பு செய்தது உன்னுடைய இரண்டு திருவடிகளையே, பகல் இரவு ஆ நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து - தமியேன் பகலுமிரவுமாகப் பழக்கஞ் செய்தது உன்னை விரும்பிய மெய்யடியார்களது சபையின் கண்ணேயே, என் அம்மே நான் முன் செய்த புண்ணியம் ஏது - என் மாதாவே இதற்குத் தமியேன் முன்பிறப்புகளிலே செய்துகொண்ட சிவபுண்ணியம் யாது? அதனைச் சொல்லியருளுதிர், எ - று.

(கு - ரை.) பிரிநிலை ஏகாரங்கள் விகாரத்தாற் றொக்கன. ஆக என்பது ஆ எனக் கடைக்குறைந்து நின்றதொரு செய்யுண் முடிபு.

என் மாதாவே, தமியேன் இம்மையில் இவ்வாறு செய்தமைக்குக் காரணமான சிவபுண்ணியம் இன்னதென்று

சொல்லியருளுதிராயின், இன்னும் அதனையே செய்வேன் என்பதாம். (கஎ)

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.

(இ - ள்.) புவனம் பதினான்கையும் பூத்தவளே - பதினான்கு உலகங்களையும் பெறாது பெற்றவளே, காத்தவளே - அவற்றைப் பாதுகாக்கின்றவளே, பின் பூத்த வண்ணம் கரந்தவளே - பின்பு அவ்வகையே அவற்றை ஒடுக்குபவளே, கறைக் கண்டனுக்கு மூத்தவளே - ஶ்ரீகண்டபரமசிவனுக்கு மூத்தவளே, முகுந்தற்கு என்றும் மூவா இளையவளே - திருமாலுக்கு எக்காலத்தும் மூத்தும் இளையவளுமா யிருப்பவளே, மாத்தவளே - பெரிய தவத்தையுடைய அபிராமிதேவியே, உன்னை அன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே - இச் செய்ந் நன்றிகளை மறந்து நின்னையல்லது, வேறொரு தெய்வத்தை வழிபடலாமா, எ - று.

(கு - ரை.) ஆக்கல் அளித்தல் அழித்தல் முதலிய முத்தொழில்கட்கும் இறைவியின் பேராற்றல்தான் காரணமாக விளங்குகின்றதாகலின், "பூத்தவளே!, காத்தவளே, கரந்தவளே" என்றார். கறைக்கண்டனுக்கு மூத்தமையை, "கனகமார் கவின்செய் மன்றில்" என மேற்காட்டிய பிரமாணத்துள்ளே "தாய்" என்றதனாலுமுணர்க. படைப்பு முறையில், சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவதத்துவமும், அதினின்றும் மகேசுர தத்துவமும், அதினின்றும் சுத்தவித்தியாதத்துவமும் தோன்றினமையின், இங்ஙனம் கூறினார். மேல்வருவனவற்றிற்கும் ஈதொக்கும். செய்யா என்னும் வாய்பாட்டு மூவா என்னும் வினையெச்சம் விளியுருபேற்று நின்ற இளையவள் என்னும் வினைக் குறிப்பு முற்றுப் பெயர் கொண்டது. சிறப்பும்மை வருவிக்கப் பட்டது. (கஅ)

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே

பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே.

(இ - ள்.) எம்பிராட்டி - எம்முடைய தலைவியாகிய அபிராமி தேவியே, உன்னை வந்திப்பவர் வானவர் தானவர் ஆனவர்கள் - உன்னை மனம் வாக்குக் காயமென்னும் முக்கரணங்களாலும் வழிபடுவோர்கள் தேவரும் அசுரருமாகிய இருதிறத்தார்களுமே யாவர், சிந்திப்பவர் நல் திசை முகர் நாரணர் - உன்னைக் குற்றமற்ற மனத்திறேலே எண்ணுபவர்கள், நல்ல நான்கு முகங்களையுடைய நான்முகர்களுந் திருமால்களுமே யாவர், சிந்தையுள் பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் - உன்னைச் சுத்த சைதன்னியமாகிய கயிற்றுன் மனத்தறியிற் பிணிப்பவர் நித்திய சிவானந்தத்தையுடைய சிவயோகிகளே யாவரெனினும், பாரில் உன்னைச் சந்திப்பவர்க்கு நின் தண்ணளி எளிது ஆம் - உன்னை உலகிலுள்ள திருக்கோயில்கள் தோறும் சென்று போற்றும் மனிதர்களாகிய எம்மவர்களுக்கு நின்னுடைய திருவருளைத் தலைக்கூடுதல் எளிதாயிருந்தது. எ - று.

(கு - ரை.) வந்தித்தல் - உடலுறுப்புகளால் வழிபாடு செய்தல்; சிந்தித்தல் - உள்ளத்தின்கண்ணே எண்ணிப் போற்றுதல்; உள்ளே பந்தித்தலாவது இடைவிடாது எக்காலமும் உள்ளத் துள்ளே எண்ணியிருத்தல். ஒன்றற்கொன் றருமையுடைய வந்தித்தல் முதலிய மூவகை வழிபாடுகளையும் முறையே செய்யும் மூவகையினரினும், எளிமையுடைய சந்தித்தற்றொண்டு செய்யும் மனிதர்களாகிய நம்மவர்களுக்கே, உன்னுடைய திருவருள் எளிதிற் கைகூடுவதாயிருந்தது. இஃதொரு வியப்பிருந்தபடி என்னை என்பதாம். (கஃ)

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்தார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே.

(இ - ள்.) பண் அளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே - பண்களுக்கும் இனிமையைக் கொடுக்கும் இனிய

சொற்களையும் இயற்கையாகிய நறுமணத்தையுமுடைய பைங்கிளியாகிய அபிராமிதேவியே, தண்ணளிக்கு என்று முன்னே பல கோடி தவங்கள் செய்தார் - நின்னுடைய தட்பமாகிய திருவருளைப் பெறுவதற்கென்றே முன் பிறப்புக்களிலே பல கோடி தவங்களைச் செய்த மெய்யடியார்கடாம், மண் அளிக்கும் செல்வமோ பெறுவார் - அத் திருவருளான் இம்மையிலே இந்நிலவுலகத்தைப் பாதுகாக்கும் அரசியற் செல்வம் ஒன்றைமட்டுமா பெறுவார்கள், மதி வானவர் தம் விண் அளிக்கும் செல்வமும் - மறுமையிலே நுண்ணறிவுடைய தேவர்களது விண்ணுலகத்தைப் பாதுகாக்கும் பெருஞ் செல்வத்தையும், அழியா முத்தி வீடுமன்றோ (பெறுவார்) - அப்பால் எப்பொழுதும் அழியாததாகிய வீடுபேற்றையுமன்றோ பெறுவார்கள், எ - று.

(கு - ரை.) யாமளைப் பைங்கிளி - யாமளையாகிய பைங்கிளி. யாமளம் - பச்சைநிறம்; யாமளா வேதத்திற் பேசப்பட்டவள் என்பாருமுளர். பண்ணளித்தலாவது சொல்லின் இனிமையால் இசைப் பண்களின் இனிமை தோன்றச் செய்தல்.

நினது திருவருளைப் பெற்றோர் இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றையும் முறையானே ஒருதலையாகப் பெறுவார், என்பதாம். (கஉ)

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரு
மொளியே யொளிரு மொளிக்கிட மேயெண்ணி லொன்று
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே [மில்லா
யளியே னறிவள விற்கள வான ததிசயமே.

(இ - ள்.) கிளியே - பைங்கிளியே, கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும் ஒளியே - நுந்துறவற வுறவினராகிய மெய்யடியார்களது உள்ளத்தின்கண் நுட்பமாய்க் கிடந்து பின்பு வடிவாக விளங்கும் சுத்த அறிவு வடிவமாயிருப்பவளே!, ஒளிரும் ஒளிக்கு இடமே - அங்ஙனம் விளங்கும் அச் சிவசைதன்னியத்திற்கு வீடுபேற்று நிலையில் வேறோர் அறிவுப் பெருஞ் செல்வமாகும் சிவசைதன்னியத்துக்கு ஆதாரமாயிருப்பவளே, எண்ணில் ஒன்றும் இல்லா வெளியே - உண்மையை எண்

ணிப் பார்க்கில் இவற்றுள் ஒன்றும் ஆகாத மேலான வெளியே, வெளி முதல் பூதங்கள் ஆகி விரிந்த அம்மே - அங்ஙனம் மிக நுட்பமாயினும் விண் முதலிய பெரும் பூதங்களாகி விரிந்திருக்கின்ற உலகமாதாவே, அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே - பொய்யடியவனாகிய எளியேனது சிற்றறிவின் எல்லைக்கு உள்ளே அடங்கியிருப்பது எவர்க்கும் வியப்பேயாம், எ - று.

(கு - ரை.) ஒளியைப் போறலின் ஒளியென்றார், கதிரவன் திங்கள் தீ முதலியவற்றின் ஒளிகளும் இறைவியினிடமிருந்தே தோன்றுவதாகலின் 'ஒளிக்கிடமே' என்றார். சைதன்னியம் - அறிவு. ஞானிகளது மனநிகளுக்கு ஒருவாறெட்டியும் எட்டாதும் விரிந்த அம்மையே, நீ என் சிற்றறிவுக்கு எட்டியது எவர்க்கும் வியப்பைத் தருவதாயிற்று. என்பதாம். (௧௪)

அதிசயமான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றேவாம பாகத்தை வவ்வியதே.

(இ - ள்.) அதிசயமான வடிவு உடையாள் - வியக்கத்தக்க திருமேனியையுடையவளும், அரவிந்தம் எல்லாம் துதி ஆனன சுந்தர சயவல்லி - தாமரை மலர்கள் எல்லாம் போற்றுகின்ற திருமுகசுந்தரத்தையுடைய இமயமலைக் கொடியுமாகிய அபிராமி தேவி, துணை இரதி பதி சயமானது அபசயமாக முன் பார்த்தவர் தம் மதி சயமாக அன்றே - தனக்குத் தானே இணையாகிய இரதிக்குத் தலைவனாகிய காமனது வெற்றியானது தோல்வி யடைய, முன்னரே நெற்றிக்கண்ணாற் பார்த்தருளிய சிவபெருமானது அறிவு அழிவை அடையும் பொருட்டாகவன்றே, வாம பாகத்தை வவ்வியது - அவரது வாமபாகத்தைத் தாம் கவர்ந்து கொண்டருளியது, எ - று.

(கு - ரை.) தம் வேலைக்காரனாகிய காமனின் பொருட்டுத் தம் தலைவராகிய சிவபெருமானது அறிவு குன்றும்படி அவரது

இடப்பாகத்தை வெளவிய அபிராமிதேவி தம் அன்பனாகிய தமியேனுக்கு அருள் செய்யாதொழியார் என்பதாம்.

பொற்றாமரைமலரையும் அகப்படுத்துக்கோடற்கு அரவிந்த மெல்லாம் என்றார். சையவல்லி எனற்பாலது சயவல்லி என நிலைமொழிபோலியாய் நின்றது. சையம் - மலை. நான்காமடியிற் சயம் - சீரணம். அது சத்தி குன்றுதல். அன்றோ என்பது பலரறி தேற்றம். தேவிக்கு மன்மதன் வேலைக்காரன் என்பதை; "அறைபெற் றிடுமித் திறமா னவெலா, முறைபெற் றிடுமென் னின் முடிந்திடுமோ, பிறை பெற் றிடுகின் றபெருஞ் சடையும் மிறைபெற் றிடுசத் தியியற் றிடுமே," என்பதனாலும், இந் நூலுள் துணையுந் தொழுந்தெய்வமும் என்னும் முதற்குறிப் புடைய செய்யுள் முதலாகப் பரந்துவருவன பலவற்றானும் உய்த்துணர்க. (கஎ)

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
யவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே.

(இ - ள்.) வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்து இருக்கும் செவ்வியும் - அங்ஙனம் நின்னால் வலிதிற் கவர்ந்து கொள்ளப்பட்ட வாமபாகத்தையுடைய சிவபெருமானும் நீயும் திருவுள முவந்திருக்கும் பாதிப்பெண் வடிவக் கடவுளின் வடிவழகும், உங்கள் திருமணக்கோலமும் - உங்களுடைய திருமணக் கோலமாகிய வடிவழகும், என்னைச் சிந்தையுள் அவ்வியந்தீர்த்து ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து - தமியேனை மனத்தின்கணுள்ள யான் எனதென்னுஞ் செருக்கை நீக்கி ஆட்கொண்டருளிய பொன்போலுந் திருவடிகளுமாகி இருவீரும் எழுந்தருளி வந்து, வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்க - கொடிய நமன் என்மேல் எதிர்த்து வரும் இறுதிக் காலத்தில் வெளிப்பட்டு நின்று காட்சி தந்தருளுக, எ - று.

(கு - ரை.) அவ்வியம்: ஆகுபெயர். நீவிர் இருவீரும் மகிழ்ந்து ஒருங்கிருக்கும் பாதிப்பெண் வடிவக்கடவுள்

வடிவமுகும், உங்கள் திருமணக்கோல வடிவமுகும், என் மனத்தின் கண்ணுள்ள யானென தென்னுஞ் செருக்கை யறுத்துத் தமியேனை ஆட்கொண்டருளிய திருவடிகளுமாகி எழுந்தருளி வந்து என் இறுதிக் காலத்திற் காட்சி தந்து நமன் செய்யும் துன்பத்தை நீக்கிப் பாதுகாத்தருளுக என்பதாம். (கஅ)

வெளிநின்ற நின்றிரு மேனியைப் பார்த்தேன் விழியுநெஞ்சுங்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
வொளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே.

(இ - ள்.) ஒளி நின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே - ஒளியோடு பொருந்தி நிலைபெற்றிருக்கின்ற ஒன்பது கோணங்களினும் விரும்பி எழுந்தருளி யிருக்கின்ற அபிராமி தேவியே, வெளி நின்ற நின் திருமேனியைப் பார்த்து - உள்ளத்திலே எண்ணுதற் பொருட்டு உருவமாகி வெளிப்பட்டு நிற்கின்ற நின்னுடைய திருமேனியைக் கண்டமை காரணமாக, என் விழியும் நெஞ்சும் களிநின்ற வெள்ளம் கரைகண்டது இல்லை - தமியேனது கண்ணினுங் கருத்தினுங் களிகூர்ந்து நிலைபெறுகின்ற இன்பப் பெருக்கிற்கு ஒருகரையுங் காணப்பட்டதில்லை. அங்ஙனமாகவும், கருத்தின் உள்ளே தெளி நின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ - என் கருத்தின்கண்ணே தெளிவு பொருந்தி நிற்கின்ற மெய்யறிவு ஒருகாலைக் கொருகால் மீதூர்ந்து விளங்குகின்றது. இஃது என்ன திருவுளக் கருத்தேயோ! அதனை அறிகின்றிலேன், எ - று.

(கு - ரை.) தேவியின் ஒன்பது கோணங்களாவன: முதலில் ஒரு திரிகோணமும், அதன்மேல் எட்டுக் கோணமும், அதன் மேல் பத்துக்கோணமும், அதன்மேல் மற்றொரு பத்துக் கோணமும், அதன்மேல் பதினான்கு கோணமும், அதன்மேல் எட்டுத்தளமும், அதன்மேல் பதினாறு தளமும், அதன்மேல் விந்துத்திரயமும், அதன்மேல் சதுரச் சிரத்திரயமுமாம். இவற்றுட் சிவகோணம் நான்கும், சத்திகோணம் ஐந்துமாம். சிவகோணம் நான்கும் கீழ் நோக்கியும் சத்திகோணம் ஐந்தும்

மேனோக்கியும் தம்முட் புணர, மேற்கூறிய நாற்பத்து முக்கோணமும் தோற்றமென அறிக. இவற்றின் தோற்ற மறைவு முறைகளும், கௌளமத, சமயமத வேறுபாடுகளும் எழுத்து அடைப்பும், கிரகமாலிகாகிரமமும், பிறவுமாகிய பரப்பெல்லாம் ஈண்டு விரிக்கிற் பெருகுமாகலின், சனற்குமாரசங்கிதை முதலிய நூல்களுள் குருமுகமாகப் பெற்றுய்த்துணர்ந்து கொள்க. இவ்வொன்பது கோணங்களிலும் தேவி சிறப்பாகப் பரவி வீற்றிருத்தலின், ஒளிகின்ற கோணங்களொன்பது மேவியுறைபவளே என்றார். கரைகாணுதவழியும் ஞானந் திகழ்தற்குக் காரணம் திருவருளேயல்லது பிறிதில்லை என்பதாம். (கக)

உறைகின்ற நின்றிருக் கோயினின் கேள்வ ரொருபக்கமோ
வறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுத
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ் சமோவென்ற னெஞ்ச
மறைகின்ற வாரிதி யோபூர ணுசல மங்கலையே. [கமோ

(இ - ள்.) பூரண அசல மங்கலையே - எங்கும் நிறைந்த நித்தியமங்கலையாகிய அபிராமிதேவியே, உறைகின்ற நின் திருக்கோயில் - நீ எழுந்தருளியிருக்கின்ற திருக்கோயிலானது, நின் கேள்வர் ஒரு பக்கமோ - நும் ஆருயிர்த் தலைவராகிய சிவபெருமானது ஒருபாகமோ, அறைகின்ற நால் மறையின் அடியோ முடியோ - விதிவிலக்குகளைக் கூறுகின்ற நான்கு மறைகளின் முதல்முடிவுகளோ, அமுதம் நிறைகின்ற வெண்திங்களோ - அமுதகலை நிறைகின்ற வெண்மையாகிய திங்கள் மண்டலமோ, வெண் கஞ்சமோ - வெண்டாமரை மலரோ, மறைகின்ற வாரிதியோ - துருவாசமுனிவரது வசவுரையினுல் இந்திர செல்வங்கள் வீழ்ந்து மறையப்பெற்ற பாற்கடலோ, என் நெஞ்சகமோ - அல்லது தமியேனது மனத்தின் உள்ளிடமோ, எ - று.

(கு - ரை.) வெண்டாமரைமலரிற் கலைமகளாயும் பாற்கடலிற் செந்தாமரையாசனியாகிய திருமகளாயும் வீற்றிருப்பவளாதலின், கஞ்சமோ, வாரிதியோ என்றார். திங்களின் வெண்மைப் பண்பைக் கஞ்சத்திற்குஞ் சேர்த்துப் பொரு

ளுரைக்கப் பட்டது. அசலம் - சலனமற்றது. அசலமங்கலையே என்பதற்கு மலையரசன் மகளாகிய உமாதேவியே எனப் பொருளுரைப்பினுமாம்.

சிவபெருமானுடைய இடப்பாகம் முதலிய ஆறிடங்களைப் போல என் மனத்தையும் நீ கோயில் கொண்டருளினாய், அதற்குத் தமியேன் செய்யும் கைம்மாறு ஒன்றுமின் றென்பதாம். (உ0)

மங்கலை செங்கல சம்முலை யாண்மலை யாள்வருணைச்
சங்கலை செங்கைச் சகல கலாமயி லாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.

(இ - ள்.) மங்கலை - எந்நாளும் மங்கலமுடையவளும், செம் கலசம் முலையாள் - செம்மையாகிய மாணிக்கக் கலசம் போலும் திருமுலைகளையுடையவளும், மலையாள் - பார்ப்பதியும், வருணச் சங்கு அலை செங்கைச் சகல கலாமயில் - வெண்ணிறம் பொருந்திய சங்கவளையல்கள் அசைகின்ற செவ்விய கைகளையுடைய எல்லாக்கலைகளுக்கும் அதிதெய்வமாகிய ஒரு சிறந்த மயில் போல்பவளும், பொங்கு அலை தாவு கங்கை தங்கும் புரிசடையோன் புடையாள் - கிளருகின்ற அலைகள் தவழும் கங்கை நீர் தங்குகின்ற முறுகிய சடையையுடைய சிவபெருமானது இடப்பாகமா யிருப்பவளும், உடையாள் - தமியேனை முன்னாளிலேயே அடிமையாக உடையவளுமாகிய, பசும் பெண்கொடி - பச்சைப் பெண்கொடியாயுள்ள அபிராமிதேவி, பிங்கலை - பொன்னிறத்தை யுடையவளும், நீலி - நீலநிறத்தையுடையவளும், செய்யாள் - செந்நிறத்தையுடையவளும், வெளியாள் - வெண்ணிறமுடையவளும், ஆவள், எ - று.

(கு - ரை.) புடையாளுடையாள் என்பதற்கு வாமபாகத்தை ஆளுதலுடையவள் எனப் பொருள் கூறினும் பொருந்தும். மங்கலையென்றது அபிராமிதேவியை. நீலி என்றது துர்க்கையை. செய்யாள் என்றது திருமகளை.

வெளியாள் என்றது கலைமகளை. பசும் பெண்கொடி என்றது உமையை. இனிப் பசும் பெண்கொடியாகிய உமையாள் என்னுஞ் சிவசத்தியே மங்கலையாகிய பிங்கலையும், மலையாளாகிய நீலியும், செங்கலசமுலையாளாகிய செய்யாளும், சகலகலாமயிலாகிய வெளியாளும் ஆவர் எனக் கொண்டு கூட்டிப் பொருள் கோடலும் ஒன்று.

அபிராமிதேவி பல சத்திகளுமா யிருப்பவளாகலின் ஐந்து நிறங்களு முடையவ ளாவள் என்பதாம். (உக)

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
அடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே.

(இ - ள்.) இளவஞ்சிக் கொடியே - இளமையாகிய வஞ்சிக் கொடியே, கொம்பே - பொற்கொம்பே, எனக்கு வம்பே பழுத்த படியே - பக்குவமற்றவனுகிய தமியேனுக்கு அகாலத்திற் பழுத்த அருட்கனியின் திருவடிவே, மறையின் பரிமளமே - மறையாகிய மலரின் கருத்தாகிய மணமே, பனிமால் இமயப் பிடியே - கைலைமலைக்களிறு தழுவும் குளிர்ச்சி பொருந்திய பெரிய இமயாசலப் பிடியே, பிரமன் முதலாய தேவரைப்பெற்ற அம்மே - நான்முகன் முதலாகிய தேவர்களைப் பெற்ற உலக மாதாவாகிய அபிராமிதேவியே, அடியேன் இனி இறந்து பிறவாமல் இங்கு வந்து ஆண்டு கொள் - ஒன்றுக்கும் பற்றுத புழுத்த நாயினுங் கடையேனுகிய அடியேன் இனி இறந்து பிறவாவண்ணம் ஈண்டெழுந் தருளிவந்து தடுத்தாட்கொண்டு வீடுதந்தருளும், எ - று.

(கு - ரை.) படிவமே எனற்பாலது ஈறுகெட்டுப் படியே என நின்றது எனக் கொள்ளினுமமையும். பிரமன் முதலாய தேவரென்றது நான்முகன், திருமால், இந்திரன் ஆனைமுகக் கடவுள், ஆறுமுகக் கடவுள் முதலியோரை. கொடி கொம்பு முதலிய உருவகங்களை உவமையாகக்கோடலும் ஒன்று.

அபிராமிதேவியே, நீ எழுந்தருளிவந்து அடியேன் இனி இறந்து பிறவாவண்ணம் தடுத்தாட்கொண்டு வீடுபேறு தந்தருள் என்பதாம். (உஉ)

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்
விள்ளேன் பரசமயம்விரும் பேன்வியன் மூவுலகுக் [தன்னை
குள்ளே யனைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே.

(இ - ள்.) வியன் மூ உலகுக்கு உள்ளே - பெரிய மூன்று உலகத்திற்கும் உள்ளிடத்திலும், அனைத்தினுக்கும் புறம்பே - அவையனைத்திலுக்கும் வெளியிடத்திலும், உள்ளத்தே - என் உள்ளத்திலும், விளைந்த கள்ளே - முறுகித் தடித்து விளைந்த இன்பத் தேனே, களிக்கும் களியே - மெய்யன்பர் களிகூரும் அன்புக்களிப்பே, அளிய என் கண்மணியே - எளியேனது கண்ணினுண் மணியாகிய அபிராமிதேவியே, மனத்தில் நின் கோலம் அல்லாது கொள்ளேன் - என் உள்ளத்தில் நின்னுடைய திருமேனியை அல்லது பிறிதொன்றை உட்கொள்ளேன், நின் அன்பர் கூட்டம் தன்னை விள்ளேன் - நின்னுடைய மெய்யன்பர் குழுவை விட்டுப்பிரியேன், பரசமயம் விரும்பேன் - பிறசமயங்களை விரும்பேன், எ - று.

(கு - ரை.) இவ்வெதிர்மறை உறுதிகண் மூன்றினும் திறம்பாதிருக்கும் பொருட்டுத் தமியேனுக்குத் திருவருள் செய்க என்பதாம். (உங)

மணியே மணியி ளொளியே யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

(இ - ள்.) மணியே - மாணிக்கமணி போல்பவளே, மணியின் ஒளியே - அம் மாணிக்கமணியின் ஒளிபோல்பவளே, ஒளிரும் மணி புனைந்த அணியே - பிரகாசிக்கும் அம் மாணிக்க மணிகள் இழைக்கப்பெற்ற ஆபரணம்போல்பவளே, அணியும் அணிக்கு

அழகே - அணிந்த அவ்வாபரணங்களுக்கு அழகாயிருப்பவளே, அணுகாதவர்க்குப் பிணியே - புகலடையாத அபக்குவர்களுக்குப் பிணிபோன்றவளே, பிணிக்கு மருந்தே - புகலடைந்த பக்குவர்களது பிறவிப்பிணிக்கு அதனையோட்டும் சிறந்த மருந்துமாயுள்ளவளே, அமரர் பெருவிருந்தே - பக்குவமுடையவர்களாகிய தேவர்களுக்கு நல்விருந்தாகிய அபிராமிதேவியே, நின் பத்மபாதம் பணிந்தபின் ஒருவரைப் பணியேன்-இப் பெருஞ் சிறப்புகள் வாய்ந்த நின் இரண்டு அருமைத் திருவடிப் பொற்றாமரைகளையும் வணங்கியபின் வேறொருவரையுந் தமியேன் வணங்கமாட்டேன், எ - று.

(கு - ரை.) அபிராமி தேவியைப் போற்றி வழிபடாதவர்கள் பலவகையான நோய்களையும் அடைந்து துன்புறுவார்களாதலின் "அணுகாதவர்க்குப் பிணியே" என்றார். எத்தகைய நோயுடையவர்களும் இறைவியைப் போற்றினால் அந்நோய் நீங்கப் பெறுவராதலின் "பிணிக்கு மருந்தே" என்றார். அபிராமிதேவியே, இப் பெருஞ் சிறப்புக்ள் வாய்ந்த நின்னுடைய இரண்டு அருமைத் திருவடிப் பொற்றாமரைகளையல்லது இனி வேறொரு கடவுளை வணங்கேன், திருவருள் செய்க என்பதாம்.

(உச)

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண் டேன்முதல் மூவ
ருக்கு
மன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
யென்னே யினியுன்னை யான்மறவா மனின் றேத்துவனே.

(இ - ள்.) முதல் மூவருக்கும் அன்னே - முத்தொழின் முதன்மையையுடைய முத்தேவர்களுக்கும் மாதாவே, உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே - மூன்றுலகத்திற்கும் அபிராமி தேவி யென்று பிறிதொரு பெயர் படைத்த பெறுதற்கரிய தேவாமிர்தமே, உன் அடியார் பின்னே திரிந்து பேணி - உன்னுடைய மெய்யடியார்களின் பின்னாகவே திரிந்து அவர்களை வழிபட்டு, பிறப்பு அறுக்க முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் - பிறவி நோயாகிய வலையை யறுக்க முன்பிறப்புகளிலே

நல்வினைகளாகிய வாட்படைகளை முயன்று செய்து கொண்டேன், யான் உன்னை மறவாமல் நின்று ஏத்துவன் - தமியேன் அத் தவங் காரணமாக உன்னை இம்மையிலே வினையொழியாது நின்று வணங்கிப் போற்றுவேன், இனி என்னே - இனி எனக்கென்ன குறையுண்டு, எ - று.

(கு - ரை.) அபிராமிதேவியே, பழம் பிறப்புகளிலே நின்னுடைய மெய்யடியார்களை வழிபட்ட தவத்தான் இம்மையிலே நின்னை வழிபாடு செய்யப்பெறுபவனாகிய தமியேனுக்கு இனி ஒரு குறையுமில்லை என்பதாம். (௨௯)

ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத்துங்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் றாளிணைக்கென்
னாத்தங்கு புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே.

(இ - ள்.) கடம்புப் பூ சாத்தும் குழல் அணங்கே - நறுமணங் கமழும் கடப்பமலர்மாலையைத் தரித்தருளும் கூந்தலையுடைய அபிராமிதேவியே, ஏத்தும் அடியவர் - நின்னுடைய திருவடிகளைப் போற்றும் மெய்யடியார்கள், ஈரேழுலகினையும் படைத்தும் காத்தும் அழித்தும் திரிபவராம் - பதினான்குலகங்களையும் உண்டாக்கியும், காப்பாற்றியும், அழித்தும் திரியும் மும்மூர்த்திகளும் ஆவரெனினும், மணம் நாறும் நின் தாள் இணைக்கு - நறுமணங்கமழும் நின்னுடைய இரண்டு திருவடித் தாமரை மலர்களுக்குச் சாத்தப்படும்பொருட்டு, என் நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு - புழுத்த நாயினுங் கடையேனாகிய தமியேனது நாவினின்றும் தோன்றிய இவ்வந்தாதியாகிய பாமாலை நின் திருச்செவிகளுக்கேறிய தன்மை, நகை உடைத்து - எவர்க்கும் நகைப்புக் கிடமாதலை யுடைத்தாயிற்று, எ - று.

புன்மொழி - பயனற்ற புல்லிய சொற்கள்.

(கு - ரை.) மிகவுஞ் சிறந்த நினது பெருமையை நோக்குங்கால், இப் புன்னூற் பாமாலையும் நின்னுடைய திருவடிகளுக்குச் சாத்தப்படும் பொருட்டுத் திருச்செவிக் கேறுமாறு யாங்ஙன

மென எவர்க்கும் நகைப்புக்கிடமாயிற்று ; மனித கதியினர் நும் மெய்யடியாராய வழித் தேவகதியுட் சிறந்த மும் மூர்த்திகளாதலை அவர் அறிந்திலர் போலும் என்பதாம். (உக)

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
யடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்
[புனலாற்
றுடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே.

(இ - ள்.) சுந்தரி - அபிராமிதேவியே, பத்ம பதயுகம் சூடும்பணி எனக்கே அடைத்தனை - உன்னுடைய இரண்டு திருவடிப் பொற்றாமரை மலர்களையும் தலையிற் சூடும் திருத் தொண்டை எனக்கே வரையறுத்து ஒழுங்கு செய்தருளினாய், நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருள் புனலால் துடைத்தனை - அது காரணமாக என் மனத்தின்கணுள்ள மலமாசுகளை யெல்லாம் உன்னருட் பெருக்கினால் பற்றறக் கழுவியருளினாய், உள்ளம் உருகும் அன்பு படைத்தனை - அதனால் அம் மனம் நெக்கு நெக்குருகுதற் கேதுவாகிய உண்மையன்பினை யுண்டாக்கி யருளினாய், வஞ்சப்பிறவியை உடைத்தனை - அதனால் மாயா சூழ்ச்சியையுடைய பிறவிக் கடற்கரையை உடைத் தருளினாய், நின் அருள் ஏது என்று சொல்லுவது - இப் பேருதவிகள் புரிந்த நின்னுடைய திருவருளைச் சிற்றறிவும் சிறு தொழில்களுமுடைய தமியேன் யாதென்று சொல்லிப் புகழ்வது, எ - று.

(கு - ரை.) செய்யுளாகலின், முறைபிறழக் கூறினார். அபிராமிதேவியே, தமியேனது பக்குவமற்ற நிலையைக் கண்டு பிறப்புகள் தோறும் சிறிது சிறிதாகப் பக்குவஞ் செய்து, ஈண்டு வீடுபேற்றைப் பெறுதற்கு முழுப் பக்குவமுஞ் செய்தருளிய நின்னைப் போற்றுதற்கு அத்துணைச் சிறந்த சொல்லும் பொருளும் யானுடைய என்பதாம். (உஎ)

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தா

ளல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே.

(இ - ள்.) நடம் ஆடும் துணைவருடன் சொல்லும் பொருளும் எனப் புல்லும் பரிமளப் பூங்கொடியே - ஐவகைத் தொழிலும் நிகழும் பொருட்டுத் திருக்கூத்தியற்றியருளும் உன் ஆருயிர்த் தலைவராகிய சிவபெருமானோடு சொல்லையும் அதன் பொருளையும் போலப் பேதாபேதமாய்த் தழுவும் இயற்கை நறு மணங் கமழும் பூங்கொடியாகிய அபிராமிதேவியே, நின் புது மலர்த்தாள் பகலும் அல்லும் தொழும் அவர்க்கே - நின்னுடைய அன்றலர்ந்த செந்தாமரை மலர் போலும் திருவடிகளை இரவும் பகலும் வழிபடும் மெய்யடியார்களுக்கு மாத்திரமே, அழியா அரசும் செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்கும் - இடை யில் அழியாத அரசாட்சியும் இடையறுது நிகழும் தவவொழுக்க மும் சிவலோக அடைவுமாகிய மூன்றும் ஒருதலையாகக் கிடைக் கும், எ - று.

(கு - ரை.) அபிராமிதேவியே நின்னை வழிபடும் மெய்யடி யார்களுக்கே இம்மை மறுமை வீடென்னும் மூன்றின் பயன் களும் முறையே கிடைக்கும் என்பதாம். சிவலோகமாகிய வீடுபேற்றைப் பெற்றவர்களுக்கு உலகம் மூடியும் ஊழிக் காலத்திலாவது அல்லது அடுத்த பிறப்பிலாவது வீடுபேறு சித்தியாதொழியா தென்பது, சிவாகம நூற்றுணிபாகலின், அத்துணிபுபற்றி, அச் சிவலோகம் ஈண்டுப் பரமுத்தியாகக் கொள்ளப்பட்டதென உய்த்துணர்ந்துகொள்க. எப்பொழு தேனும் ஒருமுறை இறைவியை வழிபட்டுப் போற்றினல் அது போதாது. எக் காலத்தும் இறைவி சிந்தனை உள்ளத்திலே இருக்கவேண்டு மென்பார் அல்லும் பகலுந் தொழுமவர்க்கே என்றார். (உ அ)

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே.

(இ - ள்.) சித்தியும் - அணிமாமுதலிய எண்வகைப்பேறு களும், சித்திதரும் தெய்வம் ஆகித் திகழும் பராசத்தியும் — அவ்வெண்வகைப் பேறுகளையும் வேதாந்த ஞானிகளுக்குக் கொடுக்கும் ஏனைத் தெய்வங்களாகி விளங்குகின்ற பராசத்தியும், சத்தி தழைக்கும் சிவமும் - அப் பராசத்தி ஏனைச் சத்திகளாய்க் கிளைத்தற் கேதுவாகிய பரசிவமும், தவம் முயல்வார் முத்தியும்— அப் பரசிவத்தை நோக்கித் தவங்களை முயன்று செய்பவராகிய சைவசித்தாந்த ஞானிகள் அடையும் மேலான வீடுபேறும், முத்திக்கு வித்தும் வித்து ஆகி முளைத்து எழுந்த புத்தியும் - அம் மேலான வீடுபேற்றிற்கு விதையும் விதையாகி யோகநிலத்தில் முளைத்து முறுகி யெழுந்த சிவஞானமும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தை - ஆன்ம போதத்தினுள்ளே பரவி நின்று நம்மைப் பாதுகாக்கும் திரிபுர சுந்தரியாகிய அபிராமிதேவியே யாம், எ - று.

(கு - ரை.) சித்தி - அணிமா முதலிய எண்வகைச் சித்திகள். இதனை அட்டமா சித்தி என்பர். "எத்திற நின்றா னீச னத்திற மவளு நிற்பள்" என்பவாகலின், சத்தி தழைக்குஞ் சிவமும் என்றார்.

இவ்வைவகையும் பிறவும் அபிராமி தேவியை இன்றியமை யாதன என்பதாம். (உக)

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண் டாய்கொண்ட தல்லவென்கை
நன்றே யுனக்கினி நானென் செயினு நடுக்கடலுட்
சென்றே விழினுங் கரையேற் றுகைநின் றிருவுளமே
யொன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே.

(இ - ள்.) ஒன்றே - ஒரே வடிவமாக இருப்பவளே, பல உருவே - பல வடிவங்களாக இருப்பவளே, அருவே - உருவ மற்றவளே, என் உமையவளே - ஏழையாகிய தமியேனுக்குக் குலதெய்வமாயுள்ள அபிராமிதேவியே, என்னை அன்றே தடுத்து ஆண்டு கொண்டாய் - தமியேனை யாதுதவம் பற்றியோ அன்றொருதினத்திலே கனவு நிலையில் வெளிப்பட்டு வந்து தடுத்

நாட்கொண்டருளினாய், கொண்டது அல்ல என்கை உனக்கு நன்றே - அங்ஙனங் கொண்டருளியதை அல்லவென்று மறுத்தல் அருட்கடலாகிய உனக்கு நல்லதாகுமா? ஆகாதன்றே ஆகலான், நான் இனி என் செயினும் - வினைக் கடிமையாகிய தமியேன் இனி என்ன குற்றங்களைச் செய்யினும், கடல் நடு உள் சென்று விழினும் - கடலுக்கு நடுவிலே சென்று விழினும், கரை ஏற்றுகை நின் திருவுளமே - கருணைக்கையால் எடுத்து வீடுபேற்றுக் கரையிலேற்றுதல் தலைவியாகிய நின்னுடைய திருவுளப் பாங்கேயாம், எ - று.

(கு - ரை.) தலைவியாகிய நீ அடிமையாகிய தமியேன் என்ன குற்றங்களைச் செய்யினும், அவற்றைப் பொறுத்துக் கொண்டருளி வீடுபேறு தருதலே கடமை; அஃதொழிந்து எது செய்யினும் என்செயல் ஒன்றுமின்றென்பதாம். (௧0)

உமையு முமையொரு பாகரு மேக வுருவில்வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
யமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே.

(இ - ள்) உமையும் உமையொருபாகரும் ஏக உருவில் இங்கு வந்து-அபிராமிதேவியும் சிவபிரானுமாகிய இவரிருவரும் இடப்பாதி பெண்ணும், வலப்பாதி ஆணுமாக உள்ள ஓர் உருவோடு தமியேனது கனவு நிலையின்கண் எழுந்தருளிவந்து, எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார் - ஒன்றுக்கும் பற்றாத நாயினுங் கடையேமையும் தமக்கு மெய்யன்பு செய்யும்படி அன்புநிலையில் வைத்தருளினார் ஆகலான், இனி எண்ணுதற்குச் சமயங்களும் இல்லை - இனி ஆராய்ச்சி செய்துகோடற்கு வேறு மெய்ச்சமயங்களுமில்லை, ஈன்று எடுப்பாள் ஒரு தாயும் இல்லை - என்னைப் பெற்றெடுப்பாளொரு தாயுமில்லை, அமையுறு தோளியர்மேல் வைத்த ஆசையும் அமையும் - பசிய மூங்கில்போலும் தோள்களையுடைய பெண்களின்மீது வைத்த காமமும் இனி எமக்குப் போதும், எ - று.

(கு - ரை.) உமையும் உமையொரு பாகரும் ஏக வுருவாதலாவது பாதிப்பெண் வடிவ (அர்த்தநாரீச) உருவைக் கொள்வது. உமா என்னும் வடசொல் உமை என நின்றது. உயிர்களைக் காப்பவள் என்பது பொருள். இனி, உ - ஓ பெண்ணே, மா - வேண்டாம். எனப் பொருள் கொண்டு பெண்ணே தவஞ்செய்ய வேண்டாம் என்னும் கருத்ததாகக் கோடலுமொன்று. உறு : உவமவாசகம்; "வேயுறு தோளி பங்கன்" என்பதனானும் அறிக. சத்தி சிவமாகிய இவரிருவரும் பாதிப்பெண்ணும் பாதி ஆணுமாகிய வடிவுடன் என் கனவு நிலையில் எழுந்தருளி வந்து அருள் செய்தமையால் பிறவிக்கு முதன்மையான ஏதுவாகிய காமவிச்சை ஒருங்குகெட மனத் தெளிவடைந்து பிறவித் தொடர்பும் விட்டு நீங்கிற்று, என்பதாம். (௩௧)

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே.

(இ - ள்.) ஈசர் பாகத்து நேரிழையே - சிவபெருமானுடைய இடப்பாகத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற நேர்மையாகிய இழையினையுடைய அபிராமிதேவியே, ஆசைக்கடலில் அகப்பட்டு - காமக்கடலிற் சிக்குண்டு, அருள் அற்ற அந்தகன் கைப்பாசத்தில் அல்லல்பட இருந்தேனை - உயிர்களிடத்திலே அருளற்ற யமனது கையின்கணுள்ள கடத்தற்கரிய பாசத்திற் கட்டுண்டு இறப்புத்துன்பத்தையும் நிரயத்துன்பத்தையும் ஒருங்கு நுகர எதிர்நோக்கி யிருந்த தமியேனை, நின் பாதம் என்னும் வாசக் கமலம் தலைமேல் வைத்து வலிய ஆண்டு கொண்ட நேசத்தை என் சொல்லுவேன் - உன்னுடைய வாசனை பொருந்திய திருவடித் தாமரைமலர்களை என் புன்றலைமேல் வலியவந்து சூட்டித் தடுத்தாட்கொண்டருளிய தலையன்பை என்னென்று சொல்லித் துதிப்பேன், எ - று.

(கு - ரை.) ஆசைக் கடலில் அகப்பட்டவர்கள் அந்தகன் கைப்பாசத்திலும் அகப்படுதல் தவறுதென்பார் இவ்வாறு "பாசத்தி லல்லற்பட விருந்தேனை" என்றார். அபிராமிதேவியே, நீ வலியவந்து திருவடித் தீக்கை செய்து தடுத்தாட்கொண்டருளிய பேருதவியைத் தமியேன் என் சிற்றறிவுகொண்டு எத்தகைய சொற்களைக் கொண்டு போற்றுவேன், என்பதாம். (கஉ).

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க
அழைக்கும் போழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே [லாங்
யுழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப னோடி
[வந்தே.

(இ - ள்.) அத்தர் சித்தம் எல்லாம் குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே - உலகத்திற்குத் தந்தையாகிய பரமசிவனுடைய திருவுள முழுவதையும் நெக்கு நெக்குருகச் செய்யும் கலவைகளை யணிந்த குவிந்த திருமுலைகளையுடைய யாமளையாகிய இளமைச் செவ்விபொருந்திய அபிராமிதேவியே, இழைக்கும் வினைவழியே அடும் காலன் எனை நடுங்கவந்து அழைக்கும்பொழுது உழைக்கும்பொழுது - தமியேன் பழம் பிறப்புகளிலே செய்துகொண்ட இருவினைகளின் வண்ணமே என்னைக் கொல்லும் யமன் யான் நடுங்குமாறு வந்து அழைக்குஞ் சமயத்தில் தமியேன் வருந்தும்போது, உன்னை அன்னையே என்பன் - நின்னைக் குறித்து மாதாவே உமக்கடைக்கலமென்று கூவுவேன், ஓடிவந்து அஞ்சல் என்பாய் - நீ அச்சமயத்தில் கடுக எழுந்தருளிவந்து அஞ்சற்க என்று அபயமளித்தருள், எ - று.

(கு - ரை.) யாமளை - பச்சை நிறமுடையவள். தமியேன் இறுதிக் காலத்திலே என் மாதாவே உனக்கடைக்கல மென்று உன்னை நோக்கிக் கூவுவேன், அச்சமயம் நீ கடுக எழுந்தருளி வந்து அஞ்சற்க என்று அபயந்தந்தருள் என்பதாம். எத்தகைய தீவினையாளர்களாயினும் அவர்கள் இறுதிக் காலத்தில் தெய்வத் திருவருளை நாடி முறையிடின் தெய்வத் திருவருள்

பெற்றுய்வரென்னும் வழக்குப்பற்றி இங்ஙனம் "உன்னையே அன்னையே என்பன்" என்றார். (கக)

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகந்
தந்தே பரிவோடு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே.

(இ - ள்.) பரிவொடு சரணம்புகும் அடியார்க்கு வந்து - திருக்கடவூரில் வீற்றிருந்தருளும் அபிராமிதேவி தம்மிடத்துப் பேரன்போடும் அடைக்கலம் புகும் மெய்யடியார்க்கு முன் எழுந்தருளி வந்து, வான் உலகம்தந்து - அவர்விரும்பிய மேலுலகங்களைக் கொடுத்துவிட்டு, சதுர்முகமும் - நான்முகனுடைய நான்கு நாக்குகளிலும், பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் - திருமாலினுடைய பசுமையாகிய தேன்பொருந்திய துழாய் மாலைபுரளும் பெரிய கௌத்துவமணி யணிந்த திருமார்பினும், பாகமும் - சிவபெருமானுடைய இடப்பாகத்தினும், செந்தேன் பொன்மலரும் - இந்திரலோகத்துள்ள செம்மையாகிய தேன் பொருந்திய பொற்றாமரை மலரினும், அலர்கதிர் ஞாயிறும் - விரிகின்ற ஆயிரம் ஒளிக்கற்றைகளையுடைய ஞாயிற்று மண்டலத்தினும், திங்களும் - திங்கள் மண்டலத்தினும், தான் போய் இருக்கும் - தான் வீற்றிருந்தருளுவள், எ - று.

(கு - ரை.) முகம்: ஆகுபெயர். தேவி இவ்விடங்களின் வீற்றிருந்தருளுவள் என்பதை, "வேதியர்க ளயனுவில் விஞ்சை மகளென்றும் - சீதரன்றன் மணிமார்பிற் செழுங்கமலை யென்றும் - நாதரிடத் தரிவையென்று நாட்டுவரெண் ணடங்கா - வாதிபரன் மூலபரை யாமளையுன் மயக்கால்," என்னும் சௌந்தரியலகரிச் செய்யுளானும், அச்செய்யுளில் எண்ணின்கணின்ற எச்சவும்மையானுமறிக. அபிராமிதேவியாகிய இறைவியொருத்தியே நாமகளாகவும் பூமகளாகவும் விளங்குகின்றாளென்பார், "சதுர்முகமும் பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும்" என்றார்.

தான் என்றது அபிராமிதேவியை. தேவிக்குச் சதுர்முகம் முதலியவற்றினும் திருக்கடவூரே சிறப்பான இடம் என்பதாம். அது, வந்து, போய் என்னும் வினையெச்சங்களானும், அதிகாரத்தானும் பெற்றும். (௩௪)

திங்கட் பகவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
வெங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே.

(இ - ள்.) தரங்கக் கடலுள் வெங்கண் பணி அணை மேல் துயில் கூரும் விழுப்பொருளே - திரைமறிகின்ற திருப்பாற் கடலின் கண்ணே தறுகண்மையினையுடைய பாம்புப் படுக்கையின்மீது திருமாலைப் பொருந்தி நின்று யோகநித்திரை செய்யும் விழுமிய செம்பொருளாகிய வைணவி யென்னும் அபிராமி தேவியே, பகவுத் திங்களின் மணம் நாறும் சீறடி சென்னி வைக்க - பதினாறு கலைகளுள் ஒரு கலையாகிய திங்களினது மணங் கமழும் நின்னுடைய சிறிய திருவடிகளைத் தலையிலே சூட்டி வணங்குதற்கு, எங்கட்கு ஒருதவம் எய்தியவா - மானுடகதியில் தோன்றியுள்ள தமியேங்கட்கும் ஒரு தவம் இருந்தவகை மிகவும் நன்று! நன்று,! எண் இறந்த விண்ணோர் தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ - நன்கு மதிப்பு மிக்க தேவர்கள் தமக்காயினும் இவ்வருந் தவப்பயன் கிடைக்குமோ, எ - று.

(கு - ரை.) ஓகாரம் எதிர்மறையாகலிற் கிடைக்குமாறரிதென்பதாம். பகவு - பிரிவு. ஊடறீர்க்கும் பொருட்டுச் சிவபெருமான் வணங்கும்போது அவரது திருமுடியின்கணுள்ள இளந்திங்கள் தோயப் பெற்று, அதன் மணங்கமழும் சீறடியென்பார் திங்கட் பகவின் மணநாறுஞ் சீறடியென்றார். இது பொருணூனயம் பாதுகாத்துக் கூறியவாறு. எங்கட்கு மென்னும் இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நான்முகனைப் பொருந்தி நின்று தொழில் செய்யும் சிவசத்தி பிராமி எனப் பெயர் பெறுமாறு போலவும் உருத்திரரை அதிட்டித்து நின்று அழித்தற்றொழில் செய்யும் சிவசத்தி ரௌத்திரி

எனப் பெயர் பெறுமாறு போலவும், திருமாலைப் பொருந்தி நின்று காத்தற்றொழில் செய்யும் சிவசக்தி வைணவியெனப் பெயர் பெறுதலின், அவ்வாற்றுமை நயம்பற்றி அபிராமி தேவியைத் தரங்கக்கடலுள் வெங்கட்பணி யணைமேற்றுயில் கூரும் விழுப்பொருளென்றார். அதிட்டித்தல் - நிலைக்களமாகக் கொண்டு செலுத்துதல். திருமாலின் அறிதுயில் அவரை மேற்கொண்டு நிற்கும் சிவசக்தியின் அறிதுயிலே யல்லது பிறிதில்லை என்பதும் ஈண்டுக் கூறியவாற்றானினிது விளங்கும். இவ்வாறு முன்வந்தனவற்றிற்கும் பின்வருவனவற்றிற்கும் ஈதொக்கும். செம்பொருளாவது - நித்தமாயும் தூய்தாயும் விகாரமின்றித் தான் எஞ்ஞான்றும் ஒரு பெற்றித்தாய் நிற்கும் முதற்பொருள்.

சிவபெருமான் தன் திருமுடிமீது வைத்து வணங்கிய நின் அருமைச் சிறடிகளை யாமுந் தலையின்மீதுவைத்து வணங்கப் பெறுதற்குப் பழம்பிறப்புகளிலே செய்துகொண்ட தவப் பயன் இருந்தபடி என்னை ! என்பதாம். (கஉ)

பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ்
மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்துவஞ்சத் [செய்யு
திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்ற
னருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே.

(இ - ள்.) பொருளே - மணி, பொன், வெள்ளி, நெல் முதலாகிய செல்வப் பொருளாயுள்ளவளே, பொருள் முடிக்கும் போகமே - அப் பொருள்களான் நுகர்ந்து முடிக்கும் இன்பமாயுள்ளவளே, அரும் போகம் செய்யும் மருளே - அருமையாகிய அப்போகத்தை விரும்பும் மயக்கமாயுள்ளவளே, மருளில் வரும் தெருளே - அம் மயக்கத்தில் (வெறுப்புறுதலான்) வரும் மெய்யறிவாயுள்ளவளே, அம்புய ஆதனத்து அம்பிகையே - வெண்டாமரை செந்தாமரை மலர்களை இருக்கையாகவுடைய உலகமாதாவாகிய அபிராமி தேவியே, என் மனத்து வஞ்சத்து இருள் ஏதும் இன்றி - தமியேனது மனத்தின்கண் அஞ்ஞான விருள் ஒரு சிறிதும் இல்லையாக, ஒளி வெளியாகி இருக்கும் உன் அருள் ஏது - அறிவுருவாகிய பரவெளியாக எழுந்தருளி

யிருக்கும் உன்னுடைய திருவருட் பெருமையைச் சிறிதும், அறிகின்றிலேன் - தமியேன் அறிகின்றிலேன், எ - று.

(கு - ரை.) செல்வமாக இருப்பவளும் அச் செல்வத்தின் பயனை நுகரப் பெறும் இன்பமாக இருப்பவளும் இறைவியே என்பார் இவ்வாறு "பொருளே பொருள் முடிக்கும் போகமே" என்றார். அபிராமிதேவியே, ஒன்றற்கொன்று தம்முண் மாறுபட்ட பலகுணமுந்தழுவிய நின் திருவருளின் தன்மையைத் தமியேனுக்கு அறிவித்தருளல் வேண்டும் என்பதாம். 'ஏதும்' - என்பதன் உம்மை விகாரத்தால் தொக்கது. (௩௪)

கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்த மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே.

(இ - ள்.) எட்டுத்திக்கே அணியும் திரு உடையான் இடம் சேர்பவளே - எட்டுத் திக்குகளையுமே அணியும் திருவுடையாகக் கொண்டருளிய சிவபெருமானது இடப்பாகத்திற் பொருந்தும் அபிராமி தேவியே, கைக்கே அணிவது கன்னலும் பூவும் - நின் திருக்கைகளின்கண்ணே தாங்குவது மயக்கஞ் செய்யும் கருப்பு வில்லும் மலர்க்கணைகளுமேயாம், கமலம் அன்ன மெய்க்கே அணிவது வெள் முத்துமாலை - பொற்றாமரையின் பேரரும்புகளையொத்த திருமுலைகளின்மீது அணிவது வெண்மை யாகிய முத்து மாலைகளேயாம், விட அரவின் பைக்கே அணிவது பல் மணிக் கோவையும் பட்டும் - நஞ்சையுடைய பாம்பின் படம்போலும் நிதம்பத்தின்மீது அணிவது பல மணிகளிழைத்த மேகலையும் பட்டுடையுமேயாம். (இஃதென்ன விபரீதம்,) எ - று.

(கு - ரை.) பை : ஆகுபெயர். உடை - ஆடை.

நாயகனைத்திறம் நாயகியத்திறம் என்னும் உலகமொழிக்கு மாறாகத் திக்காடையையுடையவராகிய சிவபெருமானின் சத்தி

யாகிய நீ கருப்புவின் முதலியவற்றை மேற்கொண்டிருப்பது விபரீதமாமென இகழ்வதுபோல் புகழ்ந்து கூறியவாறு. (௧௭)

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையா
ளவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே.

(இ - ள்.) பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் - பவளக்கொடிபோல இனிமை கனிந்த சிவந்த திருவாயும், பனி முறுவல் தவளத் திருநகையும் துணையா - குளிர்ச்சி பொருந்திய திருப்புன்முறுவலோடு கூடிய வெள்ளிய பல்வரிசைகளுமே போர்த்துணையாக, எங்கள் சங்கரனைத் துவளப் பொருது - நம்முடைய சிவபெருமானை யோகநிலை குலையும்படி போர்செய்து, துடி இடை சாய்க்கும் துணை முலையாள் அவளை - துடி போலும் இடையைத் துவளச் செய்யும் இரண்டு தனங்களையுடையவளாகிய அவ்வபிராமிதேவியை, அமராவதி ஆளுகைக்குப் பணிமின்-விண்ணுலகத் தலைநகராகிய அமராவதியை அரசாளும் பொருட்டு நம்மவர்களே வணங்கக்கடவீர்கள், எ - று.

(கு - ரை.) கண்டீர் என்பது முன்னிலையசை. ஆக வென்பது ஆவெனக் கடைகுறைந்து நின்றது.

தழுவக் குழைதல் கடவுளர்க்கு மியல்பென்பார் "துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணை முலையாள்" என்றார்.

நம்மவர்களே, நீவிர் மறுமையில் அமராவதியைத் தலைநகராகக் கொண்டு விண்ணுலகை அரசாட்சி செய்யவேண்டுமாயின், அவ்வபிராமிதேவியை இம்மையிலே வணங்கி வழிபடக் கடவீர்கள், என்பதாம். (௧௮)

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பான்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கண்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே.

(இ - ள்.) முப்புரங்கள் மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான்பங்கில் வாள் நுதலே - முப்புரங்களும் அழியும் பொருட்டு நாராயணக்கணையைத் தொடுத்த மேருமலையாகிய வில்லையுடைய சிவபெருமானது இடப்பாகத்தில் எழுந்தருளியிருக்கும் ஒளி பொருந்திய நெற்றியையுடைய அபிராமிதேவியே, ஆளுகைக்கு உன்றன் அடித் தாமரைகள் உண்டு - தமியேனை அடிமை கொள்ளுதற்கு உன்னுடைய திருவடிப்பொற்கமலங்களுள்ளன, அந்தகன்பால் மீளுகைக்கு உன்றன் விழியின் கடை உண்டு - இறுதிக்காலத்திலே இயமனிடத்தினின்றும் திரும்புதற்கு நின்னுடைய திருக்கடைக் கண்களுள்ளன, மேல் இவற்றின் மூளுகைக்கு என் குறை நின் குறையே அன்று - மேலே கூறிய இவ்விரண்டினும் நீ முயலுதற்கு உளதாகிய குறை தமியேனது குறையே யல்லாது நினது குறை ஒன்று மின்று, எ - று.

(கு - ரை.) அபிராமிதேவியே, தமியேன் வீடுபேற்றை அடைதற்குளதாகிய தடை நான் உன்னை வழிபாடு செய்யாதிருத்தலாகிய குறையேயல்லது நினது திருவருட் குறையன்று. வழிபாடு செய்து நின் திருவருளைப் பெறுதிருத்தலின் குறை என்பாலதே என்பதாம். (௩௧)

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதை [நெஞ்சிற்
காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன் றேமுன்செய் [புண்ணியமே.

(இ - ள்.) வாள் நுதல் கண்ணியை - ஒளிபொருந்திய நெற்றியிற் கண்ணையுடையவளும், விண்ணவர் யாவரும் வந்து இறைஞ்சிப் பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியை - தேவர்கள் அனைவரும் அமுதபானஞ் செய்யும்படி திருக்கடவூரில் வந்து, அக்காலமுதல் எக்காலத்தும் பூசித்து வணங்கும் பொருட்டுத் தன் அவையின் நடுவில் உறுதிசெய்த எம்பெருமாட்டியும், பேதை நெஞ்சில் காணுதற்கு அண்ணியள் அல்லாத

கன்னியை - அறியாமை பொருந்திய மனத்தின்கணுள்ள பாச ஞான பசுஞானங்களினுலே கண்டு கோடற்கு நெருங்கியவ ளாகாத நித்திய கன்னிகையுமாகிய அபிராமிதேவியை, காணும் அன்பு பூணுதற்கு எண்ணிய எண்ணம் அன்றோ முன்செய் புண் ணியம் - நாடோறுந் திருமுன் சென்று காணவேண்டுமென்று தேவியின்பால் பத்தியைத் தலைக்கொள்ளும்படி எண்ணிய எண்ணமல்லவா தமியேன் முன் பிறப்புகளிலே செய்து கொண்ட சிவ புண்ணியமாவது, எ - று.

(கு - ரை.) இறைவற்குரியனயாவும் இறைவிக்கு முரிய வாகலின் இறைவிக்கும் நுதற்கண் ணுண்டென்ருர். திருக் கடவூர் என்புழிக் கடம் - அமுதகுடம். அதன் வரலாற்றை அத் தலபுராணத்துட் காண்க; ஈண்டு விரிக்கிற் பெருகும்.

அங்கிவேனவே சாலச்சிறந்த கருவி என்பதாம். (௬௦)

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தா
னண்ணியிங் கேவந்து தம்மடி யார்க ணடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே.

(இ - ள்.) புதுக் குவளைப் பூங் கண்ணியும் - அன்றலர்ந்த புதிய கருங்குவளைமலர்போலுங் கண்களையுடைய அபிராமி தேவியும், செய்ய கணவரும் - செந்நிறம்பொருந்திய உடலை யுடைய அவர் தலைவராகிய சிவபெருமானும், நம் காரணத்தால் நண்ணிக்கூடி - நம்பொருட்டுத் தம்முள் இயைந்து கூடிப் பாதிப் பெண்ணும், பாதி ஆணுமாக உள்ள வடிவக் கடவுளாகி, இங்கே வந்து - இவ்விடத்தில் எழுந்தருளிவந்து, தம் அடியார்கள் நடு இருக்கப் பண்ணி - எம்மைத் தம்மெய்யடியார்கள் நடுவிலே நன் னிலையில் இருக்க வைத்து, நம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திட - நமது புல்லிய தலையின்மீது தங்கள் அருமைத் திருவடிப் பொற்றாமரை மலர்களை வைத்து, மல நீக்கஞ் செய் தற்கு, மனமே புண்ணியம் செய்தனம் - என்மனமே நானும் நீயும் பற்பல கோடி முற்பிறப்புகளிலே சிறந்த நல்வினைகள் செய்துகொண்டேமன்றோ, எ - று.

(கு - ரை.) சிவபெருமானுடைய நிறஞ் செம்மையாதலின் 'செய்ய கணவரும்' என்றார். சிவன் என்னுஞ் சொல்லும் செம்மை நிறமுடையவன் என்னும் பொருளைத் தருகின்றது. தலைமீது திருவடியை வைத்தல் மலநீக்கத்தின் பொருட்டு. சிவ பெருமான் பாதிப் பெண்ணும் பாதி ஆணுமாக உள்ள வடிவக் கடவுளாகித் தாமே எழுந்தருளி வந்து திருவடி தீக்கை செய்யப்பெறுதற்குக் காரணம் என் மனமே; நாமிருவேமும் பலகோடிப் பழம்பிறப்புகளிலே செய்துகொண்ட சிறந்த நல்வினையேயல்லது பிறிதொன்று மன்றாகலின், இன்னும் அதனையே முயலக்கடவேம் என்பதாம். (சுக)

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலிய
[நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே.

(இ - ள்.) இடம் கொண்டு விம்மி - அகலத்தைக்கொண்டு பூரித்து, இணைகொண்டு இறுகி - தம்முள் ஒன்றையொன் றொத்துக் கச்சின்க ணிறுகி, இளகி - மெல்கி, முத்து வடம் கொண்ட கொங்கைமலை - முத்துமாலைகளைத் தம்மீது கொண்ட தனங்களாகிய மலையரணையும், நல் அரவின் படம் கொண்ட அல்குல் கொண்டு - நல்லபாம்பின் படத்தின் றன்மையைக் கொண்ட அல்குற் றேரையும் போர்த்துணையாகக் கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை - அமுதகடேசுரரது வன்னெஞ்சை வென்று, நடம் கொண்ட கொள்கை நலம்கொண்ட நாயகி - அந் நெஞ்சைத் தனக்குக் கூத்தியற்றுமிடமாகத் திறைகொண்ட அவ் வெற்றி நலத்தைத் தலைக்கொண்ட அவர்தம் திருத்தேவிதாம் யாவரெனின், பனிமொழி வேதப்பரிபுரையே-குளிர்ந்த (இனிய) சொற்களையும் மறைகளானியன்ற நூபுரங்களையும் உடைய அபிராமசுந்தரிதேவியேயாம், எ - று.

(கு - ரை.) வென்றென்பது சொல்லெச்சம். "சொல்லெ னெச்ச முன்னும் பின்னுஞ் சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே"

என்பதனாற் கொள்க. இனி இடங் கொண்ட வென்பதற்கு மார்பகலம் முழுவதையுந் தனக்கிடமாக அடக்கிக்கொண்ட வென்றும், இணைகொண்டிறுகி என்பதற்கு இரண்டின் றன்மையைக் கொண்டு வயிரித்தென்றும், நடங்கொண்ட என்பதற்குக் கூத்தாடுவித்துக் கொண்டவென்றும், பொருள் கொண்டு, தேவிக் கடையாக்கிக் கூறினும் பொருந்தும். இளகி என்பது இலகி யெனவும் பாடம்.

திருக்கடவூரில் எழுந்தருளியிருக்கும் அமுதகடேசுரர் தம் திருத்தேவியார் தாம் யாவரெனின், அவர் வலிய நெஞ்சை நடங் கொண்ட கொள்கை நலங்கொண்டு அங்கு எழுந்தருளியிருக்கும் அபிராமிசுந்தரி அம்மையே, எ - ம். (சஉ)

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொற்
றிரிபுர சுந்தரி சிந்துர மேனிய டீமைநெஞ்சிற்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
யெரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே.

(இ - ள்.) பரிபுரச் சீறடி பாச அங்குசை - மறையாகிய சிலம்புகளையணிந்த சிறிய திருவடிகளையும் பாச அங்குசங்களையும் உடையவளும், பஞ்ச பாணி-ஐந்து கணைகளையுடையவளுமாகிய, இன்சொல் திரிபுரசுந்தரி - இன்சொற்களைப்பேசும் திரிபுரசுந்தரி யாவரெனின், சிந்துரமேனியள் - சிவந்த திருமேனியையுடைய வளும், தீமை நெஞ்சில் புரிபுர வஞ்சரை - உலகத்தை யழிக்குந் தீத்தொழிலைத் தம்மனத்தான் விரும்பிச்செய்த முப்புரக் கபடிகளை, அஞ்சக் குனி பொருப்புச் சிலைக்கை - அவரஞ்சுமாறு வளைத்தழித்த மேருமலையாகிய விற்பொருந்திய திருக்கையையும், எரிபுரைமேனி - தீயைப் போலுஞ் சிவந்த திருமேனியையு முடைய, இறைவர் செம்பாகத்து இருந்தவளே - அமுத கடேசுரரது சமபாகத்தில் எழுந்தருளி யிருந்தவளுமாகிய அபிராமிதேவியே யாம், எ - று.

(கு - ரை.) பாசாங்குசம் ஐங்கணை முதலிய படைக் கலங்களைத் தீயர்களையடக்குதற் பொருட்டு இறைவியுங் கைக்

கொண்டிருக்கின்றனள். ஆதலின் "பாசாங்குசை பஞ்சபாணி" என்றார். செம்பாதியாகிய சிவபெருமானுக்குச் செம்பாதியாகிய அபிராமசுந்தரியே தேவியென்று சொல்லச் சிறந்தவர், என்பதாம். (௩௬)

தவளே யிவளெங்கள் சங்கர ஞர்மனை மங்கலமா
மவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினு
லிவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந்
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு
[செய்தே.

(இ - ள்.) இவள் எங்கள் சங்கரனுர் மனைமங்கலம் ஆம் தவளே - இவ்வபிராமிதேவி எங்கட்கு இனிமை செய்பவராகிய சிவபெருமானது மங்கலகரமாகிய மனையறத்துணைவியாகும் தவத்தைச் செய்தவளாமாயினும், அவளே அவர் தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினுல் - அத் தேவியே அச் சிவபெருமானுக்குப் படைப்புமுறையொன்றினுல் மாதாவு மாயினுளாதலினுல், இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும் ஆம் - இத் தேவியே தேவர்களனைவருக்கும் மேலாகிய முதல்வியு மாம், ஆகலான் இவளுக்கு மெய்த்திருத் தொண்டுகள் செய்து வருந்துவதல்லது, இனி ஒருதெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்து துவளேன் - இனி இவளுக்கு மேலொரு முதற் றெய்வமுளதாக அதற்கு மெய்த்தொண்டுகள் செய்து வருந்தமாட்டேன். இதுவே என்றுணிபு, எ - று.

(கு - ரை.) இவளென்னும் அணிமைச் சுட்டினுற் கீழுள்ள குணதத்துவ மத்தகத்திலிருக்கும் முதல்வியாகிய உமையென்பதூஉம், அவளே என்னுஞ் சேய்மைச் சுட்டினுன் மேலுள்ள சாதாக்கிய தத்துவத்திலிருக்கும் முதல்வியாகிய மனோன்மணி என்பதூஉம் பெற்றும். ஆதலின், முறையே சீகண்ட பரமசிவனுக்கு உமை மனையற முதல்வியாதற்கும், மனோன்மணி அவருக்கு அன்னையாதற்கும் ஏதுப்போந்தவாறுய்த் துணர்ந்து கொள்க. "சிவஞ் சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீச, னுவந்தருளு ருத்திரன்றன் மாலய னென்றி னென்றாய்ப்

பவந்தரும்'' என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தாற் சிவமூர்த்தி முறைமைத் தோற்றஞ்சொல்லவே, சத்தி முறைமைத் தோற்றமும் பெறப்படுதலினென்க.

உமையம்மையும் தவஞ்செய்தமையின், அவ்வுமையைக் குறித்து நாந் தவஞ்செய்ய வேண்டுவது எற்றுக்கென்னும் வாதிகள் வினவுக்கு விடை கூறியவாறுமாயிற்று. (சச)

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கை
[யன்றே.

(இ - ள்.) தொண்டு செய்யாது - அபிராமி தேவியே, நினக்குத் திருத்தொண்டு செய்யாமலும், நின் பாதம் தொழாது - நின்னுடைய திருவடிகளை வணங்காமலும், துணிந்து - துணிவுகூர்ந்து, இச்சையே பண்டுசெய்தார் உளரோ இலரோ - தம் மனம் போன போக்கின் வண்ணமே தாம் விரும்பிய தொழில்களை முன்னாளிலே செய்த ஞானிகளும் சிலர் உண்டோ இல்லையோ? (உண்டெனின்), அடியேன் கண்டு - அடியேன் அவ்வொழுக்கத்தையே முன்மாதிரியாகக் கண்டு கொண்டு, அப்பரிசு செய்தால் - அவ்வாறு விதியோடு சில விலக்குகளும் விரவச்செய்தால், அது கைதவமோ - அது நின்னால் வெறுக்கப்படுந் தவமாகுமோ, அன்றிச் செய்தவமோ - அல்லது விரும்பப்படும் செய்தவ மாகுமோ (நின்னுடைய திருவுள்ளக் கருத்தைத் தமியேன் அறியேன்), மிண்டு செய்தாலும் - விதிக்கு விரோதமான செயல்களைத் தமியேன் (அறியாமையினாலே) செய்தாலும், பொறுக்கை நன்றே - அவற்றை அந்த ஞானிகள் செயல் போல நீ பொறுத்துக் கொள்ளுதலே நீதியாகும், பின்வெறுக்கை அன்று - பின் வெறுத்தல் நீதியன்று, எ - று.

அபிராமிதேவியே, ஞானிகளுட் சிலரது சிலசெயலை மேற்கோளாகக்கொண்டு அறிவிலியாகிய தமியேனும் செயினும், அச்செயலுட் சில மறமாயவழியும், அவர்செயலுட் சில மறச்

செயல்களை நும் செயலாகக்கொண்டு ஏற்றுக் கொண்டமை போல, இவற்றையும், அறியாமை பற்றிச் செய்தமையான், அறச்செயலாகவே கொண்டு ஏற்றுக்கோடலே நினக்கு நீதி, என்பதாம். மீண்டுசெய்தலாவது விதிக்குப்புறம்பான தீய காரியங்களைச் செய்து "இவன் பொல்லாதவன்" என்று பிறர் கூறுமாறு நடத்தல்.

இச்செய்யுட் கருத்தைப் "பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே" என்னுந் திருவாக்கானு மறிக. (௪௫)

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரை [மிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை [வாழ்த்துவனே.

(இ - ள்.) வெறுக்கும் தகைமைகள் செய்யினும் - மேலே கூறியபடி நீ வெறுக்குஞ் செயல்களைத் தமியேன் அறிந்து செய்யினும், தம்மடியாரை மிக்கோர் பொறுக்கும் தகைமை புதியது அன்றே - தம்முண்மையான மெய்யடியார்களது தீச் செயல்களைப் பெரியோர்கள் பொறுத்தருளும் பெருந்தகைமையும் புதிதல்லவே, (பூர்வீக வழக்கமேயாம்), புதுநஞ்சை உண்டு கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே - பாற் கடலிற் புதிதாகத் தோன்றிய ஆலகாலநஞ்சை யுண்டு கருநிறம் பொருந்திய திருக்கழுத்தையுடைய சிகண்ட பரமசிவனது இடப்பாகத்தைத் தழுவிய பொன்போலும் அபிராமிதேவியே, மறுக்கும் தகைமைகள் செய்யினும் - நீ தமியேனை ஏற்றுக் கொள்ளாது எதிர்மறுக்கும் செயல்களைச் செய்யினும், யான் உன்னையே வாழ்த்துவன் - யான் உன்னையே என்றும் போற்றி வருவேன், எ - று.

(கு - ரை.) பிரித்துக்கூட்டப்பட்ட உன்னையே என்னு மேகாரம் பிரிநிலை. இக்கருத்துகளை, "சார்ந்தாரைக் காத்த

றலைவர்கடன்" என்னும் சிவஞானபோத வெண்பாவானும், "துடைக்கினும் போகேன்" என்னும் தேவாரத்தானுமுய்த்துணர்க. பாற்கடல் கடைந்த காலத்தில் வாசுகி திடீரெனக் கக்கிய நஞ்சாகையால் "புதுநஞ்சையுண்டு" என்றார்.

தமியேன் நின்னையே குலதெய்வமாகக் கொண்டவழியடியேனாகலின் அறிந்து செய்த குற்றங்களையும் நீ பொறுத்தருளல் வேண்டும். பண்டைக்கால வழக்கமுமிதுவேயாம்; அல்லவென்று எதிர்மறுக்கினும், தமியேன் நின்னை விட்டு நீங்காமை ஒருதலை, என்பதாம். (சசு)

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் [தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநில
மேழும் பருவரை யெட்டுமெட் டாம லிரவுபகற்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

(இ - ள்.) வாழும்படி ஒன்று கண்டுகொண்டேன் - பேரின்பத்தில் வாழுமாறு அருள்புரிய வல்ல ஒப்பற்ற பொருளைத் தமியேன் கண்டு கொள்ளப் பெற்றேன், ஒருவர் மனத்தே வீழும் படி அன்று - அது, ஒருவர் தம்மனத்தினாலே விரும்பும் முறைமையுடைத்தன்று, விள்ளும்படி அன்று - வாயினாலே சொல்லும் முறைமையுடைத்தன்று, வேலை நிலம் ஏழும் பரு எட்டுவரையும் எட்டாமல் - கடல் சூழ்ந்த நிலவுலக முதலிய ஏழுலகங்கட்கும் பெரிய எண் வகைக் குலமலைகட்கும் நெருங்காமலே, பகல் இரவு சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே - பகலுமிரவும் மேருமலையை வலம்வரும் ஞாயிறு திங்கள்களாகிய இருசுடர்களுக்கும் நடுவிலே கிடந்து விளங்குகின்றது, (அதனை நம்மவர்களே விரைந்து காண்மின்கள்) எ - று.

(கு - ரை.) வீழுதல் - விரும்புதல். என்றது - எண்ணுதலை. ஈண்டு ஒன்று என்றது யாவையுமாகியும் ஒன்றாகவும் உள்ள பராசத்தியாகிய அபிராமிதேவியை.

நம்மவர்களே, மனம்வாக்குக் காயங்கட்கு மேற்பட்டவளாய் ஞாயிறு திங்கள் மண்டல நடுவில் விளங்குகின்ற ஒளிவடிவாகிய அபிராமி தேவியை நான் திருவருள்வாயிலாக ஞானக் கண்ணாற் கண்டு கொள்ளப் பெற்றேன்; நீவிரும் அத்தேவியை அங்ஙனம் விரைந்து கண்டு கொள்ளப் பெறுமின், என்பதாம். (சஎ)

சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சி
லிடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே.

(இ - ள்.) சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப் படரும் - விளங்கும் ஒருகலையாகிய பிறைத்திங்கள் தவழுஞ் சடாமுடியாகிய மலையைக் கொண்ட சிவபெருமானாகிய செம்பவளக்குன்றிற் பொருந்திப் படராநிற்கும், பரிமளப் பச்சைக்கொடியை நெஞ்சில் பதித்து - இயற்கைவாசனை கமழும் அபிராமிதேவியாகிய பசுங்கொடியை மனமாகிய பாத்தியுட் பதித்து அன்புநீர் பாய்ச்சி வளர்த்து, இடரும் தவிர்த்து இமைப் போது இருப்பார் - அதனாற் சிவானந்தானுபவ விளைவைப் பெற்று முக்கரண இயக்கத்தினாலாகும் துன்பத்தையு மொழித்து ஒரு மாத்திரைப் பொழுதேனும் சிவயோகத்திலிருப்பவர், குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையில் பின்னும் எய்துவரோ - குடலும் நிணமும் இரத்தமும் பொருந்தும் உடலை எடுத்துப் பின்னும் பிறப்பார்களோ, எ - று.

(கு - ரை.) இமைப்போ திருப்பவர்களே பிறவியை மீண்டும் எய்தாரெனின் நீண்ட காலமிருப்பவர் எய்தும் பேற்றைக் கூறவேண்டா என்றபடி. ஓகாரம் எதிர்மறை யாகலிற் பிறவார் என்பதாம். இடருமென்னும் உம்மை எச்சவும்மை.

அபிராமிதேவியை மனத்தில் நன்கு நினைத்து ஒருகண மேனுஞ் சிவயோகத்திருப்பவர் பின் பிறவார் என்பதாம். (சஅ)

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே.

(இ - ள்.) நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற நாயகியே - யாழின் நரம்பைப் பொருந்திய இசை வடிவமாய் உலகெங்கும் பரவி நிற்கின்ற தலைவியாகிய அபிராமிதேவியே, குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி - உடலாகிய குடிசையை யடைந்து அதன்கண் ஒதுக்குக்குடிபுகுந்த என்னுயிர், வெம் கூற்றுக்கு இட்ட வரம்பை அடுத்து மறுகும் அப்போது - கொடிய யமனால் கவர்ந்து கொள்ளப்படும் பொருட்டு நான்முகன் ஏற்படுத்திய ஆயுளினெல்லையைப் பொருந்தி மனங் கலங்கும் இறுதிக்காலத்தில், அரம்பை அடுத்த அரிவையர் சூழ வந்து - அரம்பை முதலிய தெய்வச்சேடியர்கள் சூழ்ந்து போற்ற எழுந்தருளிவந்து, வளைக்கை அமைத்து அஞ்சல் என்பாய் - வளையல்களை அணிந்த அங்கையினால் அபயந்தந்து அன்பனே அஞ்சற்க என்று திருவாய் மலர்ந்தருளித் தமியேனைப் பாதுகாத்தருள், எ - று.

அபிராமிதேவியே, யமனால் என்னுயிர் கவரப்படும் இறுதிக் காலத்தில் தவறாதெழுந்தருளிவந்து அபயந்தந்து தமியேனைப் பாதுகாத்தருள் என்பதாம். (சக)

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரண மரணமக்கே.

(இ - ள்.) நாயகி - எல்லா உலகங்கட்கும் தலைவியும், நான்முகி - நான்கு முகங்களையுடைய நான்முகன் சத்தியும், நாராயணி - நாராயணனுடைய சத்தியும், கை நளின பஞ்ச சாயகி - கையிலே தாமரைமலர் முதலிய ஐந்து கணைகளை யுடையவளும், சாம்பவி-சம்புவின் சத்தியும், சங்கரி - சங்கரனது

சத்தியும், சாமளை - சாமளாதேவியும், நச்சு வாய்ச் சாதி' அகிமாலினி - நஞ்சு பொருந்திய வாயையுடைய நல்ல' பாம்பணியை உடையவரும், வாராகி - வராகத்தின் சத்தியும், சூலினி - சூலத்தையுடையவளும், மாதங்கி என்று ஆய கியாதி உடையாள் சரணமே - மதங்க முனிவரின் புத்திரியெனப் பொருள்படும் மாதங்கியுமென் றிவ்வாறாகிய சீர்த்தியையுடைய அபிராமிதேவியின் திருவடிகளே, நமக்கு அரண் - நமக்குப் புகலிடம், எ - று.

(கு - ரை) கைந்நளினம் என்பதனை உருவகமாகக் கோட லுமொன்று. பிரிநிலையேகாரம் பிரித்துக் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. சாமளம் - பச்சை. சாதி - உயர்ச்சி. கியாதி - புகழ். நாயகி - தலைவி. நான்முகி - கலைமகள். நாராயணி - திருமகள். கைநளினபஞ்சசாயகி - உமை. சாம்பவி - நின்மல சிவசத்தி. சங்கரி - மனோன்மணி. வராகசம்பந்தமுடைய சத்தி பூமிதேவியாகலின், நாராயணி என்பதனோ டிதனிடை வேற்றுமையுண்மை தெளிந்துகொள்க. நாராயணி நாராயண னுடைய தங்கையுமாம். இச் சத்திபேதத் தோற்றங்களெல்லாம் அருள் செய்தற் பொருட்டேயாமாகலின், ஆய கியாதியுடையாள் எனக் கூறினார். இறைவியே நான்முகனிடத்தும் திருமா லிடத்தும் அமைந்து படைத்தல் காத்தல் தொழில்களை நடத்து தலின், "நான்முகி நாராயணி" என்றனர்.

"எத்திற நின்று னிச னத்திற மவளு நிற்பள்" என்னும் அபிராமிதேவியின் திருவடிகளே எமக்குப் புகலிடம் என்பதாம். (௫0)

அரணம் பொருளேன் றருளொன்றி லாத வசுரர்தங்கண்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே.

(இ - ள்.) அரணம் தம் பொருள் என்று அருள் ஒன்று இலாத அசுரர்கள் முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே - பொன் வெள்ளி இரும்புகளினாலாகிய மும்மதில்

களுமே தமக்குறுதிப் பொருளென்றுட்கொண்டு, அதனால் உயிர்க ளிடத்திலே அருள் சிறிதுமற்ற தாரகாக்கன் கமலாக்கன் வித்தியுன்மாலி என்னும் அசுரர்கள் மூவரது வலிமையும் அக் காலத்தொருங்கழிய வெகுண்ட சிவபெருமானும் திருமாலுமே, சரணம் சரணம் என நின்ற நாயகிதன் அடியார் - அடைக்கலம் அடைக்கலம் என்று விண்ணப்பஞ்செய்ய, நின்றருளுகின்ற தலைவியாகிய அபிராமிதேவியின் மெய்யடியார்கள், இந்த வையகத்தே பிறவி மரணம் இரண்டும் எய்தார் - இந்நில உலகின் கண்ணே பிறப்பு இறப்புகளாகிய இரண்டையும் அடையமாட்டார்கள், எ - று.

இறப்பவும் பெருந்தகைமையினையுடைய அபிராமிதேவி யின் மெய்யடியார்கள் இனிப்பூமியிற் பிறந்திறவாமல் இவ்வொரு பிறப்பிலேயே வீடுபேற்றின்பத்தை அடைதல் ஒருதலை என்ப தாகும். (௫௧)

வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
வையன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே.

(இ - ள்.) பிறை முடித்த ஐயன் திருமனையாள் அடித் தாமரைக்கு - பிறைமதியைச் சடைமுடியிற் றரித்த சிவ பெருமானுடைய திருத்தேவியாகிய அபிராமியம்மையினது திருவடித் தாமரை மலர்களுக்கு, முன்பு அன்பு செய்யும் தவம் உடையார்க்கு உள ஆகிய சின்னங்கள் - முன்பிறப்புகளிலே பேரன்புடன் செய்த தவத்தையுடைய அடியவர்களுக்கு இம்மைக் கண்ணுள்ளனவாகிய அடையாளங்களாம் யாவையெனின், வையகம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் - தேரும் குதிரையும் மதயானையும் சிரிய முடியுஞ் சிவிகையும் பாதுகாக்கப்படும் பொன்னும் பெருவிலை பெறும் அணிகலமும் இன்னோரன்ன பிறவுமாம் எனவறிக, எ - று.

(கு - ரை.) நம்மவர்களே, இம்மைக்க ணுளவாகிய இவ்வடையாளங்களால் இவர் கழிந்த பிறப்பில் அபிராமிதேவிக்குப் பேரன்பு செய்தவரென உறுதிசெய்தறிந்து, நீவிரும் அப்பேரன்பையே செய்க என்பதாம். முற்பிறப்பில் நல்ல தவத்தைச் செய்யாதவர்கள் இப்பிறப்பில் வறுமையிற்கிடந்து வாடி வருந்துவர். தவஞ்செய்தவர்களே செல்வம்பெற்று இன்புறுவர் ஆகலின் இவ்வாறு கூறினர். திருவள்ளுவர், "இலர் பலராகிய" என்று கூறிய குறளும் ஈண்டு எண்ணத்தக்கது.

(௬௨)

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே.

(இ - ள்.) சின்னம் சிறிய மருங்கினில் சாத்திய செய்ய பட்டும் - மிகச்சிறிய திருமருங்கிற் சாத்தியருளிய செம்பட்டுடையும், பென்னம் பெரிய முலையும் - மிகப்பெரிய இருதிருமுலைகளும், முத்து ஆரமும் - அத்திருமுலைகளின் மீதணிந்த முத்துமாலைகளும், பிச்சி மொய்த்த கன்னம் கரிய குழலும் - கங்கையோடு கூடவந்த பிச்சிப்பூமாலையை நெருங்க வணிந்த மிகக்கரிய திருக்கூந்தலும், கண் மூன்றும் கருத்தில் வைத்துத் தன்னந்தனி இருப்பார்க்கு - முக்கண்களுமாகிய இவற்றைத் தம் மனத்தில் உறுதியாக எண்ணிக்கொண்டு தனி நிலையிலிருக்கும் சிவயோகிகளுக்கு, இதுபோலும் தவம் இல்லை - ஞானம் வாயிலாக வீடு பயக்கும் இச் சிவயோகம் போலும் தவம் பிறிதொன்றில்லை, எ - று.

(கு - ரை.) இனி இனி என்னும் அடுக்கு "இன்னினி" என நிலைமொழி சிதைந்து வந்தாற் போலச் சிறிய சிறிய என்பன சின்னஞ்சிறிய எனவும், பெரிய பெரிய என்பன பென்னம்பெரிய எனவும், கரிய கரிய என்பன கன்னங்கரிய எனவும், தனித்தனி என்பன தன்னந்தனி எனவும் வந்த நிலைமொழிச் சிதைவுகள். இறைவியின் திருவடிகளை உள்ளத்திலே அமைத்துத்

தனியே இருந்து எண்ணிக்கொண்டிருத்தலே சிறந்த தவம் என்று படி. (௫௨)

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்த நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

(இ - ள்.) ஒருவர்பால் சென்று இல்லாமை சொல்லி இழிவு பட்டு நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் - நம்மவர்களே, ஒரு செல்வரிடத்துச் சென்று வறுமையைச் சொல்லி அவர்முன் எளிமையுற்று நில்லா தொழிதலை நீவிர் மனத்தில் எண்ணுவீர்களாயின், நித்தம் நீடு தவம் கல்லாமை கற்ற கயவர் பால் ஒரு காலத்திலும் செல்லாமை வைத்த - எப்பொழுதும் உயர்வாகிய தவஞ்செய்து பழகாமையினையே பழகிய இவறன்மையுடையார்மாட்டு ஒருகாலத்திலும் தமியேன் செல்லாமலே தடுத்தாட் கொண்டருளிய, திரிபுரை பாதங்கள் சேர்மின்கள் - திரிபுரசுந்தரியாகிய அபிராமி தேவியினுடைய திருவடிகளைப் புகலடைமின்கள், எ - று.

(கு - ரை.) செல்வரிடஞ் சென்று தம் வறுமையைக் கூறி நிற்பவர் இழிவடைவது திண்ணமாகையால் "இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு" என்றார். அபிராமி தேவியின் திருவடிகளைப் புகலடைந்த அடியவர் களுக்கு எக்காலத்திலும் வறுமை இல்லை யெனத் தாம் கண்டறிந்த உண்மையைக் கூறினார். (௫௩)

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னா ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
யுன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றில்லையே.

(இ - ள்.) ஆயிரம் மின் ஒரு மெய் வடிவு ஆகி விளங்குகின்றது அன்னாள் - ஆயிரம் மின்னல்கள் ஒருங்கு திரண்டு

பெண்ணியல்பு பொருந்திய கை கால் முதலிய உறுப்புகளோடு கூடி ஒரு வடிவாகி விளங்குகின்றதைப் போன்றவளும், அகம் மகிழ் ஆனந்தவல்லி - தன்னுருயிர்த்தலைவரும் தன்னடியார்களும் திருவுள மகிழுதற்கேதுவாகிய பேரின்பப் பெருங் கொடியும், அருமறைக்கு முன்னாய் நடு எங்குமாய் முடிவு ஆய முதல்வி - அரிய மறைகட்கு முதலாகியும் அதனடுப்பரப்பெங்கு மாகியும் அதன்முடிவாகியு மிருக்கின்ற இறைவியுமாகிய அபிராமிதேவி, தன்னை உன்னுதொழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்று இலை - தன்னை ஆன்மாக்கள் எண்ணாது விடினும் அன்றி எண்ணுகினும் அவர்மாட்டுத் தம்மால் விரும்பப்படுவது ஒரு பொருளுமில்லை, எ - று.

(கு - ரை.) இறைவியின் திருவடிவம் உயிர்த்தொகைகள் கண்கொண்டு காண்பதற்கரிய பேரொளிப்பிழம்பாக அமைந்ததாகலின் "மின்னுயிரமொரு மெய்வடிவாகி விளங்குகின்றது அன்னாள்" என்றார். ஆயிரம் பலவென்னும் பொருட்டு. மறையின் முதலினும் முடிவினும் நடு விரிவுடைத்தாகலின் நடு வெங்குமா யென்றார். இனி முதல்வி தன்னை உன்னு தொழியினும் உன்னினும் வேண்டுவ தொன்றிலை என்பதற்கு, இறைவியாகிய அபிராமிதேவியை எண்ணுதொழியினும் அன்றி எண்ணினும் அத் தேவிமாட்டு மெய்யடியவர்களால் வீடு பேறல்லது பிறிதொன்றும் வேண்டப்படுவதில்லை யென அடியார்கள் மேலேற்றிப் பொருள் கூறினும் பொருந்தும்.

அபிராமிதேவி உயிர்கட்குதவுவதொன்றையே வேண்டுபவளல்லது தன்பொருட்டாக ஒன்றையும் வேண்டுபவளல்லள் என்பதாம். (௪௫)

ஒன்ரு யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்ரு ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்ருது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவா
ரன்ரு லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே.

(இ - ள்.) ஒன்ருய் அரும்பி - ஒரேவடிவமாகத் தோன்றியும், பலவாய் விரிந்து - பலவடிவங்களாகியும், இவ்வுலகு எங்குமாய்

நின்றாள் – இவ்வுலகெங்கும் நிறைந்து நின்றுளாகியும், அனைத்தையும் நீங்கி நிற்பாள் - அவையனைத்தையும் நீக்கும் வகையினாலே நீங்கி நிற்பவளுமாகிய அபிராமிதேவி, என் நெஞ்சின் உள்ளே பொன்றாது நின்று புரிகின்றவா - தமியேனது மனத்தினுள்ளே நீங்காது நின்று திருவருள் செய்கின்றவாறு என்னைகொ லதிசயம்?, இப்பொருள் - மிக நுட்பமாகிய இச் சைவசித்தாந்தத் துண்மைப் பொருளை, அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே அறிவார் - ஊழிக்காலத்தில் ஆலிலையின்மீது அறிதுயில் செய்த பெருமையையுடைய திருமாலும் என் மேலான தந்தையாகிய சிவபெருமானுமே அறிவார். வேறியாவர் அறியவல்லுநர் எ - று.

(கு - ரை.) எண்ணின்க ணின்ற எதிரது தழீஇய உயர்வு சிறப்பும்மையான் அவ்விருவர் போலும் சிவஞானிகளும் இவ்வுண்மையை அறிவர் என்பதூஉம் பெற்றும். சமட்டிரூபம் - பொதுவகையா னிற்கும் ரூபம். வியட்டி ரூபம் - சிறப்புவகையா னிற்கும் ரூபம். வியாபகம் - எங்கும் நிறைந்து நிற்றல். வியாப்பியம் – வியாபிக்கப்படுகின்ற பொருள்.

ஒன்றாயும் பலவாயும் எங்கும் பரவியும் உலகெங்கும் நிற்கின்ற அபிராமிதேவி என் னெஞ்சினுண்மாத்திரம் நீங்காமலே நின்று அருள்புரியுந்திறம் எவரானும் எளிதின் அறிதற்பாற் றன்றென்பதாம். (௪௯)

ஐய னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லா
முய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமா லையுங்கொண்டு சென்றுபொய்யு
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே.

(இ – ள்.) ஐயன் அளந்தபடி இரு நாழிகொண்டு - இறைவனாகிய ஏகாம்பரநாதர் அளவைசெய்து கொடுத்த படிப்பொருளாகிய இருநாழிநெல்லையுங் கைக்கொண்டு, அண்டம் எல்லாம் உய்ய அறம் செய்யும் உன்னையும் போற்றி - எல்லா உலகங்களும் உயிர்வாழும் பொருட்டு முப்பத்திருவகைத் தருமங்களையும் காப்பாற்றியருளிய காமாட்சியாகிய நின்னையும் வாழ்த்தி, ஒருவர்

யால் செய்ய தமிழ்ப் பசும் பாமாலையும் கொண்டு சென்று - ஒரு செல்வர் மாட்டுச் செந்தமிழ்ப் பசும் பாமாலையையும் அவ் வாக்காற் புனைந்துகொண்டு சென்று, பொய்யும் மெய்யும் இயம்ப வைத்தாய் - அவர்முன் பொய்யும் மெய்யும் விரவப் பேசும்படியுந் தமியேனை விறுவியருளினை, இதுவோ உன் மெய் அருள் - அபிராமிதேவியே, இதுதானா நீ அடியேனுக்குச் செய்யும் உண்மையாகிய திருவருள்? எ - று.

(கு - ரை.) இருநாழி: அடையடுத்தவாகுபெயர். நாழி - அரைப்படி. அஃது உண்பதுநாழி யுடுப்பது நான்குமுழம் என்னும் ஔவைவாக்கானும், 'நாழி எட்டுக்கொண்டது குறுணி' என்னும் எண்சுவடியானும் அறிக. குறுணி-நான்கு படி. இனி நாழி ஒருபடியென்பாருமுளர். இது, பலநாடுகளின் முகத்த லளவைக் கருவிகளின் வேறுபாடுகளான் நேர்ந்த பிற்காலத்தொரு சாரார் வழக்கெனை உய்த்துணர்ந்து கொள்க. படிப்பொருள் - உணவுப்பொருள்.

அறப்பெருஞ்செல்வியாகிய அபிராமிதேவியே, தெய்வத்தைப் போற்றுதல் செய்த வாக்கினாலே வயிறேறும்பும் பொருட்டு மனிதரையும் பாடுதல் செய்து, ஒரு செல்வர்மாட்டுச் சென்று பொய்யும் மெய்யும் கலந்து பேசும்படியும் தமியேனை விறுவியருளினை. இஃது, எடுத்த இவ்வுடம்பின்கண் முகந்து கொண்ட வினைக்கு ஏற்குமாயினும், நின் சிறப்பான திருவருட் பெருக்கத்திற்கு ஏலாதென்பதாம். (௭)

அருணம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்குந்
தருணம் புயமுலைத் தையனல் லாடகை சேர்நயனக்
கருணம் புயமும் வதனம் புயமுங் கராம்புயமுஞ்
சரணம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே.

(இ - ள்.) அருண அம்புயத்தும் - செந்தாமரைமலரினும், என்சித்த அம்புயத்தும் - தமியேனது உள்ளத் தாமரையினும், அமர்ந்து இருக்கும் தருண அம்புயமுலைத் தையல் நல்லாள் - ஒரு விகாரக விரும்பி வீற்றிருக்கும் இளமைபொருந்திய செந்தாமரை

அரும்புபோலும் தனங்களையுடைய அபிராமிதேவியினது, தகைசேர் கருணை நயன அம்புயமும் - தகுதிபொருந்திய அருட் பார்வையாகிய தாமரையும், வதன அம்புயமும் - திருமுகத் தாமரையும், கர அம்புயமும் - கைக்கமலமும், சரண அம்புயமுமே அல்லால் - திருவடித்தாமரைமலர்களுமே யல்லது, ஒருதஞ்சமும் கண்டிலேன் - மற்றோர் உயிர்த்துணையையும் தமியேன் காணப் பெற்றிலேன், என்றவாறு.

(கு - ரை.) தருணம் புயம்; மலரும் பருவத்திலுள்ள தாமரை மொட்டு. கொங்கை இம் மொட்டைப் போறலின் "தருணம்புயமுலை" என்றார். தையனல்லாள்: இருபெயரொட்டுப் பண்புத்தொகை; பெண்களுக்குள் நல்லவளென்றுமாம்.

என்னுள்ளத்தாமரையில் கோயில்கொண்டிருக்கும் அபிராமி தேவியினது திருக்கண், திருத்தோள் முதலியவையே யல்லாமல் வேறோருயிர்த் துணையையும் தமியேன் உளதாக அறியப்பெற்றிலேன், என்பதாம். (௫௮)

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைகின்றி லேனொற்றை நீள்சிலையு
மஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே.

(இ - ள்.) நீள் ஒற்றைச் சிலையும் அஞ்சு அம்பும் இக்கு அலர் ஆக நின்றாய் - நீண்ட தனிவில்லும் ஐந்து கணைகளும் முறையே கரும்பும் தாமரை முதலிய ஐந்து மலர்களுமாகக் கொண்டு முத்தொழிலும் செய்து நிற்கின்ற அபிராமிதேவியே, ஈது அல்லது பிறிது தஞ்சம் இல்லை என்று - இத் தவநெறியொன் றல்லது பிறிதொரு பற்றுக்கோடும் என்னுயிர்க்கின்றென்பதை அடியேனறிந்திருந்தும், உன் தவநெறிக்கே நெஞ்சம் பயில நினைகின்றிலேன் - நின்னுடைய அத் தவநெறியின்கண்ணே மனத்தைச் செலுத்தி வழிபடத் தமியேன் எண்ணுகின்றிலேன், பஞ்சு அஞ்சுமெல் அடியார் அறியார் எனினும் - மென்மையான பஞ்சையும் அஞ்சுகின்ற மிருதுவாகிய உள்ளடிகளையுடைய

பெண்கள் தாம் பேதைமையை இயற்கையாக வுடையவ ராயினும், பெற்ற பாலரை அடியார் - தாம் பெற்ற மக்களை அவர் குற்றஞ் செய்த வழியும் தண்டிக்கமாட்டார் அன்றோ? எ - று.

(கு - ரை.) ஈண்டுத் தவநெறி என்றது சரியை கிரியா யோகங்களை. பயிற்ற என்னும் பிறவினை பயில எனத் தன் வினையாய் நின்றது. தன்வினையாகக்கோடல் அத்துணைச் சிறப்பன் றென்க. கிரணிறை. பஞ்சமென்னும் உம்மை விகாரத்தாற் றொக்கது. பஞ்சை எழுவாயாக வைத்துரைப் பினுமமையும். அடியார் - அடிக்கமாட்டார்கள். அடித்தலாவது கையினாலோ அன்றித் தடி கம்பு முதலியவற்றாலோ உடலின் மீதும் பிறபொருள்களின்மீதுந் தாக்குதல். இவ்வாறு உடலின் மீது தாக்கின் உடம்பு நோமாதலின் அது தண்டித்தலாகும்.

அபிராமிதேவியே! பெற்ற தாயர் தம் மக்களைக் குற்றஞ் செய்தவழியும் தண்டியாமைபோலத் தமியேன் அறிந்து செய்த இக்குற்றத்தையும் நீ பொறுத்தருளித் தமியேனுக்கு முழுத் திருவருள் செய்யவேண்டும் என்பதாம். அறிந்து செய்த குற்றத்தைப் பொறுத்தல் நூற்றுணிபன்றாகலின், ஆசிரியர் உலக வழக்கத்தை எடுத்துக்காட்டி, அதனை அம்மைமேலேற்றிக் குறையிரந்தன ரென்க. (௯௧)

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றோன் கொன்றை [வார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே.

(இ - ள்.) பாலினும் சொல் இனியாய் - நாவிற்கினிய பாலினுஞ் செவிக்கினிய சொற்களைப் பேசும் அபிராமி தேவியே, மால் இனும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார்சடையின் மேலினும் - திருமாலும் நான்முகனும் முதலிய மற்றைத் தேவர்களும் வணங்கத் தாம் பதிப்பொருளாய் நிற்கின்ற சிவபெருமானது கொன்றைமாலையை அணிந்த நீண்ட திருச்

சடையின்மேலிடத்திலும், கீழ் நின்று பாடும் வேதங்கள் மெய்ப் பீடம் ஒருநாலினும் - எட்டாமையினாலே அவரது திருவடிக்கீழ் இளைத்து நின்று போற்றும் மறைகளிலுள்ள உண்மையாகிய ஓங்கார இருக்கைகள் நான்கினும் பார்க்க, பனிமா மலர்ப்பாதம் வைக்க - குளிர்ச்சி பொருந்திய சிறப்பாகிய செந்தாமரை மலர் போலும் உம்முடைய திருவடிகளைச் சூட்டி மலநீக்கஞ் செய்தற்கு, அடியேன் முடை நாய்த்தலை சால நன்றோ - அடியேனது தீநாற்றம் வீசும் நாய்த்தலை போலும் புன்றலை மிகவும் நன்மையை உடைத்தாயிற்றோ? எ - று.

(கு - ரை.) இன்னும் என்பது இனுமென விகாரமாயிற்று. மாலினும் தேவர் வணங்க நின்றோன் என்பதற்கு, கனவாகிய மயக்கநிலையினும் தேவர்கள் வணங்க நின்றோன் எனவும், நான்முகனுந் திருமாலுமாகிய தேவர்கள் தம் ஆணவநிலையினும் வணங்க நின்றோனெனவும் அதிகார முதிர்ச்சியினாலே மயக்க நிலையின் மேம்பட்ட திருமாலினும் பார்க்க ஏனைத்தேவர் வணங்க நின்றோன் எனவும் பொருள் கூறினுமமையும். பாலினும் மேலினும் நாலினும் என்புழி ஐந்தனுருபு உறழ்பொருட்கண் வந்தது. ஊடலுவகையின் பொருட்டுச் சடையின்மேல் வைக்க வேண்டிற்றென்க. பிரணவபீடம் நான்காவன: தூலப்பிரணவ பீடம், சூக்குமப்பிரணவபீடம், காரணப்பிரணவபீடம், மகா காரணப்பிரணவபீடம் என்பன. அது "தூலப் பிரணவஞ் சொரூபா னந்தப்போர்—பாலித்த சூக்கும மேலைச் சொரூபப்பெண் ஆலித்த முத்திரை யாங்கதிற் காரண—மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே" என்னும் திருமந்திரத்தானு மறிக. பாதம் வைக்க அடியேன் நாய்த்தலை சால நன்றோ என முடிக்க. (௬0)

நாயேனை யுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய்நின்னை யுள்ளவண்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன் [ணம்
தாயே மலைமக ளேசெங்கண் மாறிருந் தங்கைச்சியே.

(இ - ள்.) தாயே - உலக மாதாவே, மலைமகளே - இமைய மலையரையன் மகளே, செங்கண் மால் திருத்தங்கைச்சியே - செங்

தாமரைக்கண்ணையுடைய திருமாலின் திருத்தங்கையே, நாயேனை யும் ஒருபொருள் ஆக நயந்து இங்கு வந்து நீயே நினைவு இன்றி ஆண்டுகொண்டாய்-புழுத்த நாயினுங் கடையேனாகிய தமியேனை யும் ஒருபொருட்படுத்து விரும்பி இங்கே வலியவந்து நீயே என் நினைவின்றியுந் தடுத்தாட்கொண்டருளினை, நின்னை உள்ள வண்ணம் பேயேன் அறியும் அறிவு தந்தாய் - அதன் மேலும் நின்னை மறையிலும் சிவாகமத்திலும் உள்ளபடி பேயேனும் அறியத்தகுஞ் சிவஞானத்தையும் தந்தருளினை, என்ன பேறு பெற்றேன் - எத்துணைப் பெரும்பேறுகளைப் பெற்றேன், எ - று.

(கு - ரை.) நாயேன் - நாயைப் போல் மிகவும் இழிந்த தன்மையுடையவன். எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது.

அபிராமிதேவியே! நீ தமியேனைப் பூர்வவழக்கத் தொடர் பாக வலிய வந்து ஆட்கொண்டருளியதன்மேலும் சிவ ஞானத்தையும் தந்தருளினை. இப் பெரும் பேறுகளை நின்னி டத்து என்போல வேறியாவர் பெற்றனர் என்பதாம். (கக)

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகநதச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே.

(இ - ள்.) தங்கச் சிலைகொண்டு - பொன்மலையாகிய வில்லைக் கைக்கொண்டு, தானவர் முப்புரம் சாய்த்து - அரக்கர்களுடைய முப்புரங்களையும் அழித்து, மதவெங்கண் கரி உரி போர்த்த செஞ்சேவகன் மெய் அடைய - மதத்தையும் தறுகண்மையையும் உடைய யானையைத் தோலுரித்துப்போர்த்த சுத்த வீரராகிய சிவபெருமானுடைய அருமைத் திருமேனியிற் பொருந்த, கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி - தனங்களாகிய குரும்பைகளினாலே குறியிடுசெய்தருளிய காமக்கண்ணி அம்மையாகிய அபிராமிதேவியினது, கோகநதச் செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என் சிந்தையதே - செந்தாமரை மலர்போலுஞ் சிவந்த திருக்கைகளின்கணுள்ள கருப்பு வில்லும்

மலர்க்கணையும் எப்பொழுதும் எனது எண்ணத்தின்கணுள்ளன வேயோம், எ - று.

(கு - ரை.) சிந்தையவே எனற்பாலது சிந்தையதே எனப் பன்மையொருமை மயக்கமாயிற்று; தனித்தனி முடிக்கினு மமையும். மகாமேருமலையைப் பொன்மலை என நூல்கள்கூறும் ஆதலின் அம் மலைவில்லைத் 'தங்கச்சிலை' யென்றார். குறியிடலாவது கொங்கைகள் பட்டமைக்கு அறிகுறியாக வடுச் செய்தல்.

கோகநதம் - கோகமென்னும் நகத்தில் முதற்கணுற்பவித் தது. அத்துணைச் சிறந்த சுத்தவீரராகிய சிவபெருமானை அத் துணைச் சிறுமென் கொங்கைக் குரும்பைகளால் எளிதிற் குறியீடு செய்தருளிய சாதுரியராகலின், அவர் மாத்திரமேயன்றி அவர் கைக் கருப்புவில்லும் மலர்க்கணையும் தமியேனது எண்ணத்தை விட்டகலாவாயின, என்பதாம். (௬௨)

தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றிற் கொட்டுந் தறிக்குறிக் குஞ்சமய
மாறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே.

(இ - ள்.) குறிக்கும் ஆறும் சமயத் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும் - நன்கு மதிக்கப்படும் ஆறுசமயங்கட் கும் முதற்றெய்வமாகிய பராசத்தியே இவ்வபிராமிதேவியாத லைத் தாம் ஒருசிறிது அறிந்துவைத்தும், வேறும் சமயம் உண்டு என்று கொண்டாடிய வீணருக்கு - வேறும் சில மெய்ச்சமயங் களுள வென்று மாறுபாடாக எண்ணி அவற்றைப் பாராட்டிப் பின்பற்றுகிற பயனிலிகளுக்கு, தேறும்படி சில ஏதுவும் காட்டி - அவர் தெளிந்து கொள்ளும்படி சில எடுத்துக்காட்டு களையும் நாமெடுத்துக்காட்டி, முன் செல் கதிக்குக் கூறும் பொருள் - அவர் இனி அடையும் நற்கதியின் பொருட்டு நாம் அவர்கட்குப் போதிக்கும் சைவத்துண்மைப் பொருளானது, குன்றில் கொட்டும் தறி - மலையிற் புடைக்கும் குறுந்தடிபோல அவரால் பழிக்கப்படும், எ - று.

(கு - ரை.) ஆறுக்குமென்னும் நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது. தறிபோற் பழிக்கப்படுவதைத் தறியென்றொழிந்தது உபசார வழக்கு. ஆறுமென்னும் முற்றும்மையை எச்சவும்மையாக்கி, அவற்றிற்கும் மேற்பட்ட சைவசித்தாந்தத்திற்கு மெனப் பொருளுரைத்துக் கொள்க: சிவம் மாறுபாடற்றதாயிருப்பச் சிவசத்தியே எல்லாவற்றையும் நிகழ்த்துமென்பது சைவ சித்தாந்த நூற்றுணிபாகலின், ஈண்டு வீணரென்றது புறச்சமயிகளை. அவர் சைவத் துண்மைப்பொருளை ஒருவாறுணர்ந்தும் அறியாதார்போன்று, குதர்க்கஞ்செய் தெதிர்ப்பவராகலின், அவர்கட்குப் போதிக்கும் அவ்வுண்மைப்பொருள், "காணுதாற் காட்டுவான் றன்காணுன் காணுதான் கண்டானுந் தான்கண்ட வாறு" என்புழிப்போலப் பழிக்கப்படும், என்பதாம். (கக)

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே.

(இ - ள்.) உனக்கு மிக்க அன்பு பூண்டுகொண்டேன் - அபிராமிதேவியே! தமியேன் நினக்குப் பேரன்பு பூண்டுகொண்டேனாதலால், வீணே பலிகவர் தெய்வங்கள் பால்சென்று அன்பு பூணேன் - வீணாக உயிர்ப் பலிகளைக் கொள்ளாயிடுகின்ற தேவதைகண்மாட்டுச் சென்று அவர்கட் கன்புசெய்தலை மேற்கொள்ளேன், நின் புகழ்ச்சி அன்றி ஒருபொழுதும் பேணேன் - அதுவன்றி நின்னுடைய சீர்த்தியை யல்லது வேறொருவருடைய சீர்த்தியை ஒருபோதும் பொருட்படுத்தேன், இருநிலமும் நான்கு திசையும் திருமேனிப் பிரகாசம் அன்றிக் காணேன் - பெரிய பூமியினும் நான்கு திக்குகளினும் விண்ணினும் நின்னுடைய திருவுடலொளியைக் காண்கின்றதன்றிப் பிறிதொன்றைக் காண்கின்றிலேன், எ - று.

(கு - ரை.) சிறுதெய்வங்கட்கு உயிர்ப்பலி இடுதலால் எத்தகைய பயனும் விளையாதாகலின் "வீணேபலிகவர்" தெய்வம் என்றார். பலிகவர் தெய்வங்களாவன வீரன், நொண்டி,

சாமுண்டி முதலிய சிறு தெய்வங்களாம். இத் தெய்வ வழிபாட்டால் எத்தகைய பயனும் விளையாதென்பது "சென்று நாஞ்சிறு தெய்வம் சேர்வோம் அல்லேம்" என்பதனாலும் பெறப் படும். உனக்கன்பு பூண்டுகொண்டேனாகலிற் காணேனாகிய தமியேனெனக் கூட்டுக.

அபிராமிதேவியே! தமியேன் நினக்குப் பேரன்பு பூண்டு கொண்டமையால், வேறு தேவதைகளிடத்து அன்பும், அத் தேவதைகளது புகழ்ச்சியைப் பேசுதலும் அத் தேவதை களை வழிபடுதலுஞ் செய்யேன் என்பதாம். (கூச)

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கந்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீ செய்த வல்லபமே.

(இ - ள்) வல்லி நீ செய்த வல்லபம் - அபிராமிதேவியாகிய பொற்கொடியே! நீ செய்த வல்லபத்தினால், ககனமும் வானும் புவனமும் காண - உலகங்களிலுள்ளவர்களும் விண்ணிலுள்ளவர் களும் பூமியிலுள்ளவரும் பார்க்க, வில்காமன் அங்கம்முன் தகனம் செய்த தவப்பெருமாற்கு - கருப்புவில்லையுடைய காமன் உடலை முன்னர் எரித்தருளிய சிவயோகத்தை யுடைய தென்முகக்கடவுளுக்கு, தடக்கையும் செம்முகனும் முந்நான்கு இருமூன்று எனத் தோன்றிய - நீண்ட திருக்கைகளும் சிவந்த திருமுகங்களும் முறையே பன்னிரண்டும் ஆறுமாகத் தோன்றி யருளிய, மூதறிவின்மகனும் உண்டாயதன்றோ - பழைய பேரறி வினையுடைய ஒரு குழந்தையும் உண்டாயிற்றல்லவா? எ - று.

(கு - ரை.) இறைவனது நுதற்கட்டீயால் காமன் எரிந் தொழிந்தமையை மூவுலகினரும் உணர்வராதலின் "ககனமும் வானும் புவனமுங் காண" என்றார். அவ்வாறு தகனஞ் செய்யினும் இறைவியின் ஆற்றலே மேலோங்கியது முருகக் கடவுள் தோற்றத்தால் நன்கு உணரப்படும். அபிராமிதேவியே! நின்னுடைய வல்லமையினால் ஞானோபதேசஞ் செய்துகொண்

டிருந்த தென்முகக் கடவுளுக்குச் சண்முகக் கடவுளாகிய ஒரு குழந்தை தோன்றுமே யானால், உன் வல்லமைக்கு முடியாதது தொன்றுமில்லை என்பதாம். (கூ௯)

வல்லப மொன்றறி யேன்சிறியேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றேன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே.

(இ - ள்.) பசும்பொன் பொருப்பு வில்லவர் உடன் வீற்றிருப்பாய் - மாற்றுயர்ந்த பொன்மயமான மேருமலையாகிய வில்லையுடைய சிவபெருமானோடு ஒன்றாகிய அபிராமிதேவியே வல்லபம் ஒன்று அறியேன் சிறியேன் - கல்வி கேள்விகளினாலாகிய வல்லமை யொன்றையும் சிறிதும் அறிதலிலன் சிறியேன், நின் மலர் அடிச்செம் பல்லவம் அல்லது பற்று ஒன்று இலேன் வினையேன் - நின்னுடைய உலகெங்கும் பரவிய சிவந்த திருவடிப் பொற்றளிர்களையல்லது பிறிதொரு களைகணிலன் தீவினையாளன், தொடுத்த சொல் அவமாயினும் - இவ்விருதிறனும் விரவப் பெற்ற தமியேன் அவ்வடிகளுக்குச் சாத்தும் பொருட்டுப் புனைகின்ற இவ்வந்தாதியாகிய பாமாலை சொற்சுவை பொருட்சுவைகளின்றி வீணாயினும், நின் திருநாமங்கள் தோத்திரமே - இதன்கட் பெய்த உன்னுடைய திருப்பெயர்களாகிய மந்திர மலர்கள் உனக்குப் புகழ்ச்சியேயாம், எ - று.

சொல் : ஆகுபெயர்.

(கு - ரை.) வல்லபம் - கல்வி கேள்விகளினால் ஆகிய ஆற்றல், இறைவியின் திருவருட் டுணைகொண்டே இந்நூலைப் பாடினராகலின் "வல்லபம்" ஒன்றறியேன் என்றார். அபிராமிதேவியே! இலக்கணக்கவியும் வரகவியும் ஆகாவறிவிலியேன் புனைந்த இவ்வந்தாதியாகிய பாமாலை அவ்விரு சிறப்புமொருங்கேயுடைய அறிஞரான் நன்கு மதிக்கப்படாதொழியினும், இதன்கட்பெய்த உன்திருப்பெயர்களாகிய மந்திர மலர்கள் உனக்குப் புகழ்ச்சியாதற் கிழுக்கில்லை என்பதாம்.

(கூகூ)

தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் றோற்றமொரு
மாத்திரைப் போது மனதில்வை யாதவர் வண்மைகுலங்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடோறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

(இ - ள்.) மின் போலும் நின் தோற்றம் - அபிராமி தேவியே! மின்னற் கொடிபோலச் செவ்வொளி கொண்டொல்கி விளங்கும் உன்னுடை திருமேனிப் பொலிவை, தொழுது தோத்திரம் செய்து ஒருமாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர் - வணங்கிப் புகழ்ந்து ஒருகணப் பொழுதாயினும் தம்மனத்திலே பதித்து எண்ணுதவர்கள், வண்மை குலம் கோத்திரம் கல்வி குணம் குன்றி - கொடையும் குடிப்பிறப்பும் கோத்திரமும் கல்வியும் நற்குணமுமாகிய இவை குன்றப் பெற்று, குடில்கள் தொறும் பாத்திரம்கொண்டு பலிக்கு நாளும் பார் எங்கும் உழலாநிற்பர் - குடிசைகடோறும் ஏனத்தைக் கைக்கொண்டு ஐயத்தின் பொருட்டு எப்பொழுதும் அலேந்து இப் பூமியெங்குஞ் சுழன்று திரியா நிற்பர், எ - று.

(கு - ரை.) கோத்திரம் - சந்ததிமூலம். இச் செய்யுட் கருத்தை, "ஆற்றோடு தும்பையணிந்தாடு மம்பல வாணர்தமைப் போற்று தவர்க்கடை யாளமுண் டேயிந்தப் பூதலத்திற், சோற்றுவி யற்றுச் சுகமற்றுச் சுற்றத் துணியுமற்று, ஏற்றாலும் பிச்சை கிடையாம லேக்கற் றிருப்பர்களே" என்னும் பட்டினத் தடிகள் திருவாக்கோடும் ஒப்பிடுக.

அபிராமிதேவியே! நின்னுடைய திருமேனித் தோற்றத் தினை ஒருகணமேனும் மனத்திற் பதித்துவைத்து எண்ணி வழிபடாதவர்கள் கல்வி கோத்திரம் கொடை முதலியவற்றை இழந்து, என்றும் வறியவர்களாகி ஐயத்தின் பொருட்டு உலகெங்கும் அலேந்து திரிவர் என்பதாம். (கஎ)

பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரு முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்

சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே.

(இ - ள்.) ஊறும் முருகு சுவை ஒளி ஊறு ஒலி - கமழும் நாற்றமும் சுவையும் ஒளியும் பரிசமும் சத்தமுமாகிய காரண தன்மாத்திரைகளைந்தினும், பாரும் - மண்ணும், புனலும் - நீரும், கனலும் - தீயும், வெங்காலும் - வேகம் பொருந்திய காற்றும், படர் விசும்பும் - இவற்றை உள்ளடக்கிப் பரந்த விண்வெளியுமாகிய காரியபூத பௌதிகங்களைந்தினும், ஒன்று படச் சேரும் தலைவி - அவை தம்மூளொற்றுமைப்பட இரண்டறக் கலந்து நிற்கும் அனைத்துலகத் தலைவியாகிய சிவ காமசுந்தரி, சீறடிக்கே சாரும் தவம் உடையார் - திருத்தில்லைக் கூத்தபிரான் தேவியாகிய சிவகாமசுந்தரியம்மையினுடைய சிறிய அருமைத் திருவடிகளுக்கே அடைக்கலம்புகும் பெருந்தவ முடைய மெய்யடியார்கள், படையாத தனம் இல்லை - எய்தப் பெறாத பொருள் ஒன்றுமில்லை, எ - று.

(கு - ரை.) திருக்கோயில்கள் யாவற்றினும் எழுந்தருளிய இறைவி ஒருத்தியேயாதலின் இச் செய்யுளில் தில்லைச் சிவகாம சுந்தரியைக் குறிப்பிட்டார். சிவகாமி அபிராமியெல்லாம் ஒன்றே. மேலைச்செய்யுளில் எதிர்மறை முகத்தாற் கூறியவற்றையே ஈண்டு உடம்பாட்டுமுகத்தான் வற்புறுத்திக் கூறியவா றுயிற்று. (கஅ)

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே.

(இ - ள்.) கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்கள் - முகிலின் கரிய நிறத்தைத் தரும் மலர் முடித்த கூந்தலையுடைய அபிராமிதேவியினது திருக்கடைக்கண் களானவை, அன்பர் என்பவர்க்கே - தம் மெய்யன்பரென்று சிறப்பித்துச் சொல்லப்படும் அடியார்களுக்கே, கல்வி தரும்

வித்தையைக் கொடுக்கும், தனம் தரும் - பொருளைக் கொடுக்கும், ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும் - ஒரு தினமேனும் சோர்வறியாத மனத்தைக் கொடுக்கும், தெய்வ வடிவும் தரும் - தெய்வத்தன்மை பொருந்திய பேரழகையும் கொடுக்கும், வஞ்சம் நெஞ்சில் இல்லா இனம் தரும் - கபட சித்தமில்லாத மனைவி மக்கள் முதலாகிய சுற்றத்தையும் கொடுக்கும், நல்லன எல்லாம் தரும் - ஒழிந்தனவுமான நன்மைக ளாயின எல்லாவற்றையும் கொடுக்கும், எ - று.

(கு - ரை.) இனி அன்பர்கள் என்பவர்க்கே கனம் தரும் பூங்குழலாள் என ஆற்றொழுக்காகக்கொண்டு பொருள்கூறி, அவ்வன்பர்க்கு இம்மையில் தனந்தரும் என வருவித்துக்கூட்டி முடித்தலுமொன்று. இப்பொருட்கு, கனம் - நன்குமதிப்பு என்றது, நன்குமதிக்கப்படும் பொருள்களெல்லாவற்றினும் மிக நன்கு மதிக்கப்படும் பொருளாகிய வீடுபேற்றை.

அபிராமிதேவியினது கடைக்கண் பார்வையே மெய்யன்பர் களுக்கு இம்மை மறுமை இன்பங்களைக் கொடுக்க வல்லன என்பதாம். (சுக)

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியிற்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமு
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே.

(இ - ள்.) பண்களிக்கும் குரல் வீணையும் கையும் - சாம மறையின் இசை இனிமையுங் களிகூருதற்கேதுவாகிய இன் னிசையையுடைய வீணையும் அதனைத் தாங்கிய திருக்கையும், பயோதரமும் - திருத்தனங்களும், மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி - மண்ணுலகத்தவர் கண்டு மனங் களிகூருதற் கேதுவாகிய கரியநிறமுமாகி, மதங்கர்குலப் பெண்களில் தோன்றிய - பாணர்குலப் பெண்கள்போல வெளிவந்தருளிய, எம் பெருமாட்டி பேரழகு - எம்பெருமாட்டியாகிய மீனாட்சி தேவியினது பேரழகினை, கடம்ப அடவியில் கண்களிக்கும்படி

கண்டு கொண்டேன் - கடம்பவனமாகிய மதுரையிலே என் கண்கள் களிகூருமாறு தமியேன் கண்டு கொள்ளப்பெற்றேன், எ - று.

(கு - ரை.) குரல் - நரம்பெனினுமமையும். மதங்கர்குலத்திலே தோன்றினமையால் தேவிக்கு மாதங்கி என்னும் திருநாமம் உளதாயிற்றெனவறிக. இப்பெயர் பிறிதொரு காரணத்தான் வரும். அது மேற்காட்டப்பட்டது.

திருத்தில்லையும் மதுரையும் விராட்புருடனுக்கு முறையே இருதயத்தானமும் துவாதசாந்தத்தானமுமாய்ச் சிவப்பதிகளுள் மேம்பட்டனவாகலின், அங்கெழுந்தருளி யிருக்கும் சிறந்த சிவசத்திகளின் திருப்பெயர்களைச் சுட்டி அபிராமிதேவியை ஒன்றிடையிட்ட முற்செய்யுளானும் இச் செய்யுளானும் ஆசிரியர் விதந்து கூறியவாறு. கடம்பமரக்காடுகள் மிகுந்திருந்தமையின் மதுரைக்குக் கடம்பாடவி என்னும் பெயருமுண்டு. கடம்பாடவி சிந்தாமணிக்கிரகம் என்பாருமுளர். (எ௦)

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
விழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக் கென்குறையே.

(இ - ள்.) இழவு உற்று நின்ற நெஞ்சே - அருமையாகிய இம் மனிதப்பிறப்பான் அடையப்படும் பயனை இழந்தேமே யென்று துக்கமுற்றுச் சோர்ந்து நிற்கின்ற என்மனமே, அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி - கட்டழகுக்குத் திருமகள் முதலிய பிறரொருவரும் தனக்கு நிகராகாத பொற்கொடியும், அருமறைகள் பழகிச் சிவந்த பத அம்புயத்தாள் - அருமையாகிய சைவ மறைகள் பாதுகையாகி வருடுதலினாலே கன்றிச் சிவந்த திருவடித் தாமரை மலர்களையுடையவளும், பனி மா மதியின் குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பு இருக்க - குளிர்ச்சியும் பெருமையும் பொருந்திய பிறைத் திங்களையணிந்த திருமுடியினையும் என்ஞான்றும் இளமைச் செவ்வி வாய்ந்த

கரிய நிறத்தையுமுடைய பொற் கொம்பர்போல்பவளுமாகிய அபிராமிதேவி நமக்குயிர்த் துணையாயிருக்க, உனக்கு என் குறை - உனக்கு யாதுகுறை? ஒன்றுமில்லை ஆகலான், இரங்கேல் - நீ இனியிரங்கா தொழிவாயாக, எ - று.

(கு - ரை.) இறைவி பேரழகு பொருந்தியவளாதலின் "அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லி" என்றார். இழவு - பொருள்களை இழந்துவிட்ட தன்மை. "இப் பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ யாதுவருமோ" என்று வீடுபேற்று வறுமைகூர்ந்து வருந்துகின்ற என்மனமே! அபிராமிதேவி நமக்குயிர்த்துணையாயிருக்க, உனக்கென்ன குறையிருக்கின்றது; நீ இனியிரங்கா தொழிவாயாக என்பதாம். (எக)

என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கி
னின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

(இ - ள்.) இரு நீள் விசும்பின் மின்குறை காட்டி மெலிகின்ற நேர் இடை மெல் இயலாய் - பெரிய நெடிய விண்ணின் கண்ணுள்ள மின்னலுக்கு ஒரு குறையைத் தான் மெலிந்து காட்டுகின்ற நேர்மையாகிய இடையினையும் மெல்லியல்பையுமுடைய அபிராமிதேவியே, எம் கோன் தன்குறை தீரச் சடைமேல் வைத்த தாமரை - உயிர்கட்குத் தலைவராகிய அமுதகடேசுரர் தம்முடைய குறை நீங்கும் பொருட்டுத் தமது சடையின் மேல் வைத்து வணங்கிய உன்னுடைய அருமைத் திருவடித் தாமரை மலர்களை, என் குறை தீர நின்று ஏத்துகின்றேன் - என் குற்றம் தீரும்படி தமியேன் உன்னுடைய திருமுன் நின்று கண்டு வணங்கிப் போற்றுகின்றேன், இனி யான் பிறக்கின் - இனி மேலான வீடுபேற்றை யடையாது தமியேன் பிறப்பெடுக்கின், நின் குறை அன்றி யார்குறையே - அக் குற்றம் நின் குற்றமன்றி மற்றியாவரது குற்றமோ, திருவாய் மலர்ந்தருளுக, எ - று.

(கு - ரை.) காண் : முன்னிலையசை. காட்டி மெலிகின்ற என்பதனை மெலிந்து காட்டுகின்ற என விகுதி பிரித்துக் கூட்டுக;

"அருங்கேடன்" என்புழிப்போல. மெலிந்து - மெலிதலால். என் குறை - நின்னை வழிபடாத குறை. நின்குறை. வீடுபேறு தராதகுறை. மின்குறை - மின்னற்கொடி கடிதின் மறைதலோடு நூலமாயிருக்கின்ற தென்னுங் குறை. தன்குறை - கங்கா தேவியின் பொருட்டு நிகழ்ந்த ஊடற்கேதுவாகிய குறை. மெலியி னும் நேர்மை தவறிற்றில்லை யென்பார் மெலிகின்ற நேரிடை என்றார்.

ஆண்டாள் அடிமை யென்னும் நம்மிருவேமுள் யான் அவ் வடிமைத்தொழிலைச் செய்து முடிக்கின்றேன், நீ அவ்வாளுதற் றொழிலைச்செய்து முடியா தொழிவாயாயின், குறை யாவர் பாலதோ! சொல்லியருளுக என்பதாம். (எஉ)

தாமங் கடம்பு படைபஞ்ச பாணந் தனுக்கரும்பு
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமந் திருவடி செங்கைக ணான்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே.

(இ - ள்.) அம்மை நாமம் திரிபுரை - அபிராமியம்மைக்கு வேறொரு பெயர் திரிபுரையும், நயனம் ஒன்றோடு இரண்டு - திருக் கண்கள் நெற்றிக்கண்ணொன்றுடன் மற்றிரண்டு கண்களுமாகிய மூன்றும், செம் கைகள் நான்கு - சிவந்த திருக்கைகள் நான்கும், ஒளி செம்மை - நிறம் செந்நிறமும், தாமம் கடம்பு - மாலை கடப்ப மலர்மாலையும், தனுக்கரும்பு - வில்லுக் கரும்பும், படை பஞ்ச பாணம் - படைக்கலம் ஐந்து மலர்க்கணைகளுமேயாம்; ஏத்தும் பொழுது வயிரவர் யாமம் - அவரை நாம் சிறப்பாகப் போற்றி வழிபடுங் காலம் சிவப்பதிக்காவலர் கருத்துடன் காக்கும் நள்ளிரவுக் காலமாம்; எமக்கு என்று வைத்த சேமம் திருவடி - அவர் எமக் கீந்தருளும் பொருட்டு வேறு வைத்திருக்கின்ற பாதுகாப்புப் பொருள் தந்திருவடிகளேயாம், எ - று.

(கு - ரை.) ஆமென்னும் வினைப் பயனிலையை வருவித் தொட்டுக. நள்ளிரவு திருவடி திட்சைக்குரிய ஓடுக்க காலமாகலின், அஃது ஈண்டு ஆசிரியரால் விதந்தெடுத்துக் கூறப் பட்டது.

அபிராமிதேவியை எண்ணுதலும் அவளைச் சிறப்பாக வழிபடுங் காலமும், அவர் தம் மெய்யடியார்க் கீந்தருளும் பேறுங் கூறியவாறு. (எகூ)

நயனங்கண் மூன்றுடை நாதனும் வேதமு நாரணனு
மயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொற்
சயனம் பொருந்து தபனியக் காவினிற் றங்குவரே.

(இ - ள்.) மூன்று நயனங்கள் உடை நாதனும் - திங்கள் கதிரவன் தீ ஆகிய மூன்று திருக்கண்களையுடைய தங்கணவ ராகிய சிவபெருமானும், நாரணனும் - திருமாலும், அயனும் - நான்முகனும், வேதமும் பரவும் - நான்மறைகளும் போற்று கின்ற, அபிராமவல்லி இணை அடியைப் பயன் என்று கொண்டவர் - அபிராமிதேவியின் இரு திருவடிகளை மறுமைப் பயனைத் தருவனவாமென்று உட்கொண்டு வழிபடும் அடியவர்கள், தபனியக் காவினில் பொருந்து பொன் சயனம் - விண்ணுலகத்துள்ள கற்பகச்சோலையிற் பொருந்தும் பொற் படுக்கையின்கண்ணே, பாவையர் ஆடவும் பாடவும் தங்குவர் - அரம்பை முதலிய தேவமகளிர் ஆடிப்பாட மறுமையிலே இந்திராதி தேவராகி வீற்றிருப்பர், எ - று.

(கு-ரை.) முக்கடவுளர்களும் நான்கு மறைகளும் போற்று கின்ற அபிராமிதேவியின் திருவடிகளை மறுமைப்பயன் மாத்திரையே கருதி வழிபடும் அடியவர் அவ்வாறே இந்திராதி தேவராகிக் கற்பகச்சோலையில் அரம்பையர் ஆடிப்பாடப் பொற்படுக்கையின்கண் வீற்றிருப்பர், ஒரு பயனையுங் கருதாது போற்றுகின்ற மேலோர்களே வீடுபேறாகிய பேரின்பத்தை யடைவர் ஆகவே பயன் கருதாது வழிபாடு செய்தலே சிறந்த தென்பதாம்.

(எச)

தங்குவர் கற்பகத் தாருவி னீழலிற் றயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாடிகு மேனி குறித்தவரே.

(இ - ள்.) கற்பகத் தாருவின் நீழலில் தங்கு உவர் - மேலே சொல்லியபடி கற்பக மரத்தின் நீழலிலே வீற்றிருக்கின்ற உந்தத் தேவர்களுக்குள்ளே, மால்வரையும் - பெரிய மலைகளையும், பொங்கு உவர் ஆழியும் - கிளருகின்ற அலைகளையுடைய உவர்க் கடல் முதலிய கடல்களையும். ஈரேழ் புவனமும் பூத்த உந்தி - பதினான்குலகங்களையும் பெற்ற திருவயிற்றையும், கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே - மணம் பொருந்தி பூக்களை வைத்து முடித்த கூந்தலையுடைய அபிராமிதேவியினது திருமேனியை வீட்டைக் குறித்து அங்கிருந்தும் போற்றுதல் செய்தவர்கள், மண்ணில் பிறவியைத் தாயர் இன்றி வழுவா - இந்நிலவுகிலே, இனிப் பிறக்கும் பிறவியைத் தம்மைப் பெறும் தாயரில்லாதொழிய விலகி, மங்குவர் - அத்தேவியின் றிருவடிகளை இரண்டறக் கலப்பர், எ - று.

(கு - ரை.) மயங்குவர் எனற்பாலது எதுகை நோக்கி மங்குவரென்றாயிற்று. மயங்குதல் - கலத்தல். அம் மயங்குதல் என்னும் வினைக்குத் திருவடிகள் என்னுஞ் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. ஆழியுமென எண்ணின்கணின்ற எச்சவும்மையான் ஏனைக் கடல்களுமென்பது பெற்றாம். கூறப்பட்ட முறையில் சிவலோக முதலிய பதமுத்திகளி லிருந்தே பெரியோர்கள் சிலர் மேலான வீடுபேற்றை யடைவதுபோலத் தேவி அன்பு வழியிலே விண்ணுலக முதலிய மேற்கதிகளிலிருந்து மிகுந்த பக்குவமுடையவர்களாகிச் சிலர் மேலான வீட்டை யடைதலுங்கூடும் என்பதாம்.

இச் செய்யுட்கு இங்ஙனம் பொருள் கூறாது வேறு கூறுவன வெல்லாம் கூறியதுகூறன் முதலிய குற்றத்துட் படுமாறுய்த் துணர்ந்துகொள்க. (எ௬)

குறித்தேன் மனத்தினின் கோலமெல் லாநின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றை
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. [மெய்யிற்

(இ - ள்.) வண்டு கிண்டி வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒரு கூற்றை - வண்டுகள் குடைதலினாலே மணம் பொருந்திய தேன் ஒழுகப்பெறும் கொன்றை மாலையை அணிந்த சடையையுடைய சிவபிரானது ஒரு பாகத்தை, மெய்யில் பறித்துக் குடி புகுதும் பஞ்சபாண பயிரவியே - அவரது திருமேனியினின்றும் வலிதிற் கவர்ந்து அதன்கட் குடிபுகுந்தருளிய ஐந்து மலர்க்கணைகளையுடைய அபிராமிதேவியே, நின் கோலம் எல்லாம் மனத்திற் குறித்தேன் - நின்னுடைய திருக் கோலங்களை எல்லாம் என் மனத்திலே எஞ்சாது எண்ணி வழிபட்டேன், நின்குறிப்பு அறிந்து - அங்ஙனம் வழிபட்ட தமியேன் நின்னுடைய உடம்பாட்டுத் திருவுள்ளக் குறிப்பை அறிந்து, மறலி வருகின்ற வழி நேர் மறித்தேன் - இயமன் வருகின்ற சாவு வழியை நேர் நின்று தடுத்துவிட்டேன். இஃதொருதலை, எ - று. துணிவு பற்றி எதிர்காலம் இறந்தகாலமாயிற்று.

(கு - ரை.) பிருங்கி முனிவர் தன்னை வலஞ்செய்து வணங்காது சென்றமையை உணர்ந்து வருந்திய இறைவி இறைவனொடு ஒருடலாக இருத்தலே தக்கதாமெனக் கருதிக் கடுந்தவம் புரிந்து பாதியுடலைப் பெற்றனளாகலின் "ஒரு கூற்றை மெய்யில் பறித்தே குடிபுகுதும்" என்றார். அபிராமி தேவியே! நின்னை உள்ளங்கால் முதல் உச்சிவரை எஞ்சாது மனதிலெண்ணி வழிபட்ட தமியேன்மாட்டு உன் திருவருளான் யமன் ஒருபோதும் வரற்பாலனல்லன்; இஃதன்றோ என்றுணிபென்பதாம். (எக)

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்ச
ருயிரவி யுண்ணு முயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே

(இ - ள்.) பயிரவி - அச்சந் தருபவளும், பஞ்சமி - எங்கும் பரவுதலை யுடையவளும், பாச அங்குசை - பாசக் கயிற்றையும் யானைத் தோட்டியையும் உடையவளும், பஞ்ச பாணி - ஐந்து கணை யுடையவளும், வஞ்சர் உயிர் அவி உண்ணும் உயர்சண்டி - திக்

குணம் முதலியன உடையவர்களது உயிர்ப்பலியை யுண்ணும் மிக்க சினத்தையுடையவளும், காளி - கருநிறமுடைமையிற் காளியும், ஒளிரும் கலா வயிரவி - விளங்கும் கலைகளின் வீரத்தையுடையவளும், மண்டலி - மண்டலத்தையுடையவளும், மாலினி - மலினத்தையுடையவளும், சூலி - சூலத்தையுடையவளும், வராகி என்று - வைணவியுமென்று, செயிர் அவி நால்மறை சேர் திருநாமங்கள் செப்புவர் - குற்றமற்ற நான்கு மறைகளினுமுள்ள அபிராமிதேவியின் திருப்பெயர்களை மெய்யன்பர் சொல்லித் துதியா நிற்பர், எ - று.

(கு - ரை.) பஞ்சம் - விரிவு. மலினம் - கறுப்பு. வராகி - வராகசம்பந்தமுடையவர் என்றது, திருமாலைச் சேர்ந்து நின்று காத்தற் றொழிலை நிகழ்த்தும் வைணவியை. இது வாராகி எனவும் வரும். மாலினி - மாலையை அணிந்தவள். சூலி - சூலப்படையை உடையவள்.

ஈண்டுக் கூறிய பெயர்களுட் சில தேவியின் வேடிக்கைப் பெயர்களாகியும், சில தேவியின் கூறுபாட்டுத் தொடர்புடையவர்களாகிய உறுதிச் சுற்றச் சத்திகளின் பெயர்களாகியும் அத்தேவியை உணர்த்துவனவாமென்று அபிராமிதேவியின் மெய்யன்பர் சொல்லிப் போற்றுவார்களாகலின் யானும் அங்ஙனமே போற்றுவேன் என்பதாம். (எஎ)

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமே
லப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையுந்
துப்புநிலவு மெழுதி வைத் தேனென் றனைவிழிக்கே.

(இ - ள்.) செப்பும் கனக கலசமும் போலும் - மாணிக்க மணிக்குடத்தையும் பொற்குடத்தையும் போன்ற, திருமுலைமேல் அப்பும் களப அபிராமவல்லி அணி - திருமுலைகளின்மீது சாத்தும் மணவகைக் கலவைகள் பொருந்திய அபிராமிதேவிக்குத் தெய்வச்சேடியர் கைபுனைந்த அணிகலன்களாகிய, தரளக் கொப்பும் - தரளத் தொங்கலையுடைய கொப்புவாளியையும்,

வயிரக்குழையும் - வயிரத் தோட்டையும், விழியின் கொழுங் கடையும் - அத் தேவியின் திருக்கண்களின் மதர்த்த கடைகளை யும், துப்பும் - பவளம் போலும் திருவாயினையும், நிலவும் - திருப் புன்னகையாகிய நிலவொளியையும், என் துணை விழிக்கு எழுதி வைத்தேன் - தமியேன் என்னிரு கண்களிலும் எழுதி வைத்தாற் போல உறைப்ப எண்ணி வைத்துக்கொண்டேன், எ - று.

(கு - ரை.) விழிக்கென்னும் நான்காவது தகுதிபற்றி ஏழா வதன் இடப்பொருட்கண் வந்தது.

நம்மவர்களே, நீவிரும் அவ்வபிராமிதேவியினது திருமுகச் செவ்வியை அவ்வாறு மனத்திலுறுதியுற எண்ணிப்பதித்து வைமின்கள், அவ்வாறு பதித்துவைப்பின் எல்லா நலங்களும் நம்மையடைதல் ஒருதலையாகலின் இவ்வாறு செய்தல் இன்றி யமையாததென்பதாம். (எஅ)

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

(இ - ள்.) அபிராம வல்லிக்கு விழிக்கே அருள் உண்டு - அபிராமிதேவிக்குத் திருக் கண்களின்கண்ணே திருவரு ளிருக்கின்றது, வேதம் சொன்ன வழிக்கே வழிபட எமக்கு நெஞ்சு உண்டு - மறைகள் செய்க என்று விதித்த நன்னெறியின் கண்ணே நின்று அத் தேவியை வழிபாடு செய்தற்கு எமக்கு மனமாகிய கருவியிருக்கின்றது, அவ்வழி கிடக்க - அந் நன்னெறி யிருக்கவும், பழிக்கே சுழன்று - இம்மையிலே பழிக்கப்படும் கொலை முதலிய செயலின்கண்ணே மனம் சுழன்று, வெம்பாவங் களே செய்து - கொடிய தீவினைகளையே இடையறாது செய்து, பாழ் நரகக் குழிக்கே அழுந்தும் கயவரோடு இனி என்ன கூட்டு - ஒரு பயனுமற்ற நிரயக் குழியின்கண்ணே விழுந்தழுந்து கின்ற கீழ்மக்களோடு இனி எமக்கென்ன கூட்டுறவு, எ - று.

(கு - ரை.) மறைவிலக்கை விதியெனக் கொண்டு கடைப் பிடித்து இருமையின்பங்களையு மிழந்து நிரயக் குழியின்கண்ணே விழும் கீழ்மக்களோடு கூடுதல் நல்லோருக்கு ஒரு சிறிதும் அடாது, என்பதாம்.

இருமையின்பங்களையும் ஒருங்கிழந்து பாழாகிய நிரயக் குழியின்கண்ணே வீழ்ந்தழுந்துமாறு பழிச்சொற்களைச் சரபோசி ராசாவினிடைப் பாராட்டிய இழிதொழில் பார்ப்பன மக்களோடு இனி எமக்கென்ன கூட்டுறவென்று, இவ்வாறு ஆசிரியரது வரலாற்றோடொட்டியுமுரைத்துக் கொள்க. (எக)

கூட்டிய வாவென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
யோட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்
[ணங்
காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா
வாட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே.

(இ - ள்.) ஆடகத் தாமரை ஆர் அணங்கு - பொற்றாமரை மலரில் வீற்றிருக்கின்ற அருமையாகிய அபிராமிதேவி, என்னைத் தன் அடியாரில் கூட்டியவா - தமியேனைத் தன்னுடைய மெய்யடியார் கூட்டத்தில் ஒருவனாகச் சேர்த்தருளியவாறும், கொடிய வினை ஓட்டியவா - கொடிய என்னிரு வினைகளையும் துரந்தருளியவாறும், என் கண் ஓடியவா - என்னிடத்து விரைந்தோடி வந்தருளியவாறும், தன்னை உள்ள வண்ணம் காட்டியவா - தன்னை உள்ளபடி நனவிலே என் கண்களுக்குக் காட்டியருளியவாறும், கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா-தம்மைக் கண்ட என் கண்களும் எண்ணிய மனமும் களிகூருகின்றவாறுமாக, நாடகம் ஆட்டியவா - தமியேனைத் திருவருணாடகமொன்று ஆட்டியருளிய வாறு சாலவும் வியக்கற் பாலதேயாம், எ - று.

(கு - ரை.) அபிராமிதேவி பூனை நியாயமாகத் தாமே வலிய எழுந்தருளிவந்து தமியேனைப் பலதிறத்தானும் ஆட்கொண்டருளினமை சாலவும் வியக்கற் பாற்றென்பதாம். பூனை நியாயமாவது குட்டிகள் தாயை எண்ணாது ஓரிடத்திற் கிடப்பினும் தாய்ப்பூனை அக் குட்டிகளை வாயிற்கவ்விச் சென்று பாதுகாத்தல்.

இனிய இச் செய்யுளை ஆசிரியர் தமக்குத் திங்கள் தோன்றல் துன்பம் நேர்ந்தவழி அதன் நீக்கத்தின் பொருட்டுத் தேவி தோன்றிய காலத்தில் பாடியருளியதென அவ்வாசிரியர் வரலாற்றேடொட்டிப் பொருள் கொள்ளுங்கால், அணங்கே என்பதனை விளியாக்கியும், தன் என்பனவற்றை முன்னிலைப் புறமொழிகளாக்கியும், கொடியவினை என்பதைச் சரபோசி அரசனால் நேர்ந்த துன்ப வினையாக்கியும், நடமாட்டியவா என்பதற்கு என் உண்மைகளை வெளிப்படுத்துதற்கே இவ்விடுக்கண் வினையொன்றை வருவித்து நடித்துக் காட்டியவாறுமாமெனவு முரைத்துக்கொள்க. இது தேவி திருத்தோட்டை வீசிய போது பாடியது. (௮௦)

அணங்கே யணங்குக ணின்பரி வாரங்க ளாகையினால்
வணங்கே னொருவரை வாழ்த்துகிலே னெஞ்சில்
[வஞ்சகரோ
டிணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரளியே.

(இ - ள்.) அணங்கே - அபிராமிதேவியே, அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால் - ஏனைச் சத்திகள் நின்னை வணங்கும் உறுதிச் சுற்றத்தினர்களாதலினால், ஒருவரை வணங்கேன் வாழ்த்துகிலேன் - அச் சத்திகளுள் ஒருவரையும் தமியேன் வணங்குதலும் வாழ்த்துதலுஞ் செய்யேன், நெஞ்சில் வஞ்சகரோடு இணங்கேன் - முற்கூறிய மனக் கபடிகளோடு ஒரு போதும் கூட்டுறவு கொள்ளமாட்டேன், அறிவு ஒன்று இலேன் - தமியேன் நல்லறிவு சிறிது மிலனாயினும், என்கண் நீ வைத்த பேர் அளி - தமியேன்மாட்டு நீ செய்துவைத் தருளிய பேரருட்டிறத்தினால், எனது (என்றிருப்பார் சிலர்) - நின்னை என் உரிமைப் பொருள் என்று தனித்தனி மதித்திருப்பார் சிலரும், உனது என்று இருப்பார் சிலர் - அப்பொருள் உன் உரிமைப் பொருள் என்று தனித்தனி சொல்லியிருப்பார் சிலருமாகிய, யாவரொடும் பிணங்கேன் - மெய்யடியார் அனைவரோடும் யான் கலாம் விளைக்காது கூட்டுறவு செய்திருப்பேன், எ - று.

(கு - ரை.) எனதுன தென்றிருப்பார் சிலர் யாவரொடும் பிணங்கேன் என்பதற்கு, இவ்வாறன்றி என்னுடல் பொருளாவி யாகிய மூன்று சுதந்திரப் பொருளும் தேவியாகிய உன்னுடைய சுதந்திரப் பொருளே என்று கொடுத்துவிட்டிருக்கும் மெய்ஞ் ஞானிகளாகிய சிலருடன், கலாம் விளைக்க மாட்டேன் எனப் பொருள் கோடலு மொன்று.

அபிராமிதேவியே, நின்னையும் நின்னுடைய மெய்யடியாரை யும் உம்முடைய திருவருள்வாயிலாக வணங்கி வாழ்த்தி அன்பு செய்வதல்லது மற்றொருவரோடும் அன்பு செய்யேன் என்பதாம். பெண்தெய்வங்களுள் தனிப்பெருந் தெய்வமாக விளங்குபவள் நீயே யாகலின் நின்னையன்றி வேறொரு பெண் தெய்வத்தையும் வணங்கேன் என்பது குறிப்பு. (அக)

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுநின்
ஞௌளியாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுதோறுங்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே.

(இ - ள்.) அளி ஆர் கமலத்தில் ஆர் அணங்கே - வண்டுகள் மொய்க்கின்ற வெண்டாமரை செந்தாமரை மலர்களில் வீற்றிருக்கும் அபிராமிதேவியே, அகில அண்டமும் நின் ஒளி ஆக நின்ற ஒளிர் திருமேனியை - எல்லா உலகங்களும் நின்னுடைய ஒளிக்குள் அடங்குவனவாக நிலைபெறுகின்ற, ஒளி பொருந்திய உம்முடைய திருமேனியை, உள்ளுதொறும் - தமி யேன் எண்ணுந்தோறும், அந்தக் கரணங்கள் களி ஆகி விம்மிக் கரை புரண்டு வெளியாய்விடின் - என் உட்புறக் கருவிகள் இன்பப் பெருக்கில் களிகூர்வனவாகிப் பொருமி ஏனைத் தத்துவக் கரைகளைக் கடந்து மேலான வெளியாய் அதீதநிலையை அடைவனவாயொழியின், நின் விரகினை எங்ஙனே மறப்பேன் - நின்னுடைய மிகு நுட்பச் சூழ்ச்சியை எவ்வாற்றால் தமியேன் மறக்கற்பாலேன், எ - று.

(கு - ரை.) தேவியின் திருவுருவை உள்ளத்தில் எண்ணுதலால் உண்டாகும் பேரின்பம் மறக்கத்தக்க தன்று என்பதனை இதனாற் குறிப்பித்தார். நின்ற திருமேனி, ஒளிர் திருமேனி எனத் தனித்தனி கூட்டுக. அந்தக் கரணங்கள் உட்கருவிகளாகிய மன முதலியன. இவற்றை மனப் போற்றுதலுக்கு மட்டுமே கருவியாக நிறுத்திக் கொண்டு, பிற காரியங்களிற் பற்றவிடாமல் மேலான நிலையில் வைத்தருளிய நினது சூட்சும வழியை எண்ணி எண்ணி மகிழ்வதல்லது மறத்தல் யாண்டையது என்பதாம். (அ௨).

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமல
மிரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியு
முரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே.

(இ - ள்.) நின் விரை பாத கமலம் விரவும் புதுமலர் இட்டு - அபிராமிதேவியே, நின்னுடைய நறுமணங்கமழுந் திருவடித் தாமரைமலர்களுக்குத் தேன் பொருந்திய அன்றலர்ந்த புதிய மலர்களால் வழிபாடு செய்து, பகலும் இரவும் இறைஞ்ச வல்லார் - பகலினும் இரவினும் அத் திருவடிகளை வணங்கி வழிபட வல்லுநராகிய அடியவர்கள், இமையோர் எவரும் பரவும் பதமும் - தேவர்கள் அனைவரும் போற்றும் விண்ணுலக பதத்தையும், அயிராவதமும் - அயிராவதயானையையும், பகீரதியும் - விண்ணகத்துள்ள கங்கையாற்றையும், உரவும் குலிசமும் - வலிமை பொருந்திய வச்சிரப்படையையும், கற்பகக்காவும் - கற்பகச் சோலையையும், உடையவரே - உடைய இந்திரரே யாவர், எ - று.

(கு - ரை.) ஆக்கச்சொற் றொக்குநின்றது. பரவல் - பரவியிருத்தலுமாம்.

அபிராமிதேவியே, நின்னுடைய திருவடிகளை மறுமையின்பங் குறித்து இம்மையிலே பூசனை செய்து வழிபடுகின்ற அடியவர்கள் விண்ணுலக முதலிய பத்து அங்கங்களையு முடைய இந்திரராதல் ஒருதலை, என்பதாம். (அ௩).

உடையாளை யோல்குசெம் பட்டுடை யாளை
யொளிமதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூ
லிடையாளை யெங்கள்பெம் மானிடை யாளையிங்
கென்னையினிப்
படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.

(இ - ள்.) உடையாளை - தமியேனை அநாதியே அடிமையாக வுடையவளும், ஒல்கு செம்பட்டு உடையாளை - துவளுகின்ற (திருமருங்கிலே) சிவந்த பட்டுடையினை யுடையவளும், மதிஒளிர் செம் சடையாளை - பிறைத் திங்கள் விளங்கும் சிவந்த சடையினை யுடையவளும், வஞ்சகர் நெஞ்சு அடையாளை - கபடிகளது மனத்தை அடையாதவளும், தயங்கு நுண் நூல் இடையாளை - விளங்குகின்ற நுட்பமாகிய நூல்போன்ற சிறிய இடையினையுடையவளும், எங்கள் பெம்மான் இடையாளை - எம்முடைய சிவபெருமானது இடப்பாகத்தையுடையவளும், என்னை இனிப் படையாளை - தமியேனை இனிப் படையாதவளும், (ஆகிய அபிராமிதேவியை), உங்களையும் படையாவண்ணம் இங்குப் பார்த்தே இரும் - நம்மவர்களே! உங்களையும் படைக்காதபடி அத்தேவியை இம்மையிலே எண்ணிக் கொண்டேயிருங்கள், எ - று.

(கு - ரை.) ஒல்கு என்னும் வினைக்குறிப்போடு இடையென்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது; கொய்சகமாகச் சுருக்கிவிடப்பட்ட செம்பட்டுடை எனினும் அமையும். இடை - இடப்பக்கம். பிராசம் - சந்தம், வகையுளியாவது ஒருசொல் பிளவுபட்டு, நின்ற சீர்ற்றினும் வருஞ்சீர் முதலினும் சேர்வது.

அபிராமிதேவி இம்மையிலே வீடுபேற்றைக் குறித்துத் தன்னை எப்பொழுதும் எண்ணி வழிபடும் மெய்யடியார்களுக்கு அவ் வீடுபேற்றைக் கொடுத்தலும் ஒருதலை எனக் கூறி, ஏனையோரையும் அவ்வாறு செய்து வீடுபேறடையக் கடவீரெனத் தந் துணிபுரைத்து வற்புறுத்தியவாறு. (அச)

பார்க்குந் திசைதோறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாந்
தீர்க்குந் திரிபுரை யாடிரு மேனியுஞ் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே.

(இ - ள்.) பார்க்கும் திசைதொறும் - தமியேன் நோக்குந் திசைகடோறும், என் அல்லல் எல்லாம் தீர்க்கும் திரிபுரையாள் - என் பிறப்பு இறப்புத் துன்பங்கள் பலவற்றையும் நீக்கும் திரிபுரசுந்தரியினது, திருமேனியும் - திருமேனியும், சிற்றிடையும் - சிறுமையாகிய திருமருங்குலும், வார்க் குங்கும முலையும் - கச்சணிந்த குங்குமக்கோலத்தையுடைய திருமுலைகளும், முலைமேல் முத்துமாலையும் - அத்திருமுலைகளின்மீது தங்கிய முத்துமாலையும், பாச அங்குசமும் - கயிறு தோட்டி ஆகியவையும், கரும்பும் - கருப்புவில்லும், சிறைவண்டு ஆர்க்கும் பனி புதுமலர் ஐந்துமே - சிறகுகளையுடைய வண்டுகள் ஒலிக்கும் குளிர்ச்சி பொருந்திய புதிய மலர்க்கணைகளைந்துமே தோன்றுகின்றன, எ - று.

(கு - ரை.) தோன்றுகின்றன என்னும் பயனிலை அவாய் நிலையான் வருவிக்கப்பட்டது. இறைவியை மிகுதியாக உள்ளத்தில் எண்ணிய பயிற்சியால் பார்க்குந் திசைதொறும் அவளுடைய திருமேனி வடிவமே தோன்றுவதாயிற்றென்க.

அன்பு மிகுதியோடு உறைப்ப எண்ணும் எண்ணப் பயிற்சிவயத்தான் உளதாகிய அம்மையின் தோற்றமே பார்த்த விடமெங்குந் தோன்றுகின்றதென ஆசிரியர் தாம் கண்ட பயன் கூறியவாறு. (அஉ)

மாலயன் றேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும் போது
வெளிநில்கண்டாய்
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே.

(இ - ள்.) பாலையும் தேனையும் பாகையும் போலும் பணி மொழியே - பசுவின் பாலையும் கொம்புத் தேனையும் சர்க்கரைப் பாகையும் போலும் பணிவைப் புலப்படுத்தும் இனிய சொற்களை யுடைய அபிராமிதேவியே, வெம் காலன் கதித்த கப்புவேலை என்மேல் விடும்போது - கொடிய யமன் கொலைக் கருவிகளுக்குள் மேம்பட்ட முத்தலை பொருந்திய சூலவேலை என்மேற் செலுத்தும் போது, மால் அயன் தேட - திருமாலும் நான் முகனும் தேடவும், வானவர் தேட - மற்றைத் தேவர்கள் தேடவும், மறை தேட நின்ற - மறைகள் தேடவும் அப்பாற்பட்டு நின்ற, காலையும் - அருமைத்திருவடிகளையும், சூடகக் கையையும் கொண்டு - சங்கவளையல்களை யணிந்த திருக்கைகளையு முடன் கொண்டு, வெளி நில் - என்முன் வெளிவந்து நின்றருளும், எ - று.

(கு - ரை.) கண்டாய் என்பது முன்னிலையசை. உயிர் களைப் பிடித்தற்கு நமனும் படைக்கலஞ் செலுத்துவான் என்னுங் கோட்பாடுகொண்டு "கதித்த கப்புவேலை வெங்கால னென்மேல் விடும் போது" என்றார். அருணகிரிநாதரும் "சூலம் பிடித்தெம பாசஞ்சுழற்றித் தொடர்ந்து வரும் காலன்" என்றார்.

யமனைப் புடைத்தற்குக் கையையும் உதைத்தற்குக் காலையும் உடன்கொண்டு வரும்படி அவ்விரண்டையும் விதந் தெடுத்து வேண்டிக் கொண்டனர் என்க. இனிக் கையையுங் கொண்டு என்பதற்கு, குற்றுதற்குக் கையின்கட் சூலத்தையும் கொண்டு என ஆகுபெயராக்கி யுரைப்பினு மமையும். பணி மொழி எனவும் பாடம்.

அபிராமிதேவியே, என் இறுதிக்காலத்தில் யமனைத் தண்டிக்கும் கருவிகளோடும் என்முன் வெளிவந்து நின்றருளும் என்பதாம். (அக)

மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்றிரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
யழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே.

(இ - ள்.) விழியால் மதனை அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை - நெற்றிக்கண்ணால் காமனை எரித்தழித்த சிவன் தலைவருடைய மற்றொருவராலும் அழிக்கத் தகாத யோகத்தை, அண்டம் எல்லாம் பழிக்கும்படி ஒருபாகம் கொண்டு ஆளும் பராபரையே - எல்லா உலகத்தவர்களும் பழித்துரைக்கும்படி அவரது வாமபாகத்தைக் கைக்கொண்டு வசஞ்செய்த மாயைக்கு அப்பாற்பட்டவளாகிய அபிராமி தேவியே, மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி - திருமால் நான்முகன் முதலிய தேவர்களது வாக்கிற்கும் நினைவுக்கும் அப்பாற்பட்ட நின்னுடைய திருமேனி, என் விழிக்கும் வினைக்கும் வெளி நின்றது - தமியேனது ஊனக்கண்களுக்கும் சிற்றறிவுச் சிறு பூசனைத் தொழிற்கும் எளிவந்து வெளிப்பட்டு நிற்கின்றது. இஃதென்னைகொ லற்புதம் !!, எ - று.

(கு - ரை.) மூர்த்தி - திருமேனி. சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டாத இறைவியின் திருவடிவம் எண்ணுதல் முயற்சியின் திண்ணிய வலியால் எதிர்ப்பட்டு நின்றதாகலின் இவ்வாறு "வெளி நின்றதால்" என்று கூறினர்.

எத்துணையும் உயர்ந்த உமது திருமேனி எத்துணையும் தாழ்ந்த தமியேனின் ஊனக்கண்களுக்குப் பூசாகாலத்தில் எளிவந்து வெளிநின்றருளியது பெரிதும் வியக்கற்பால தொன்றே என்பதாம். (அஎ)

பரமேன் றனையடைந் தேன்றமி யேனுமுன் பத்தருக்குட்
டரமன் றிவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே.

(இ - ள்.) தரியலர் தம் புரம் அன்று எரிய - பகைவர்களாகிய அரக்கர்களின் முப்புரங்களும் அக்காலத்தில் தீப்பற்றி எரியுமாறு, பொருப்பு வில் வாங்கிய - மேருமலையை வில்லாக வளைத்த, போதில் அயன் சிரம் ஒன்று செற்ற கையான் - செந்தாமரைப்பூவிலிருக்கின்ற நான்முகனது தலைகளிலொன்றை

கத்தால் கிள்ளி யழித்த திருக்கையையுடைய சிவபெருமானது, இடப்பாகம் சிறந்தவளே - வாமபாகத்தின்கட் சிறந்து வீற்றிருக்கின்ற அபிராமிதேவியே, தமியேனும் பரமென்று உன்னை அடைந்தேன் - தமியேனும் என் பாரம் முழுவதும் உன்னுடைய பாரமேயென்று உனக்கொப்புவித்து உன்னை அடைக்கலமாக அடைந்தேன் ஆகலின், உன் பத்தருக்குள் இவன் தரம் அன்று என்று தள்ளத் தகாது - அவ்வாறு சரணடைந்த தமியேனை நின்னுடைய மெய்யன்பர்களுட் சேர்த்தற்கு இவன்றகுதியுடையவனல்லனென்று தள்ளிவிடின், அது உன் திருவருட்பெருமைக்குத் தகாது, எ - று.

(கு - ரை.) தள்ளின் என்பது தள்ள எனத் திரிந்து நின்றது. தம்மென்பது கட்டுரைச்சுவைக்கண் வந்தது. வாங்கிய கை, செற்றகை எனத் தனித்தனி முடிக்க. பரம் - பாரம்; என்றது, உடல் பொருளாவி மூன்றையும். இனிப் பரமென்பதற்குப் பரம் பொருள் என்று உரைப்பாருமுளர். தமியேனுமென்னுஞ் சிறப்பும்மை எச்சமுமாய் நின்றது. தள்ளப்பெறுதரியா வவுணர் எனவும் பாடம்.

தள்ளிவிடின், தமியேன் அதோகதி யடைவேனுதலின், அது நின்னுடைய திருவருட்பெருமைக்குத் தகாது என்பதாம். (அஅ)

சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
வுறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென் முன்னேவரல் வேண்டும் வருந்தியுமே.

(இ - ள்.) சிறக்கும் கமலத் திருவே - நால்வகைப் பூக்களுள்ளும் சிறந்து விளங்கும் செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகளைப் பொருந்தி நின்றருளும் அபிராமிதேவியே, நின் சேவடி சென்னிவைக்கத் துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும் - உன்னுடைய சிவந்த திருவடியைத் தலையில் வைத்து அருள்செய்தற்குப் பக்குவம்வரும் பொருட்டுத் தம்மன்பர்களுக்கு இருவகைப் பற்றும் துறத்தலைத் தந்தருளும் உன் ஆருயிர்த் தலைவராகிய

சிவபெருமானும் நீயுமாக, உடம்போடு உயிர் உறவு அற்று அறிவு மறக்கும் பொழுது - என் உடம்பும் உயிரும் தொடர் பற்று, அறிவு நும்மிருவரையும் மறக்கப்புகும் இறுதிக் காலத்தின்கண்ணே, துரியம் அற்ற உறக்கம் தர வருந்தியும் வந்து - மேலான நிலையின்கண்ணுள்ள ஆன்மபோதமற்ற சிவானு போகத் தூக்கத்தைத் தமியேனுக்குத் தந்தருளும்பொருட்டுத் திருவடி வருந்தியும் எழுந்தருளிவந்து, என் முன்னே வரல் வேண்டும் - தமியேனுக்கெதிரே நெருங்குதல் வேண்டும், எ - று.

(கு - ரை.) சிறக்குங்கமலம் நெஞ்சக்கமலம் எனினுமமையும். துறக்கம் - ஈண்டுத் துறத்தல். அபிராமிதேவி திருவடித் தீக்கை செய்தற்கு நல்ல பக்குவம் வரும்பொருட்டுச் சிவபெருமான் தம் மன்பர்களுக்கு இருவகைப் பற்றறுதியையும் கொடுத்தருளுவர் என்றது, அவ்விருவரும் வேறல்லர், உண்மைநிலையை உற்று நோக்குங்கால் ஒருவரே என்பது விளக்குதற்பொருட்டே யாமென்க. மறக்கும்பொழுது என்முன்னே வரல்வேண்டு மெனவே, அங்ஙனம் வரின், மறவாமலே இவ்வுயிர் உடம்பை விட்டு நீங்கும் என்பதும், அதனுன் வீடுபேறு உண்டாகும் என்பதும் தமதுட்கோளாகக் கொண்டிங்ஙனங் கூறினுர் என்பது பெற்றும். (அக)

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொது ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே.

(இ - ள்.) வேலை மருந்தானதை - பாற்கடலிலே தோன்றிய எய்துதற்கரிய அமிர்தமானதை, விண் மேவும் புலவருக்கு விருந்தாக நல்கும் மெல் இயல் - சுவர்க்கலோகத்தி லிருக்கும் தேவர்களுக்கு இத் திருக்கடவூரிலே விருந்தாகக் (திருமால்) கொடுத்தற்குத் தாம் முதன்மையான காரணத்தையுடையவளான அபிராமிதேவி, வருந்தாவகை - யான் இனிப் பிறப்பு இறப்புகளில் அகப்பட்டு வருந்தாத வகை, என் மனத் தாமரையினில் வந்து - என் உள்ளத் தாமரையின்கண்ணே எழுந்தருளிவந்து,

பழைய இருப்பு இடமாகப் புகுந்து இருந்தாள் - பழைய உறைவிடமாக இடமே இதன்கட் புகுந்து இருந்தருளினுள், இனி எனக்குப் பொருந்தாது ஒரு பொருள் இல்லை - அதனுல் இனி எனக்குக் கிடைக்காத தொரு பொருளுமில்லை, எ - று.

(கு - ரை.) உள்ளத் தாமரையும் முன் பொதுவான பரவுதலுக் கிடமாகவிருந்து பின் சிறப்பான பரவுதலுக்கிடமாகுகை பற்றி, அதனைப் பழைய இருப்பென்றும், இனிப் பரமுத்தியும் எய்துதற்கரிய தொன்றன்றென்பார் பொருந்தாதொரு பொருளில்லை யென்றுங் கூறினர். பொருந்தாதது என்னும் வினையாலணையும் பெயர் விகாரவகையாற் பொருந்தா தென்ருயிற்று. முற்றும்மை விகாரத்தாற் ருெக்கது. திருக்கடவூரிலே தேவர்களுக்குத் திருமால் அமிர்தம் பகிர்ந்து கொடுத்தற்கு அபிராமி தேவி முதன்மையான காரணராயிருந் தருளிய வரலாற்று விரிவை அத் தலபுராணத்துட் காண்க. ஈண்டு விரிக்கிற் பெருகும். ஒருவருக்குத் தெய்வத்திருவருள் கைவந்து விடுமாகில் அவர்கள் எண்ணிய எண்ணமெல்லாம் இனிது நிறைவேறுமாகவின் "பொருந்தாதொரு பொருளில்லை" என்ருர்.

அபிராமிதேவி என்னுள்ளத்திற் பாலினெய்போலப் பொதுவான நிறைவன்றித் தயிரினெய்போலச் சிறப்பான நிறைவாக வீற்றிருத்தலின், யான் இனி வீடுபேறெய்துதல் ஒருதலை என்பதாம். (௧௦)

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணந் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே.

(இ - ள்.) மெல்லிய நுண் இடை மின் அனையாளை - மிருதுவாகிய நுண்ணிய திருமருங்குல் மின்னற்கொடி போல்பவளும், விரிசடையோன் புல்லிய மெல்முலை பொன் அனையாளை - விரிந்த சடையினையுடைய சிவபெருமான் தழுவுகின்ற மென்மையாகிய திருமுலை பொற்பிதிர் போல்பவளுமாகிய அபிராமிதேவியை,

மறை புகழ்ந்து சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்கு - மறைகள் போற்றிக் கூறியபடி வழி படும் அடியவரை வழிபடும் அவ்வடியார்க் கடியவர்க்கு, பல் இயம் ஆர்த்து எழ வெண் பகடு ஊரும் பதம் தரும் - பல ஒலிக்கருவிகள் ஒலித்தெழா நிற்ப வெண்ணிறம் பொருந்திய வெள்ளை யானையை ஊர்தியாகக் கொண்டு செலுத் தும் இந்திரபதத்தை அத் தேவி கொடுத்தருளுவர், எ - று.

(கு - ரை.) எழ ஊருமென முடிக்க. பொன் : ஆகுபெயர். இடையின் அனையாள் எனவும், முலைபொன் அனையாள் எனவும், சினைவினைகள் முதன்மேனின்றன. அவ்வணக்கந் தருமென வருவித்து எழுவாயாகக் கோடலு மொன்று. பல்லியத்தை ஒரு சொல்லெனக் கொள்ளினும் அமையும்.

அபிராமி தேவியானவள் தன்னடியவர்கட்கேயன்றி அடியவர் களின் அடியவர்கட்கும் மேலான நிலையை வழங்குவாள் என இவ்வாறு கூறினார். (கக)

பதத்தே யுருகிநின் பாதத்திலே மனம் பற்றியுன்ற
னிதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யானொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே.

(இ - ள்.) முதத்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ் நகையே - முத்தொழில் மகிழ்ச்சியுடைய தேவர்களாகிய முக்கடவுளர்களும் மற்றை யனைவரும் வணங்கிப் போற்றுதற் கேதுவாகிய திருப்புன்னகையையுடைய அபிராமிதேவியே, மனம் பதத்து நின்பாதத்தில் உருகிப் பற்றி - என்மனம் பக்குவப் பட்டு நின்னுடைய திருவடிகளிலே நெக்குநெக்குருகி அவாவி, உன் இதத்தே ஒழுக அடிமை கொண்டாய் - உன்னுடைய திருவருள்வழி நிற்றலாகிய உரிமை நெறியின்கண்ணே ஒழுகு மாறு அடித்தொண்டு கொண்டருளினாய் ஆதலான், இனி ஒருவர் மதத்தே மதிமயங்கேன் - இனித் தமியேன் மற்றொருவருடைய சமயத்தின்கண்ணே அறிவு மயங்கேன், அவர் போன வழியும்

செல்லேன் - அப் பிற சமயத்தவர் போன வழியினும் பிரவேசியேன், எ - று.

(கு - ரை.) ஈண்டுப் பக்குவப்படுதல் உலகத்தை உவர்த்து விடுதலின் மேற்று. இதம் - உரிமைப்பாடு. முதம் - மகிழ்ச்சி; "புந்தியின் முதமெய்தி, இந்திரன்றிருப்பெற்றிடு ஞான்றினு மினிதுற்றான்" என்பதனானுமறிக. முதற்றேவர் எனவும் பாடம்.

அபிராமிதேவியே, நீ பூர்ண நியாயமாக வந்து தமியேனை வலிய அடிமைகொண்டமையினால், இனித் தமியேன் மற்றொரு கடவுளது பிறசமயத்தில் அறிவு மயங்கி ஒருபோதும் நுழையேன் என்பதாம். (கூஉ)

நகையே யிஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுகா
மிகையே யிவடன் றகைமையை நாடி விரும்புவதே.

(இ - ள்.) இந்த ஞாலம் எல்லாம் பெற்ற நாயகிக்கு - இவ் வுலகங்களை யெல்லாம் பெற்றருளிய அனைத்துலகத் தலைவி யாகிய அபிராமிதேவிக்கு, முகிழ்முலை முகையே - திருமார்பில் அரும்பிய திருமுலைகள் செந்தாமரையின் பேரரும்புகளே, முது கண் மானே - பழைமையாகிய திருக்கண்கள் மருண்ட மானேக் கமே, முடிவில் இஃது நகையே - என்றிங்ஙனங் கூறுவது சைவ சித்தாந்தமாகிய முடிவின்கண் நகைப்புக்கிடமேயாம், அந்த வகையே பிறவியும் வம்பே - அந்தப்படியே அவர் பிறப்பும் பொய்யேயாம், ஆதலால், நாம் மலைமகள் என்பதும் மிகையே - அத் தேவியை நாம் மலையரையன்மகள் என்பதும் குற்றமேயாம், இவள் தகைமையை நாடி விரும்புவதே - மற்றென்னையோ செயற்பாலதெனின்? அஃது, இத்தேவியின் உண்மைத் தன்மையை முதனூல்களாற் பயனறிந்த தேசிகர்பால் ஆராய்ந்து மேலும் மேலும் விருப்பங்கூர்வது ஒன்றுமேயாம், எ - று.

(கு - ரை.) வம்பு - நிலையின்மை.

அபிராமிதேவிக்குக் கவிஞர் உருவகவுவமை முதலியவற்றாற் புனைந்துரைப்பன வெல்லாம் கற்பனையாகலின், அக் கற்பனைகளைக் களைந்து முதனூல்கள் வாயிலாக அத் தேவியின் உண்மை நிலையை உள்ளபடியறிந்து மேலும் மேலும் அவ்வம்மையிடத்து அன்புகூர்வ தொன்றுமே செய்துகோடற் பாலது என்பதாம்.

(கஅ)

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளக
மரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாம்
தரும்பித்த ராவரேன் றாலபி ராமி சமயநன்றே.

(இ - ள்.) விரும்பித் தொழும் அடியார் - தம்மை விரும்பி வழிபடும் மெய்யடியார்கள், விழிநீர் மல்கி - கண்களிலே இன்பக் கண்ணீர் பெருகியும், மெய்புளகம் அரும்பி - உடல் மயிர் சிலிர்த்தலாகியும், ததும்பிய ஆனந்தம் ஆகி - நிறைந்து வழிகின்ற இன்பப் பெருக்காகியும், அறிவு இழந்து - ஆன்ம போதமிழந்தும், சுரும்பில் களித்து - தேனுண்டு தெவிட்டிய வண்டுபோலக் களிகூர்ந்தும், மொழிதடுமாறி - சொற்கள் தழு தழுத்தும், முன்சொன்ன எல்லாம் தரும் பித்தர் ஆவர் என்றால் - மேற்சொல்லிய இவையெல்லாவற்றையுந் தரும் பித்தாதிக் கத்தை உடையவரைப் போல்வாரென்றால், அபிராமி சமயமே நன்று - அதற் கேதுவாகிய அவ்வபிராமி தேவியினது சைவ சமயம் ஒன்றுமே உலகிற் சாலச் சிறந்தது, எ - று.

(கு - ரை.) புளகம் - மயிர் சிலிர்த்தல். ததும்பிய என் பதனைச் செய்யிய வென்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கோடலுமொன்று.

அபிராமிதேவியை விரும்பித்தொழும் அடியவர்கள் ஈண்டுக் கூறிய சிவ இன்ப மெய்ப்பாடுகளெல்லாம் எய்தப்பெறுதல் கண்கூடாகலின், அத் தேவியின் சைவசமயம் ஒன்றுமே மெய்ச் சமயம் என்பதாம்.

ஆசிரியர் தஞ்சைச் சரபோசிமன்னன் முன்னிலையில் பிறையுவா நாளை முழுநிலா நாளென மாறாகக் கூறியதற்கு ஏது

சுமார்த்தப் பகைவர்கள் கூறும் வாமசமயக் கோட்பாடன்று, இவ்வின்ப மீதூர்தலே என விளக்கியதே இச் செய்யுட் கருத்தெனக் கோடலுமாம். (கச)

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லா
மன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே.

(இ - ள்.) அழியாத குணக்குன்றே - பழைமையாகவே ஒரு சிறிதுஞ் சலியாத குணமேருவே, அருட்கடலே- அருட்கடல் வடிவானவளே, இமவான் பெற்ற கோமளமே -இமயமலையரசன் பெற்ற என்றும் இளமைச் செவ்விவாய்ந்த அபிராமிதேவியே, எனக்கு உள்ள எல்லாம் அன்றே உனது என்று அளித்து விட்டேன் - எனக்கென்றுள்ள உடல் பொருளாவி மூன்றையும் தமியேனுக்கு நீ காட்சி கொடுத்தருளிய அன்றைக்கே உன்னுடையவை என்று கொடுத்து விட்டேன், ஆதலால், நன்றே வருகினும் -நன்மையே ஏற்பட்டாலும், தீதே விளைகினும்- அல்லது தீமையே ஏற்பட்டாலும், நான் அறிவது ஒன்றேயும் இல்லை - அவற்றைக் குறித்து நான் சிந்திக்கத் தகுவது ஒன்றுயினு மில்லை, உனக்கே பரம் - என் பாரமெல்லாம் உனக்கே பாரம் ஆகும், எ - று.

(கு - ரை.) உனதென்பது பன்மையொருமை மயக்கம். "அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாமுங், குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ, வின்றோ ரிடையூ றெனக்குண்டோ வெண்டோள் முக்க ணெம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே" என்று திருவாசகங் கூறுதலுங் காண்க.

அபிராமிதேவியே! என் உடல்பொருளாவி மூன்றையும் அன்றே உனக்கென்று தமியேன் ஒப்புவித்து விட்டேனாதலால், என் பாரம் எல்லாம் உன் பாரமேயாதலின், நிகழும் நன்மை தீமைகளைக் குறித்து நான் எண்ணற்பால தொன்றேனு மில்லை, என்பதாம். (கரு)

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில் வைகு ம்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயி றன்னைத்தம்மா
லாமள வுந்தொழு வாரேழு பாருக்கு மாதிபரே.

(இ - ள்.) *அல்லி அம் தாமரைக் கோயில் வைகும் கோமள வல்லியை - அகவிதழ் பொருந்திய செந்தாமரை மலராகிய கோயிலில் வீற்றிருக்கும் என்றும் 'இளமைச் செவ்வி பொருந்திய காமவல்லி போல்பவளும், யாமளவல்லியை - யாமளவேதக் கொழுந்து போல்பவளும், ஏதம் இலாளை - ஒரு குற்றமு மில்லாதவளும், எழுது அரிய சாமள மேனிச் சகலகலா மயில் தன்னை - ஓவியம் வல்லாரும் எழுதுதற்கரிய பசுமையாகிய திரு மேனியையுடைய எல்லாக் கலைகளையு முணர்ந்த மயிலுமாகிய அபிராமிதேவியை, தம்மால் ஆம் அளவும் தொழுவார் - தம்மால் இயன்றவரையும் வழிபடும் அடியவர்கள், எழு பாருக்கும் ஆதிபர் - ஏழுலகங்களுக்கும் தலைவர்களாவார்கள், எ - று.*

(கு - ரை.) *எழுது : முதனிலைத் தொழிற் பெயர் ஆக்கச் சொற் றொக்கு நின்றது. சகலகலாமயில் - சகல கலைகளுக்கும் அதிதெய்வமாகிய சாயலானும், ஐந்துநிறங்களானும் மயிலை யொத்தவர்.*

ஈண்டு யாமளமென்றது உருத்திரயாமளத்தை. அபிராமி தேவியைத் தம்மாலியன்றவரையும் வழிபடு மடியவர்கள் பூலோக முதலிய மேலேழுலகங்களுக்கும் தலைவர்களாவார்கள் என்பதாம்.

(கக)

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதற்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே.

(இ - ள்.) *ஆதித்தன் - கதிரவனும், அம்புலி - திங்களும், அங்கி - தீயும், குபேரன் - குபேரனும், அமரர்தம் கோன்*

தேவர்கட் கரசனாகிய இந்திரனும், போதில் பிரமன் - செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற நான்முகனும், புராரி - முப்புரங்களையும் எரித்தழித்த உருத்திரமூர்த்தியும், முர அரி - முரன் என்னும் அசுரனுக்குப் பகைவராகிய திருமாலும், பொதியமுனி - பொதியமலை வாசராகிய அகத்தியமுனிவரும், காதிப் பொருபடைக் கந்தன் - கொன்று போர் செய்கின்ற வேற்படையையுடைய முருகக்கடவுளும், கணபதி - சிவ கணங்கட்குத் தலைவராகிய ஆனைமுகக் கடவுளும், காமன்முதல் - காமன் முதலாக, சாதித்த புண்ணியர் எண்ணிலர் - தம்மாற் சாதிக்கப்பட்ட நல்வினையை உடையவர் அளவிறந்தவர், தையலைப் போற்றுவர் - இவ்வபிராமிதேவியைக் கண்டு வணங்கிப் போற்றி வழிபடுவர், எ - று.

(கு - ரை.) கதிரவன் முதலிய நல்வினையாளர் எண்ணிறந்தார் தேவியை வழிபட்ட வரலாற்றைப் பெரும்பான்மை சாக்தேய நூல்களினும், சிறுபான்மை சைவநூல்களினும் காண்க.

அபிராமிதேவியைச் சீகண்டருத்திரர் முதலாக ஈண்டுக் கூறிய அனைவரும் போற்றி வழிபடுவார் எனவே, அத்தேவியினது பெருமை கூறியவாறும், நாமும் அந் நல்வினையைச் செய்து போற்றல் இன்றியமையாததெனை வற்புறுத்தியவாறு மாயின. (கஎ)

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே.

(இ - ள்.) மெய்வந்த நெஞ்சில் அல்லால் - உண்மையன்பு பொருந்திய உள்ளத்தின்கணல்லது, விரகர்தங்கள் பொய்வந்த நெஞ்சில் ஒருகாலும் புக அறியா மடப் பூங்குயிலே - கபடிகளது பொய்யன்பு பொருந்திய உள்ளத்தில் ஒரு காலத்தும் எழுந்தருள வறியாத இளமை பொருந்திய பூங்குயில் போலும் அபிராமி

தேவியே, நின் அடித்தாமரை தைவந்து சூடிய சங்கரற்கு - நின்னுடைய திருவடித்தாமரைமலர்களை வருடிப் பின் தலையிற் சூடி ஊடறீர்த்த சிவபெருமானுக்கு, கைவந்த தீயும் - பற்றிச் சுடுதற்குக் கருவியாகிய தம்முடைய திருக்கைக்கணுள்ள வேள்வித்தீயும், தலைவந்த ஆறும் - சூடுதற் கிடமாயுள்ள தலையின்கணுள்ள கங்கையாறும், எங்கே கரந்தது - அப்பொழுது எவ்விடத்தே ஒளித்துக் கொண்டன, எ - று.

(கு - ரை.) கையின்கணுள்ள தீயுந் தலையின்கணுள்ள ஆறும் முறையே திருவடிகளை வருடிப்பற்றலாகாமையும், பற்றினும் சுடுதலும், சூடக் குளிர்வதுமாய்த் தடைசெயற்பால வாயினும், அவை நிகழக் காணாமையின், எங்கே கரந்த தென்றார். கரந்ததென்னு மொருமை அத்தொழின் மேனின்றது.

அபிராமிதேவி உண்டென்பார்க் கொளிவிளக்காயும், இன்றென்பார்க்கிருளாயும் இருப்பவளாகலின், அவளை வழிபடுதற்கண் அடியவர்கட்கு இடையூறுகள் சூழ்வகையான் உளவாயினும், அவை அவரைத் தடைசெயற்பாலனவாகா, என்பதாம். (கஅ)

குயிலா யிருக்குங் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாங்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே.

(இ - ள்.) கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழை - கைலாசபதிக்கு அக்காலத்து இமயமலையரசன் தானஞ் செய்த கனவிய குழையினையுடைய அபிராமிதேவி, கடம்ப அடவி இடைக் குயிலாய் இருக்கும் - கடம்பவனத்தின்கண்ணே அதற்கேற்ப மரகதநிறக்குயிலாய் இருந்தருளுவள், வியல் இமய அசலத்து இடைக் கோல மயிலாய் இருக்கும் - இடவிதாகிய இமயமலையின்கண்ணே அதற் கேற்பப் பச்சைநிற மயிலாயிருந் தருளுவள், விசும்பில் வந்து உதித்த வெயிலாய் இருக்கும் - விண்ணின் கண்ணே அதற்கேற்பக் கடலினின்றும் வந்து தோன்றிய

பொன்னிறமுடைய இளங்கதிரவனாகவிருந்தருளுவள். கமலத்தின்மீது அன்னம் ஆம் - தாமரைப் பூவின்மீது அதற்கேற்ப வெண்ணிறம் பொருந்திய அன்னமாயிருந்தருளுவள், எ - று.

(கு - ரை.) எனவே, இத் திருக்கடவூரின்கண்ணே இதற்கேற்பக் குங்குமநிறப் புத்தமிர்த இன்ப வடிவத் தோற்றமாயிருந்தருளுவள் என்பதூஉம் பெற்றாம்.

பிறமுந்தோறும் தனித்தனி ஓரொரு நிறங்காட்டும் ஒருவகை, பட்டுச்சட்டையைப் போல அபிராமிதேவியை அடியவர் தனித்தனியே ஓரொரு நிறமாக எண்ணி வழிபடுந்தோறும் அவ்வந்நிறமாய்த் தோன்ற ஐந்து நிறங்களையுமுடையவளாய் விளங்குவள் என்பதாம்.

இனிக், கடம்பாடவியிற் குயிலாயிருக்குமென்பதற்கு ஆருதாரத் தலங்களுள்ளே துவாதசாந்தத்தலமாகிய மதுரையிற் குயிலாயிருக்குமெனவும், விசும்பில் வெயிலாயிருக்குமென்பதற்கு உள்ளத்தானமாகிய சிதம்பரத்தின்கண்ணே அறிவுக் கதிராயிருக்குமெனவும் கமலத்தின்மீ தன்னமாம் என்பதற்கு மூலாதாரத் தலமாகிய திருவாரூரின்கண்ணே அன்னமாயிருக்குமெனவும் இம் மூன்றுதாரத் தலங்களிலே தேவி வீற்றிருத்தலை விதந்து கூறியதெனினுமாம். கடம்பவனம் - மதுரை. (கக)

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ்
கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையு
முழையைப் பொருகண்ணு நெஞ்சிலெப் போது
முதிக்கின்றவே.

(இ - ள்.) குழையைத் தழுவிய கொன்றை அம் தார் கமழ் கொங்கைவல்லி - இளந்தளிர்களோடு கூடிய கொன்றைமலர் மாலையினது நறுமணங் கமழுகின்ற தனங்களையுடைய பொற்கொடிபோலும் அபிராமிதேவியினது, கழையைப் பொருத

நெடும் திருத்தோளும் - மூங்கிலை வென்ற நெடிய இரண்டு திருத் தோள்களும், கருப்பு வில்லும் - கரும்பாகிய வில்லும், விழையப் பொருதிறல் வேரி அம்பாணமும் - ஆணும்பெண்ணும் ஒருவரை யொருவர் விரும்புமாறு இருவரையும் பொருகின்ற தேன் பொருந்திய அழகிய மலர்க்கணைகளும், வெள்நகையும் - வெண்மையாகிய திருப்புன்னகையும், உழையைப் பொருகண்ணும் - மானினது மருண்ட நோக்கத்தை யொக்கும் திருக்கண்களும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்ற - என்மனத்தில் எப்பொழுதும் தோன்றிக் கொண்டிருக்கின்றன, எ - று.

இறைவரது வேறுவடிவமாகிய திருவடையாள மாலையை இறைவி அவ்விறைவராகவே கண்டு, தந் திருமார்போடணைத்த லின், கொன்றையந் தார்கமழ் கொங்கை என்றார். இவ்விறுதிச் செய்யுளின் ஈற்றுச்சீரை இந்நூன் முதற்செய்யுளின் முதற் சீரோடியைத்து அந்தாதித் தொடை நிரப்பியவாறு தெளியப் படுதலின், வருஞ்செய்யுள் நூற்பயன் கூறவந்தமை தெள்ளிதிற் றுணியப்படும்.

அபிராமிதேவியினது எண்ணமே எப்பொழுதும் என் மனத்திற் குடிகொண்டிருக்குந் தியானம் என்பதாம், (க00)

நூற் பயன்

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு
தீங்கில்லையே.

(இ - ள்.) அண்டம் எல்லாம் பூத்தாளை—எல்லா உலகங்களை யும் பெறாது பெற்றவளும், ஆத்தாளை - அதனால் உலகமாதாவா யிருப்பவளும், மாதுளம்பூ நிறத்தாளை - மாதுளம்பூ நிறத்தை யுடையவளும், புவி அடங்கக் காத்தாளை - உலக முழுவதையும்

காக்கின்றவளும், அம் குச பாச அங்குசமும் கரும்பும் அங்கை சேர்த்தாளை - அழகிய தாமரைமலரையும் கயிறு தோட்டிகளையும் கரும்பையும் அகங்கைகளிலே அணிந்தவளுமாகிய, எங்கள் அபிராம வல்லியை - எம்முடைய அபிராமிதேவியை, தொழுவார்க்கு - போற்றி வழிபடுமடியவர்களுக்கு, ஒரு தீங்கு இல்லை - வரக்கடவதொரு தீமையும் இல்லை, எ - று.

(கு - ரை.) குசம் - தாமரை: ஆகுபெயர்.

அபிராமி தேவியை இந்நூல்கொண்டு தோத்திரஞ் செய்து வழிபடும் அடியவர்களுக்கு எய்தக் கடவதொரு தீங்கேயின்மை'யின், உண்டாவனவெல்லாம் நன்மையே என்பதாம். 'தீங்கும்' என்பதன் உம்மை விகாரத்தால் தொக்கது. 'இல்லையே' என்பதில் உள்ள ஏ ஈற்றசை. (௧0௧)

அபிராமியந்தாதியுரை முற்றுப்பெற்றது.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண் : பக்க எண்]

கழகவழி வெளிவந்துள்ள

அந்தாதி நூல்கள்

கல்லாடயந்தாதி உரை

மருதூரந்தாதி உரை

திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி
(விருத்தி உரையுடன்)

பழமலையந்தாதி உரை

அந்தாதி உரை நூற்கோவை (பகுதி-1)

நான்கு அந்தாதிகள் (உரையுடன்)

பொன் வண்ணத்தந்தாதி (உரை)

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம் திருச்சி-2

தலைமை நிலையம் :
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள் :

திருநெல்வேலி-6.

மதுரை-1. கோயமுத்தூர்-1.

கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2.

அப்பர் அச்சகம், சென்னை-1.